REGISTERED AS A NEWSPAPER IN SRI LANKA
www.thinakaran.lk
/ Thinakaran.lk / ThinakaranLK
2023 மே 17 புதன்கிழமை
# தினகரன்
THINAKARAN தினகரன்
வரு. 91 இல. 115 | Wednesday 17, May, 2023 | 16 பக்கங்கள் | 50/-

## சிறுநீரக நோயாளர்கள், வயோதிபர்களுக்கான உதவிகள் தொடரும்



சிறுநீரக நோயாளர் மற்று ம் வயோதிபர்களுக்கான நிதியுதவி உள்ளிட்ட அரசாங்கத்தினால் வழங்கப்படும் பொது உதவிகள் எவ்வித குறைப்பு 06

### வடக்கு, கிழக்கில் 90 வீத காணிகள் விடுவிப்பு

## விடுவிக்கப்படாத காணிகள் விரைவில் விடுவிக்கப்படும்

### அமெரிக்க பிரதிநிதியிடம் அமைச்சர் விஜயதாச தெரிவிப்பு



வடக்கு, கிழக்கில் இராணுவத்தினர் வசமிருந்த காணிகளில் 90 வீதத்துக்கும் அதிகமான காணிகள் மக்களிடம் கையளிக்கப்பட்டுள்ளன. பல்வேறு காரணங்களால் விடுவிக்கப்படாதுள்ள காணிகளை உரியவர்களுக்கு விரைவாக பெற்றுக்கொடுக்க அரசாங்கம் விசேட கவனம் செலுத்தியுள்ளதாக நீதி அமைச்சர் விஜயதாச ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

அமெரிக்க அரச திணைக்களத்தின் தென் மற்றும் மத்திய 06

### P.S.M சார்ள்ஸ், செந்தில், லக்ஷமன் யாப்பா

## வடக்கு, கிழக்கு மற்றும் வடமேல் மாகாண ஆளுநர்களாக இன்று சத்தியப்பிரமாணம்





வட மாகாண ஆளுநராக பி.எஸ்.எம். சார்ள்ஸ், கிழக்கு மாகாண ஆளுநராக இ.தொ.கா. தலைவர் செந்தில் தொண்டமான், வட மேல் மாகாண ஆளுநராக லக்ஷ்மன் யாப்பா அபேவர்த்தன ஆகியோர் இன்று (17) புதன்கிழமை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க முன்னிலையில் பதவிப் பிரமாணம் செய்துகொள்ளவுள்ளனர்.

வடக்கு, கிழக்கு மற்றும் 06

## புலம்பெயர்ந்த இலங்கையருக்கு அரசாங்க வீடமைப்பு திட்டங்கள்

### அடுக்குமாடி குடியிருப்புகள் மற்றும் தனி வீடுகள்



புலம்பெயர் தொழிலாளர் மற்றும் வெளிநாட்டில் வாழும் இலங்கையருக்கான வீடமைப்புத் திட்டத்தை ஆரம்பிப்பதற்கான நடவடிக்கைகளை ஆரம்பிப்பதற்கு, தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சர் மனுஷ நாணயக்கார நடவடிக்கை எடுத்துள்ளார்.

இலங்கை வெளிநாட்டு வேலை வாய்ப்புப் பணியகம் மற்றும் தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையுடன் இணைந்து, இந்த வீடமைப்புத் திட்டம் 06

### 2023 சிறுபோக நெற்செய்கைக்குத் தேவையான

# 25,000 மெ.தொன் யூரியாவை அரசு இறக்குமதி செய்கிறது

### அமைச்சரவையில் அங்கீகாரம் , 50 Kg MOP உரம் 4,500 ரூபாவால் குறைப்பு




**லங்கா உரக் கம்பனி மூலம் 60 சதவீதமும், வரையறுக்கப்பட்ட கொழும்பு கொமர்ஷல் உரக்கம்பனி மூலம் 40 சதவீதமுமாக யூரியா இறக்குமதி செய்யப்படவுள்ளது**

சிறுபோக நெற்செய்கைக்கு (2023) தேவையான யூரியா உரத்தை இறக்குமதி செய்வதற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளதாக அமைச்சரவை பேச்சாளர் அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவித்தார்.

அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் செய்தியாளர் மாநாடு நேற்று தகவல் திணைக்களத்தில் நடைபெற்றது. இதன்போதே அமைச்சர் இத்தகவலைத் தெரிவித்தார். சிறுபோக நெற் செய்கைக்காக இம்முறை (2023) 25,000 மெற்றிக் தொன் யூரியாவை இறக்குமதி செய்ய வேண்டியுள்ளது.

இரண்டு அரச உரக் கம்பனிகள் மற்றும் தனியார் துறையினரிடம் தற்போதுள்ள யூரியா மற்றும் கமநல சேவைகள் நிலையங்களில் எஞ்சியுள்ள யூரியா என்பவற்றைக் கருத்திற் கொண்டே இத்தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

இதற்கமைய, லங்கா உரக் கம்பனி மூலமாக 60 சதவீதமும், வரையறுக்கப்பட்ட கொழும்பு கொமர்ஷல் உரக்கம்பனி மூலமாக 40 சதவீதமுமாக யூரியா இறக்குமதி செய்யப்படவுள்ளது.

இதற்கென, விவசாய அமைச்சர் மஹிந்த அமரவீர சமர்ப்பித்த யோசனைக்கு, அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளதாகவும் அமைச்சர் பந்துல 06

## மின்சார முச்சக்கரவண்டிகள் விரைவில் சர்வதேச சந்தைக்கு

### 07 பேர் பயணிக்கும் ஆட்டோ நேற்று அமைச்சரால் அறிமுகம்



படம்: சிந்தக குமாரசிங்க

**(லோரன்ஸ் செல்வநாயகம்)**

நாட்டுக்குத் தேவையான முச்சக்கர வண்டிகளை வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்த நிலை மாற்றமடைந்து, இலங்கையிலிருந்து சர்வதேச நாடுகளுக்கு முச்சக்கரவண்டிகளை ஏற்றுமதிசெய்யும் அளவுக்கு உற்பத்தித் துறை முன்னேற்றமடைந்துள்ளதாக போக்குவரத்து மற்றும் 06



### பெருந்தோட்டத்துறை மக்களையும் உள்வாங்கியே அஸ்வெசும திட்டம்

மனோ MPயிடம் உலக வங்கி உறுதி 03

## இராணுவத்தை அங்கீகரிக்கப்பட்ட அளவில் பேணி, பாரம்பரிய கடமைகளில் ஈடுபடுத்தல்

### USA பிரதிநிதியிடம் பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் விளக்கம்



**(ஸாதிக் ஷிஹான்)**

இலங்கை இராணுவத்தின் எண்ணிக்கையை சரியான அங்கீகரிக்கப்பட்ட அளவுக்குள் பேணி, பாரம்பரிய இராணுவக் கடமைகளில் அவர்களை ஈடுபடுத்த நடவடிக்கை எடுக்கப்படுமென பாதுகாப்பு 06

## பாராளுமன்ற பொது செயலாளராக குஷானி ரோஹணதீர நியமனம்



தலைமைப் பணியாளர் மற்றும் பாராளுமன்ற துணைப் பொதுச் செயலாளரான குஷானி ரோஹணதீர பாராளுமன்றத்தின் புதிய பொதுச் செயலாளராக நியமிக்கப்பட்டுள்ளார். அரசியலமைப்புச் சபையின் அங்கீகாரத்துடன், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, எதிர்வரும் மே மாதம் 23ஆம் திகதி முதல் அமுலுக்கு வரும் வகையில், குஷானி ரோஹணதீரவை இந்தப் பதவிக்கு நியமித்துள்ளார்.

திருமதி. ரோஹணதீர 06

### கோட்டாபய மீதான தற்கொலைத் தாக்குதல்

## 14 ஆண்டுகளின் பின் ஆரூரன் சகல குற்றச்சாட்டுகளிலிருந்தும் விடுதலை

### கொழும்பு மேல் நீதிமன்றம் தீர்ப்பு

**லோரன்ஸ் செல்வநாயகம்**

முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ பாதுகாப்புச் செயலாளராக பதவி வகித்த காலத்தில் பித்தளை சந்தி பிரதேசத்தில் இடம்பெற்ற தற்கொலை குண்டுத் தாக்குதல் தொடர்பாக சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டிருந்த சிவலிங்கம் ஆரூரன் அனைத்து குற்றச்சாட்டுகளிலிருந்தும் விடுவிக்கப்பட்டுள்ளார்.

கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி நவரத்ன மாரசிங்க 06

## கடவுச்சீட்டு வழங்கல் தாமதத்துக்கு தீர்வு

### ஓரிரு நாட்களில் முடிவுக்கு வரும்



கடவுச்சீட்டு வழங்குவதில் தற்போது நிலவும் நெரிசல் இன்னும் சில தினங்களில் முடிவுக்கு வருமென குடிவரவு, குடியகல்வு திணைக்களம் தெரிவித்துள்ளது.

ஒரு நாள் சேவையினூடாக கடவுச்சீட்டைப் பெறுவதற்கு முன்னதாக முன்பதிவு செய்தவர்களுக்கான கடவுச்சீட்டு வழங்கும் பணிகள் இன்னும் 02 நாட்களில் 06



### வடக்கில் சிறுமிகள் கடத்தல் முயற்சி நேற்று முறியடிப்பு

பொலிஸார் தீவிர விசாரணைகளில் 03

### வெளிநாட்டில் பணிபுரியும் இலங்கையருக்கு

## மின்சார வாகனங்கள் இறக்குமதிக்கான உரிமம் வழங்கல் செப். 23 வரை நீடிப்பு

### அமைச்சரவையில் விசேட அனுமதி



வெளிநாட்டில் பணிபுரியும் இலங்கையருக்கு முழுமையாக மின்சார வாகனங்களை இறக்குமதி செய்வதற்கான அனுமதிப்பத்திரம் வழங்கும் திட்டத்தை நீடிப்பதற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

இதன்படி, உரிமம் வழங்கும் திட்டம் செப்டம்பர் 23, 2023 வரை 06

## ஜனாதிபதியை நியமித்த நாம் ஏன் எதிரணியில் அமர வேண்டும்

### ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ எம்.பி கேள்வி



ஜனாதிபதியை நியமித்ததும் நாங்கள்தான். ஜனாதிபதிக்கான பெரும்பான்மையை உருவாக்கியவர்களும் நாங்கள்தான். நாம் நியமித்த ஜனாதிபதி இருக்கும்போது, எதிர்க்கட்சியில் ஏன், அமர வேண்டுமென, பாராளுமன்ற உறுப்பினர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ தெரிவித்தார்.

நீங்கள் எதிர்க்கட்சியில் அமரப்போவது உண்மையா? என ஊடகவியலாளர் ஒருவர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோவிடம் கேள்வி எழுப்பினார். இதற்குப் பதிலளிக்கையிலேயே 06

## மிருகக்காட்சிச்சாலை கட்டணங்களில் திருத்தம்

### புதிய கட்டணங்களுடன் வர்த்தமானி வெளியானது

தேசிய விலங்கியல் பூங்கா திணைக்களத்துக்கு சொந்தமான தெஹிவளை மிருகக்காட்சிச்சாலை, பின்னவலை யானைகள் சரணாலயம் மற்றும் ரிதியகம சபாரி பூங்கா ஆகியவற்றுக்கான கட்டணங்கள் திருத்தப்பட்டுள்ளன.

இது தொடர்பான வர்த்தமானி அறிவித்தல் வனவிலங்கு மற்றும் வன வளங்கள் பாதுகாப்பு அமைச்சர் பவித்ரா வன்னியாராச்சியின் கையொப்பத்துடன் வெளியிடப்பட்டுள்ளது.

இதன்படி, அனைத்து 06

### இலங்கை தூதரகத்தில் தஞ்சமடைந்த

## 32 இலங்கை பணிப்பெண்கள் குவைத்திலிருந்து நாடு திரும்பினர்



பணிப்பெண்களாக குவைத்துக்குச் சென்று அங்கு, சட்டங்களை மீறிச் சட்டவிரோதமாக தங்கியிருந்த 32 இலங்கை பெண்கள், நேற்று செவ்வாய்க்கிழமை (16) காலை 06

## இலங்கையின் முதலாவது அணுமின்நிலையம் 2032 இல்

### இலங்கை அணுசக்தி சபை தெரிவிப்பு

இலங்கையில் முதலாவது அணுமின் நிலையம் ரஷ்ய தொழில்நுட்ப உதவியுடன் 2032 ஆம் ஆண்டு நிர்மாணிக்கப்படுமென, எரிசக்தி மற்றும் போக்குவரத்து துறைசார் மேற்பார்வைக் குழுவில் இலங்கை அணுசக்தி சபை அறிவித்துள்ளது.

இலங்கை அணுசக்தி சபையின் தற்போதைய நிலைமை மற்றும் எதிர்கால நடவடிக்கைகள் தொடர்பில் கலந்துரையாடுவதற்கு வலுசக்தி மற்றும் போக்குவரத்து பற்றிய 06

## முள்ளிவாய்க்காலுக்கு வர அழைப்பு விடுக்கும் மாவை

### கண்டன அறிக்கை ஒன்றில் தெரிவிப்பு



முள்ளிவாய்க்கால் நினைவேந்தலுக்கு அனைவரும் அணிதிரள வேண்டுமென இலங்கை தமிழரசு கட்சி தலைவர் மாவை சேனாதிராஜா அழைப்பு விடுத்துள்ளார்.

நாளை மே 18 முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் தொடர்பில் அவர் வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையிலே அவர், 06



மகளிர் தினத்தை முன்னிட்டு “மற்றமை” யின் இரண்டாவது வெளியீடான தேர்ந்தெடுக்கப்பட்ட இலங்கை பெண் கவிஞர்களின் கவிதைத் தொகுப்பான சிறகுகளே ஆயுதமாக... எனும் தொகுப்பின் முதற்பிரதியினை இலக்கியப் புரவலர் ஹாஸிம் உமர் தனது இல்லத்தில் மேற்படி நூலின் தொகுப்பாசிரியர் மேமன் கவியிடமிருந்து (12) பெற்று கொண்டார். இந்த நிகழ்வில் புதிய அலை வட்டத்தின் நிறுவனர் ராதா மேத்தாவும் காணப்படுகிறார்.

## ஷாதுலிய்யா தரீக்காவின் புதிய கலீபத்துல் குலபாவாக ஸூஹ்ர் ஆலிம்



**(பேருவளை விசேட நிருபர்)**

ஷாதுலியா தரீக்காவின் இலங்கைக்கான கலீபதுல் குலபாவாக சங்கைக்குரிய சேகுநாயகத்தால் நியமிக்கப்பட்ட காலி மாவட்ட ஜெம்இய்யதுல் உலமா சபைத் தலைவரும், காலி நாவின்ன அலிய்யா அரபுக் கல்லூரி பணிப்பாளருமான உஸ்தாத் மௌலவி அல்ஹாஜ் முஹம்மத் ஸூஹூர் ஆலிம் (பாரி) அவர்களை சக கலீபாக்கள் பொன்னாடை போர்த்தி கௌரவித்தனர். இந்நிகழ்வு கடந்த 14ஆம் திகதி கொழும்பு உம்மு ஸாவியாவில் நடைபெற்றது.

இதன்போது, சீனன்கோட்டை பிரதேசத்திற்கு புதிய முகத்தமுஷ்ஷாதுலிகளின் நியமனமும் இதன்போது இடம்பெற்றது. சீனன்கோட்டை பகுதிக்கான ரயீஸுல் முகத்தமீன்களாக அல்ஹாஜ் எம்.எம் ஹம்ஸா, மௌலவி பஹ்ருத்தீன் மிஸ்பாஹி ஆகியோரும் முகத்தமுஷ் ஷாதுலிகளாக மௌலவி இம்ரான் ஹாபிஸ் (பெருகமலை மஸ்ஜித்), மௌலவி அம்ஜத் ஸாலி அஷ் ஷாதுலி (குட்டி மலை மஸ்ஜித்), அல்ஹாஜ் ரம்ஸீன் டாலின் ஹாஜி (பிடவல ஸாவியா), அல்ஹாஜ் ஏ.ரீ.எம். அரூஸ் (குமஸ்தர் லேன் ஸாவியா), மௌலவி ஆஸாத் (அஜ்வாதி) (கங்கானங்கொட ஸாவியா) ஆகியோர் இதன்போது நியமன கடிதங்களையும் பெற்றுக்கொண்டனர்.

நகர்வலம்



# அநுராதபுரம் போதனா வைத்தியசாலை புற்றுநோய் வார்ட்டில் இட நெருக்கடி

## நாளொன்றுக்கு 700 பேர் வருகை; நோயாளிகள் அசௌகரியம்

**அநுராதபுரம் மேற்கு தினகரன் நிருபர்**

அநுராதபுரம் போதனா வைத்தியசாலை புற்றுநோய் வார்ட்டில் இட நெருக்கடி காரணமாக நோயாளர்கள் பாரிய சிரமத்திற்கு உள்ளாகியுள்ளதாக நோயாளர்கள் தெரிவித்தனர் .

பொலன்னறுவை, திருகோணமலை மற்றும் புத்தளம் ஆகிய பகுதிகளைச் சேர்ந்த நீண்ட தூர நோயாளர்கள் அநுராதபுரம் போதனா வைத்தியசாலைக்கு வருவதனாலேயே இந்நிலை ஏற்பட்டுள்ளது.

நாளொன்றிற்கு 700 க்கும் மேற்பட்ட புற்றுநோயாளர்கள் வைத்தியசாலைக்கு வருகை தருவதனால் குறித்த வார்ட் தொகுதியில் பாரிய இடநெருக்கடி நிலவுகின்றது.

ஒரு கட்டிலில் மூன்று நோயாளர்கள் தங்கி சிகிச்சை பெற்று வருவதுடன் ஏனைய நோயாளர்கள் படுக்கை விருப்புக்களை விரித்து நிலத்தில் இருப்பதாகவும் நோயாளர்கள் தெரிவிக்கின்றனர்.

கதிரையில் இருந்தபடியே நோயாளிகளுக்கு சேலைன் வழங்கப்பட்டு வருகின்றன.

புற்றுநோய் வார்ட்டில் ஏற்படும் நெருக்கடிக்கு மாற்றீடாக இற்றைக்கு 16 வருடங்களுக்கு முன்னர் புற்றுநோய் வார்ட் தொகுதியை அமைப்பதற்கு நடவடிக்கை எடுத்த போதிலும் அந்த நடவடிக்கை இடைநடுவில் கைவிடப்பட்டுள்ளதாகவும் தெரியவந்துள்ளது.

மேற்படி போதனா வைத்தியசாலையில் ஏற்பட்டுள்ள நெருக்கடியினை குறைப்பதற்கு விரைவில் நடவடிக்கை எடுக்க வேண்டும் என புற்றுநோயாளர்களும் அவர்களின் பொறுப்பாளர்களும் சம்பந்தப்பட்டவர்களிடம் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

இது தொடர்பில் அனுராதபுரம் போதனா வைத்தியசாலை பணிப்பாளர் வைத்தியர் துலான் சமரவீரவிடம் வினவிய போது. நாளாந்தம் 700 கும் மேற்பட்ட நோயாளர்கள் சிகிச்சைக்காக வருகை தருகின்றனர்.கடந்த இரண்டு வருடகாலமாக புற்றுநோயாளர்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது. வார்ட்டில் உள்ள கட்டில்களை விட 60, 70 வீதம் நோயாளர்களின் எண்ணிக்கை வீதம் அதிகரித்துள்ளதாக தெரிவித்ததுடன். கடந்த காலத்தில் புற்றுநோய் வார்ட் தொகுதி ஒன்று ஆரம்பிக்கப்பட்டதுடன் அதன் பணிகள் கைவிடப்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.



கடந்த சில தினங்களாக பெய்து வரும் கடும் மழை காரணமாக அக்குரஸ்ஸ கொடபிடிய ஸாதாத் மகா வித்தியாலயம், போர்வை பள்ளிவாசல் ஆகியன நீரில் மூழ்கியிருப்பதை படங்களில் காணலாம். (படம்: வெலிகம தினகரன் நிருபர்)

## மினுவங்கொட பகுதியில்; மோ. சைக்கிள்கள் திருட்டு

**(நீர்கொழும்பு தினகரன் நிருபர்)**

அரச மற்றும் தனியார் நிறுவனங்களுக்கு முன்னால் நிறுத்தி வைக்கப்படும் மோட்டார் சைக்கிள்களை மிகவும் சூட்சுமமான முறையில் திருடிச் செல்லும் மினுவங்கொட, மெல்லகொடெல்ல பிரதேசத்தைச் சேர்ந்த 44 வயதுடைய நபரை கம்பஹா வலய குற்றப் புலனாய்வுப் பிரிவின் பொலிஸார் சந்தேகத்தின் பேரில் கைது செய்துள்ளனர். திருடப்பட்ட மோட்டார் சைக்கிள்கள் சுமார் மூன்று இலட்சம் ரூபாய் மற்றும் இரண்டு இலட்சம் ரூபாய் மதிப்புள்ளதாகும். இவற்றை மிகவும் குறைந்த விலையில் அதாவது 25 ஆயிரம் மற்றும் 30 ஆயிரம் ரூபாய்க்கு சந்தேக நபர் விற்பனை செய்து வந்துள்ளதாக தெரியவந்துள்ளது.

# வடக்கின் உதயம்

## யாழ்.பண்ணை சுற்றுவட்ட சிலை அகற்றல்; பொலிசார் தாக்கல் செய்த வழக்கு தள்ளுபடி

**யாழ். விசேட நிருபர்**



யாழ்ப்பாணம் பண்ணை சுற்றுவட்டப் பகுதியில் வைக்கப்பட்ட நாகபூசணி அம்மன் சிலையை அகற்ற அனுமதி கோரி பொலிசார் தாக்கல் செய்த வழக்கை யாழ்ப்பாணம் நீதவான் நீதிமன்றம் தள்ளுபடி செய்தது. யாழ்ப்பாணம் நீதவான் நீதிமன்றத்தில் நேற்றைய தினம் இந்த வழக்கு விசாரணைக்கு எடுக்கப்பட்ட போது குறித்த வழக்கை தொடர பொலிசாருக்கு அதிகாரம் இல்லை என கூறி வழக்கை நீதிமன்று தள்ளுபடி செய்தது.

வழக்கு தொடர்பில் பொலிஸாரின் வழக்கிடு தகைமை மற்றும் நீதிமன்றத்தின் நியாயாதிக்கம் தொடர்பில் கேள்விக்குட்படுத்தி இந்து அமைப்புக்கள் சார்பில் சட்டத்தரணி என். சிறிகாந்தா, அகில இலங்கை இந்து மாமன்றம், நல்லூர் ஆதினம் சார்பில் சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன் உட்பட பல சட்டத்தரணிகளும் முன்னிலையாகி கடந்த ஏப்ரல் 18ம் திகதி வழக்கு விசாரணையின்போது நீண்ட சமர்ப்பணங்களை முன்வைத்திருந்தனர். இந்நிலையில் குறித்த வழக்கு நேற்று விசாரணைக்காக எடுத்துக் கொண்ட போதே மன்று, வழக்கை தள்ளுபடி செய்தது.

# இரு வாகனங்களில் சிறுமிகள் கடத்தல் முயற்சி: ஒட்டுசுட்டானில் சம்பவம்

## பொலிஸார் தீவிர விசாரணை

**(ஓமந்தை விசேட நிருபர்)**

ஒட்டுசுட்டான் மாங்குளம் வீதியில் அமைந்துள்ள சின்னசாளம்பன் கிராமத்தில் சிறுமிகளை கடத்துவதற்கு மேற்கொள்ளப்பட்ட முயற்சி முறியடிக்கப்பட்டுள்ளது.

இச்சம்பவம் நேற்றுமுன்தினம் பிற்பகல் இடம்பெற்றுள்ளது.

இச்சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

முல்லைத்தீவு ஒட்டுசுட்டான் பிரதேச செயலகத்துக்குட்பட்ட சின்னசாளம்பன் கிராமத்தில் பாடசாலைக்கு சென்று வீடு திரும்பிய இரு மாணவிகளை இலக்கு வைத்தே இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது. இச்சம்பவம் குறித்து கிராமவாசி ஒருவர் தெரிவிக்கையில்,

இரு மாணவிகள் பாடசாலை முடித்து வீடு திரும்பும் போது வாகனங்கள் தம்மை பின்தொடர்ந்ததாக தெரிவித்துள்ளனர். மாணவிகள் அருகில் வந்து வாகனத்தை நிறுத்தி அந்த சிறுமிகளை தங்களுடைய வீட்டில் விட்டு செல்வதாகவும் கூறியுள்ளனர். இதன்போது வாகனத்தில் 5 பேர் இருந்துள்ளனர். இதனையடுத்து இக்குழுவினரின் நடவடிக்கைகளில் சுதாகரித்துக் கொண்ட சிறுமிகள் அங்கிருந்து தப்பித்து அருகிலுள்ள வீடொன்றுக்குள் சென்றுள்ளனர். வீட்டு உரிமையாளர்கள் அயலவர்களுக்கு இவ்விடயத்தை தெரியப்படுத்தியுள்ளனர். வாகனத்தின் நடமாட்டத்தை கிராமவாசிகள் அவதானித்ததாகவும் கிராமவாசி தெரிவித்துள்ளார்.

இச்சம்பவம் குறித்து சிறுமிகளின் பெற்றோருக்கு தகவல் வழங்கியுள்ளார். பின்னர் பொலிஸில் முறைப்பாடு வழங்கியதாகவும், இக்கடத்தல் சம்பவம் குறித்து ஒட்டுசுட்டான் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருதாகவும் கிராமவாசிகள் தெரிவித்துள்ளனர்.

## பயிற்சிப்பட்டறை

**(தலைமன்னார் விசேட நிருபர்)**

இலங்கை பத்திரிகை ஸ்தாபனம் ஏற்பாடு செய்திருந்த 'தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் மூலம் எமது உரிமைகளைப் பாதுகாப்போம்' எனும் தலைப்பில் பயிற்சிப்பட்டறையொன்று நேற்றுமுன்தினம் இடம்பெற்றது. பயிற்சிப்பட்டறை நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை (15) வவுனியா நோர்த்வே ஹோட்டலில் காலை 9 மணி தொடக்கம் மாலை 4 மணிவரை இடம்பெற்றது.

அமர்வில் பத்திரிகை ஸ்தாபனத்தின் ஆணைக்குழுவின் தலைவர் ஓய்வுபெற்ற நீதியரசர் உபாலி அபேரத்ன, ஆணையாளர்களான சட்டத்தரணி கிஷாலி பின்டோ ஜயவர்தன, சட்டத்தரணி ஜகத் லியன ஆராச்சி மற்றும் எம்.நஹியா ஆகியோர் கலந்து கொண்டனர். அத்துடன் இந்நிகழ்வில் முல்லைத்தீவு, கிளிநொச்சி, வவுனியா மற்றும் மன்னார் ஊடகவியலாளர்கள் குறிப்பிடப்பட்ட அமைப்புக்களின் பிரதிநிதிகள் என 40 பேர் கலந்து கொண்டனர்.

## வடக்கு, கிழக்கு ஒருங்கிணைப்புக் குழுவின் ஏற்பாட்டில் முள்ளிவாய்க்கால் நினைவேந்தல்

**(மன்னார் குறூப் நிருபர்)**

முள்ளிவாய்க்கால் வாரத்தை முன்னிட்டு வடக்கு கிழக்கு ஒருங்கிணைப்புக் குழுவின் ஏற்பாட்டில் 8 மாவட்டங்களில் நேற்று (16) தமிழின படுகொலை நினைவு நாள் ஆரம்பமாகியுள்ளது.

இந்நிலையில் மன்னார் மாவட்டத்தில் வடக்கு கிழக்கு ஒருங்கிணைப்புக் குழுவின் ஏற்பாட்டில் மெசிடோ நிறுவனத்தின் அனுசரணையில் நானாட்டான் மற்றும் முசலி பிரதேச செயலகப்பிரிவுகளில் தமிழின படுகொலை நினைவேந்தல்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இப்பகுதிகளில் தமிழின படுகொலை நினைவு நாள் மே18 எனும் தொனிப்பொருளில் பதாகை காட்சிப்படுத்தப்பட்டு, வெள்ளைக்கொடி மற்றும் வெள்ளை நிற தோரணங்கள் பறக்கவிடப்பட்டுள்ளது.

## மன்னார் கரிசல் கிராமத்தில் துப்பாக்கிச் சூடு– ஒருவர் காயம்

**(மன்னார் குறூப் நிருபர்)**

மன்னார் பேசாலை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கரிசல் கிராமப்பகுதியில் நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை (15) மாலை இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டு சம்பவத்தில் ஒருவர் காயமடைந்த நிலையில் மன்னார் மாவட்ட பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றார்.

துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்கானவர் பெரிய கரிசல் பகுதியைச் சேர்ந்த எம்.ஜலீல் (வயது25) என தெரியவந்துள்ளது.

இச்சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருவதாவது, பேசாலை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கரிசல் கிராமத்திலுள்ள வீடொன்றில் போதைப்பொருள் இருப்பதாக விசேட அதிரடிப்படையினருக்கு தகவல் கிடைத்ததாக தெரிவிக்கப்படுகின்றது. இதன்போது அப்பகுதிக்கு விசேட அதிரடிப்படையினர் சென்றுள்ளனர். பின்னர் இவர்கள் இருவரும் சிவில் உடையில் வீட்டுக்கு சென்றுள்ளனர்.

சோதனைகளை முன்னெடுக்க முயன்ற போது அந்த நபர் கத்தியை எடுத்து தாக்கியுள்ளார். இதனால் அவர்கள் வைத்திருந்த துப்பாக்கியால் சந்தேகநபர் மீது துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இதன்போது வயிறு மற்றும் கால் பகுதியில் காயம் ஏற்பட்டுள்ளது.

உடனடியாக சந்தேகநபர் மன்னார் மாவட்ட பொது வைத்தியசாலைக்கு கொண்டு வரப்பட்டு அதி தீவிர சிகிச்சை பிரிவில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றார்.

மேலதிக விசாரணைகளை பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.

## யாழ். நாவாந்துறையில் சிறுவர் கடத்தல் முயற்சி



**(யாழ். விசேட நிருபர்)**

யாழ்ப்பாணம் நாவாந்துறை பகுதியில் சிறுவர்களை கடத்த முயற்சித்த குற்றச்சாட்டில் நபரொருவர் மடக்கி பிடிக்கப்பட்டு யாழ்ப்பாண பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளார்.

நாவாந்துறை பகுதியில் நேற்றைய தினம் செவ்வாய்க்கிழமை காலை இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது. மக்களால் பிடித்து ஒப்படைக்கப்பட்ட நபரை பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைத்து பொலிஸார் தீவிர விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

## யாழில் குளவிக் கொட்டுக்கு இலக்காகி இளம் பெண் உயிரிழப்பு

**யாழ். விசேட நிருபர்**

யாழில் குளவிக் கொட்டுக்கு இலக்காகி இளம் பெண்ணொருவர் உயிரிழந்துள்ளார். நயினாதீவு 08ஆம் வட்டார ப குதியைச் சேர்ந்த இரண்டு பிள்ளைகளின் தாயான முகமது நிலா சபானா என்பவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

அவரை மீட்டு வைத்தியசாலைக்கு கொ ண்டு செல்லும் வழியிலேயே அவர் உயிரிழந்துள்ளார்.

## ஜனநாயக போராளிகள் கட்சியினர் இந்தியா பயணம்

**வவுனியா விசேட நிருபர்**

ஜனநாயக போராளிகள் கட்சியினர் நேற்றையதினம் இந்தியா மும்பைக்கு பயணமாகினர்.

இந்துசமுத்திர பிராந்தியத்தில் தமிழர்களின் வகிபாகமும் இந்தியாவின் பாதுகாப்பும் எனும் தலைப்பில் இடம்பெறவுள்ள கூட்டமொன்றில் பங்கேற்பதற்காகவே இவர்கள் சென்றதாக தெரிவிக்கப்படுகின்றது.

இதேவேளை கடந்த சில மாதங்களில் ஜனநாயக போராளிகள் கட்சியினர் பல தடவைகள் இந்தியாவுக்கு சென்றுவந்துள்ளனர். இதன்போது இந்தியாவின் முக்கியஸ்தர்களை சந்தித்து கலந்துரையாடியுள்ளனர்.

# முள்ளிவாய்க்கால் நினைவேந்தல்

**(புதுக்குடியிருப்பு விசேட நிருபர்)**

முல்லைத்தீவு மாவட்டத்தில் 2009 ஆம் ஆண்டு முள்ளிவாய்க்கால் போரில் உயிரிழந்தவர்களுக்கு பிதிர்கடன் செய்ய நினைவேந்தல் ஏற்பாட்டுக்குழு தீர்மானித்துள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

அகில இலங்கை சைவத்தமிழ் மன்றம் ஊடாக முள்ளிவாய்க்காலில் உயிரிழந்த மக்களுக்காக பிதிர்கடன் செய்ய அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

இதுதொடர்பில் அகில இலங்கை சைவத்தமிழ் மன்றத்தின் தலைவர் நடராசா குணரத்தினம், செயலாளர் சிவப்பிரகாசம் சுரேஸ்,செந்தமிழ் ஆகமர் அட்சகர் ஆகியோர் இணைந்து முல்லைத்தீவு ஊடக அமையத்தில் நேற்று ஊடக சந்திப்பொன்றை நடாத்தினர். இதன்போதே இவ்வழைப்பை விடுத்துள்ளனர்.

முள்ளிவாய்க்காலில் உயிரிழந்தவர்களுக்கான பிதிர்கடன் என்று சொல்லப்படும் நீர்த்தார் சடங்கினை செய்வதற்காக நிகழ்ச்சி ஏற்பாட்டாளர்கள் மூலமாக அறிவிக்கப்பட்டுள்ளது.

உயிர்நீத்த உறவுகளின் உறவுகள் தங்களின் பிதிர்கடனை செய்துகொள்வதற்காக 18.05.23 அன்று காலை 7.00 மணியில் இருந்து முள்ளிவாய்க்கால் கப்பல் வீதி கடற்கரையில் மண்டபங்கள் அமைக்கப்பட்டு பிதிர்கடன் செய்ய ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இதில் உறவுகள் அனைவரும் பிதிர்கடன் செய்யமுடியும் என அறிவிக்கப்பட்டுள்ளது. தமிழ் மறைகள் ஓதப்பட்டு 15 தமிழ் அச்சகர்களால் பிதிர்கடன் செய்யப்படவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இதுவரை பிதிர்கடன் செய்யாதவர்கள் உயிரிழந்த ஆன்மாக்களுக்கு பிதிர்கடன் செய்து உயிரிழந்த உறவுகளை திருப்திப்படுத்துமாறும் அறிவிக்கப்பட்டுள்ளது.

# போதகர் ஜெரோமின் சர்ச்சைக் கருத்து

# சிஐடி விசாரணைக்கு ஜனாதிபதி உத்தரவு

மத நல்லிணக்கத்துக்கு குந்தகம் விளைவிக்கும் வகையில் போதகர் ஜெரோம் பெர்னாண்டோ வெளியிட்ட சர்ச்சைக்குரிய கருத்து தொடர்பில், உடனடியாக விசாரணைகளை ஆரம்பிக்குமாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க குற்றப் புலனாய்வு திணைக்களத்துக்கு உத்தரவிட்டுள்ளார்.

இத்தகைய பொறுப்பற்ற கருத்துக்கள், மத முரண்பாடுகளை உருவாக்கி நாட்டின் நல்லிணக்கத்தை பாதிக்குமென்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

ஜெரோம் பெர்னாண்டோ என்ற போதகர் தனது சபைக்கு முன்பாக ஆற்றிய பிரசங்கம் தொடர்பான காணொளி ஒன்று, சமூக ஊடகங்களில் அண்மைய நாட்களில் பரவலாகப் பரப்பப்பட்டு வருகிறது.

அதில், புத்த பகவான் தொடர்பான மோசமான கருத்துக்கள் சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளது. இதற்கிடையில், போதகர் ஜெரோமை கைது செய்ய வேண்டுமென்று கோரி, புதிய பௌத்த முன்னணி என்ற அமைப்பு, கொழும்பு கோட்டையிலுள்ள குற்றப் புலனாய்வுத் திணைக்களத்திடம் முறைப்பாடு செய்துள்ளது.

போதகருக்கு எதிராக கடுமையான சட்ட நடவடிக்கை எடுக்குமாறு கோரி, பிவித்துரு ஹெல உறுமயவும் குற்றப் புலனாய்வு திணைக்களத்திடம் முறைப்பாடு செய்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# வடக்கில் சிறுமிகள் கடத்தல் முயற்சி நேற்று முறியடிப்பு

## பொலிஸார் தீவிர விசாரணைகளில்

**யாழ்.விசேட, ஓமந்தை விசேட நிருபர்கள்**

மன்னாரில் சிறுவர்கள் கடத்தல் என்ற செய்திகள் வெளியாகி இரண்டு திங்கள் கடந்துள்ள இச்சந்தர்ப்பத்தில் யாழ்..நாவாந்துறை பகுதியிலும் ஒட்டுசுட்டான் மாங்குளம் வீதியில் சின்னசாளம்பன் கிராமத்திலும் சிறுவர்கள், சிறுமிகளை கடத்தும் முயற்சிகள் முறியடிக்கப்பட்ட சம்பவங்கள் பதிவாகியுள்ளன.

யாழ்ப்பாணம் நாவாந்துறையில் சிறுமி ஒருவரை கடத்த முயன்றாரென அப்பகுதி மக்களால் நபர் ஒருவர் மடக்கி பிடிக்கப்பட்டு, யாழ். பொலிசாரிடம் ஒப்படைக்கப்பட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

நாவாந்துறை பகுதியில் நேற்றைய தினம் செவ்வாய்க்கிழமை காலை இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இதேவேளை, முல்லைத்தீவு ஒட்டுசுட்டான் சின்னசாளம்பன் கிராமத்தில் பாடசாலைக்கு சென்று வீடு திரும்பிய இரு மாணவிகளை கடத்த முயற்சி செய்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

06

# அமைச்சுப் பதவி வழங்காததால் SLPP எம்பிக்கள் அதிருப்தி

அமைச்சுப் பதவி வழங்காமல் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இழுத்தடிப்பு செய்து வருவதால் பதவிகளை எதிர்பார்த்துக் காத்திருக்கும் மொட்டுக் கட்சி எம்.பிக்கள் 10 பேர், அதிருப்தியடைந்து எதிரணி வரிசையில் அமர்வதற்குத் தீர்மானித்துள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

எதிரணி வரிசையில் அமர்ந்தாலும் மொட்டுக் கட்சி உறுப்பினர்களாகவே செயற்படுவதாகவும், அரசாங்க தரப்பு எம்.பிக்களின் கூட்டங்களில் பங்கேற்பதில்லை என்றும் இவர்கள் தீர்மானித்திருப்பதாகவும் தெரிய வருகிறது.

ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதியானது முதல் இந்தப் பிரச்சினை இருந்து வருகின்றது. மொட்டுக் கட்சியின் தேசிய அமைப்பாளர் பஸில் ராஜபக்ச, 10 பேர் கொண்ட பெயர்ப்பட்டியலை ரணிலிடம் ஒப்படைத்து அவர்களுக்கு அமைச்சுப் பதவிகள் வழங்குமாறு கேட்டிருந்தார். பல மாதங்களாகியும் இக்கோரிக்கை நிறைவேற்றப்படாது இழுத்தடிப்புச் செய்யப்படுகிறது.இதனால்,அதிருப்தியுற்ற இவர்களே இம்முடிவுக்கு வந்துள்ளனர்.

# பொலிஸ் ஆணைக்குழுவின் புதிய தலைவராக லலித் ஏக்கநாயக்க நியமனம்

தேசிய பொலிஸ் ஆணைக்குழுவின் தலைவராக ஓய்வுபெற்ற உயர் நீதிமன்ற நீதிபதி லலித் ஏக்கநாயக்க நியமிக்கப்பட்டுள்ளதாக ஜனாதிபதி ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது. இதேவேளை,

தேசிய பொலிஸ் ஆணைக்குழுவின் உறுப்பினர்களையும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நியமித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# பெருந்தோட்டத்துறை மக்களையும் உள்வாங்கியே அஸ்வெசும திட்டம்

## மனோ MPயிடம் உலக வங்கி உறுதி



“முன்னைய சமுர்த்தி திட்டத்தில் பெருந்தோட்ட மக்களை சேர்த்துகொள்வதில் குறைபாடு நிலவியதாக நாம் அறிந்துள்ளோம். இது சமுர்த்தி அல்ல. இந்த அஸ்வெசும திட்டம், உலக வங்கி உதவியுடனான நலிவுற்ற மக்களுக்கான மாதாந்த கொடுப்பனவு திட்டமாகும். பெருந்தோட்ட குடும்பங்களுக்கு நியாயமான வாய்ப்புகளை வழங்காமல், இத்திட்டதை நாம் முன்னெடுக்க மாட்டோம்” என்ற உறுதிமொழியை உலக வங்கியின் இலங்கைக்கான பணிப்பாளர் பாரிஸ் ஹடாட் செர்வோஸ் உறுதியளித்துள்ளார்.

மனோ கணேசன் எம்பி தலைமையிலான தமிழ் முற்போக்கு கூட்டணி குழுவிடம் அவர் தெரிவித்ததாக அவர் மனோ கணேசன் எம்பி தெரிவித்தார். அவருடன் தமுகூ நுவரெலியா எம்பி உதயகுமார், கண்டி எம்பி வேலுகுமார் மற்றும் மலையக சிவில் சமூக செயற்பாட்டாளர் கௌதம் பாலசந்திரன்

06

# தாய்லாந்து நாட்டுடன் இருதரப்பு உறவை வலுப்படுத்த கலந்துரையாடல்

இலங்கைக்கான தாய்லாந்துத் தூதுவர் போஜ் ஹார்ன்போல் சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்த்தனவை பாராளுமன்றத்தில் அண்மையில் சந்தித்தார்.

பாராளுமன்றத்தில் நடைபெற்ற இந்தச் சந்திப்பில் இரு நாடுகளுக்குமிடையிலான இரு தரப்பு உறவுகளை வலுப்படுத்துவது தொடர்பில் கலந்துரையாடப்பட்டது. இலங்கை – தாய்லாந்து பாராளுமன்ற நட்புறவுச் சங்கத்தை புதுப்பிப்பது தொடர்பிலும் கவனம் செலுத்தப்பட்டது.

பௌத்த நாடுகளான தாய்லாந்து மற்றும் இலங்கை பௌத்த விவகாரங்கள் தொடர்பான உறவுகளை மேம்படுத்த எதிர்பார்ப்பதாகவும், வணக்கத்துக்குரிய சோம்தேஜ் அரிய வோசோகதாயன் தேரரின் 96ஆவது

06


# இலங்கை வங்கி

1968ஆம் ஆண்டு 34ஆம் இலக்கச் சட்டத்தாலும் 1974ஆம் ஆண்டு 10ஆம் இலக்க அதிகாரச்சட்டத்தாலும் திருத்தப்பட்டவாறு இலங்கை வங்கிக் கட்டளைச் சட்டத்தின் (397ஆம் அத்தியாயம்) 21ஆம் பிரிவின் கீழ் வெளியிடப்படும் அறிவித்தல்.

2022.03.09 ஆம் திகதியன்று இடம்பெற்ற கூட்டமொன்றில் இவ்வங்கிப் பணிப்பாளர் சபை பிரத்தியேகமாகவும் ஏகமனதாகவும் தீர்மானித்ததாவது:

1. பிரசித்த நொத்தாரிசு ஆர்.டி.எஸ்.கே. நரசிங்ஹ அத்தாட்சிப்படுத்திய 2018.04.20ஆந் திகதியிட்ட 78ஆம் இலக்க சட்டுமுறியின் பேரில் முதலாவது கடன் வசதி மீது 2022.12.27ஆந் திகதி வரையான வட்டியும் முதலுமாக 6,545,461.36 ரூபாயும் (ஆறு மில்லியன் ஐந்நூற்று நாற்பத்து ஐயாயிரத்து நானூற்று அறுபத்தொரு ரூபாய் முப்பத்தாறு சதம்) அத்துடன் 2022.12.28ஆந் திகதியிலிருந்து கொடுப்பனவுத் திகதி வரை 5,000,000.00 ரூபாய் (ஐந்து மில்லியன் ரூபாய்) நிலுவை முதல் மீதி ஆண்டுக்குப் பதினொன்று தசம் ஐந்து (11.5%) என்ற வீதத்திலான மேலதிக வட்டியும், இரண்டாவது கடன் வசதி மீது 2022.12.27ஆந் திகதி வரையான வட்டியும் முதலுமாக 5,110,948.47 ரூபாயும் (ஐந்து மில்லியன் நூற்று பத்தாயிரத்து தொள்ளாயிரத்து நாற்பத்தெட்டு ரூபாய் நாற்பத்தேழு சதம்) அத்துடன் 2022.12.28ஆந் திகதியிலிருந்து கொடுப்பனவுத் திகதி வரை 3,941,500.00 ரூபாய் (மூன்று மில்லியன் தொள்ளாயிரத்து நாற்பத்தோராயிரத்து ஐந்நூறு ரூபாய்) நிலுவை முதல் மீது ஆண்டுக்கு எட்டு தசம் பூச்சியம் மூன்று (08.03%) என்ற வீதத்திலான மேலதிக வட்டியும், மூன்றாவது கடன் வசதி மீது 2022.12.27ஆந் திகதி வரையான வட்டியும் முதலுமாக 1,666,564.77 ரூபாயும் (ஒரு மில்லியன் அறுநூற்று அறுபத்தாறாயிரத்து ஐந்நூற்று அறுபத்து நான்கு ரூபாய் எழுபத்தேழு சதம்) அத்துடன் 2022.12.28ஆந் திகதியிலிருந்து கொடுப்பனவுத் திகதி வரை 1,237,533.47 ரூபாய் (ஒரு மில்லியன் இருநூற்று முப்பத்தேழாயிரத்து ஐந்நூற்று முப்பத்து மூன்று ரூபாய் நாற்பத்தேழு சதம்) நிலுவை முதல் மீது ஆண்டுக்குப் பதினொன்று தசம் ஐந்து (11.5%) என்ற வீதத்திலான மேலதிக வட்டியும் இல.33, மரதன்கடவல வீதி, கெக்கிராவை எனும் முகவரியைச் சேர்ந்த திருமதி.ரனசிங்ஹ ஆரச்சிகே அனுஜா தீப்தி என்கின்ற ரனசிங்ஹ ஆரச்சிலாகே அனுஜா தீப்தி (ஏக உரிமையாளர் “க்ரோன் பிரின்டெஸ்”) என்பவரிடமிருந்து வங்கிக்கு நிலுவையாக உள்ளது.

2. பிரசித்த நொத்தாரிசு ஆர்.டி.எஸ்.கே. நரசிங்ஹ அத்தாட்சிப்படுத்திய 2018.04.20ஆந் திகதியிட்ட 78ஆம் இலக்க சட்டுமுறியின் பேரில் பெற்றுக்கொண்ட முதலாவது கடன் வசதியின் 6,545,461.36 ரூபாயையும் (ஆறு மில்லியன் ஐந்நூற்று நாற்பத்தையாயிரத்து நானூற்று அறுபத்தொரு ரூபாய் முப்பத்தாறு சதம்), இரண்டாவது கடன் வசதியின் 5,110,948.47 ரூபாயையும் (ஐந்து மில்லியன் நூற்று பத்தாயிரத்து தொள்ளாயிரத்து நாற்பத்தெட்டு ரூபாய் நாற்பத்தேழு சதம்), மூன்றாவது கடன் வசதியின் 1,666,564.77 ரூபாயையும் (ஒரு மில்லியன் அறுநூற்று அறுபத்தாறாயிரத்து ஐந்நூற்று அறுபத்து நான்கு ரூபாய் எழுபத்தேழு சதம்) அத்துடன் 2022.12.28ஆந் திகதியிலிருந்து விற்பனைத் திகதி வரையிலான மேற்குறிப்பிட்ட வட்டியையும் இலங்கை வங்கிக் கட்டளைச் சட்டத்தின் 26ஆம் பிரிவின் கீழ் அறவிட வேண்டிய செலவுகள் மற்றும் பணங்களையும் அறவிடும் பொருட்டு இலங்கை வங்கிக் கட்டளைச் சட்டத்தின் 19ஆம் பிரிவு (397ஆம் அத்தியாயம்) மற்றும் அதன் திருத்தங்களுக்கமைய கீழுள்ள அட்டவணையில் முழுமையாக விபரிக்கப்பட்டுள்ள இலங்கை வங்கிக்கு ஈடுவைத்த சொத்தை பகிரங்க ஏலத்தில் விற்பதற்கு இல.182/3(50/3) விஹார மாவத்தை கொலன்னாவை என்னும் முகவரியைச் சேர்ந்த ரீ அன்ட் எச் ஒக்ஷன் ஏலநிறுவனத்தின் ஏலதாரர் திரு.எம்.எச்.ரீ.தூசித்த கருணாரத்னவுக்கும் இலங்கை வங்கிக் கட்டளைச்சட்டத்தின் 21ஆம் பிரிவிற்கமைய இத்தீர்மானத்தின் அறிவித்தலை வெளியிடுவதற்கு இலங்கை வங்கி கெக்கிராவை கிளையின் முகாமையாளருக்கும் இத்தால் அனுமதியும் அதிகாரமும் வழங்கப்படுகின்றது.

**மேற்குறிப்பிட்ட அட்டவணை**

1. வடமத்திய மாகாணம், அனுராதபுரம் மாவட்டம், கெக்கிராவை பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட, கெக்கிராவை பிரதேச செயலக எல்லைகளுள், கலகம் கோரளை தெற்கு, இலக்கம் 620 – புகையிரத நகர் கிராம அலுவலர் பிரிவில் (பனிக்கன்குளம) புகையிரத நகரில் அமைந்துள்ளதும் ‘கொட இடம’ என்றழைக்கப்படும் காணியின் உரிமம் பெற்ற நில அளவையாளர் ஜீ.எம்.கே. தென்னகோன் தயாரித்த 2014.12.31 ஆந் திகதியிட்ட 2014/609ஆம் இலக்க வரைபடத்தில் விபரிக்கப்பட்டுள்ளதும் பிரிக்கப்பட்டு எல்லை நிர்ணயிக்கப்பட்ட துண்டு 02 என அடையாளமிடப்பட்ட காணித்துண்டு வடக்கில் 2014/609ஆம் இலக்க வரைபடத்தில் துண்டு 1 இனையும், கிழக்கில் வீதியையும் (RDA) அனுராதபுர பிரதான வீதி ஒதுக்கம் தெற்கில் என்சிநோனா என்பவரின் காணியையும் மேற்கில் எஸ்.எம்.பியதிஸ்ஸ என்பவரின் காணியையும் எல்லைகளாகக் கொண்டுள்ளது. இக்காணித்துண்டானது மரங்கள், தோட்டங்கள் மற்றும் அங்குள்ள அனைத்துடனும் ஒரு ரூட் மற்றும் பதினேழு தசம் ஒன்பது பேர்ச்சுகள் (ஏ0.ரு1.பேர்17.9) அல்லது பூச்சியம் தசம் ஒன்று நான்கு ஆறு நான்கு ஹெக்டேயர்கள் (0.1464 ஹெக்டேயர்கள்) பரப்பளவுடனும் L.D.O.R 9/95 எனும் இலக்கத்தின் கீழ் அனுராதபுரம் காணிப்பதிவகத்தில் பதியப்பட்டுள்ளது.

உரிமம் பெற்ற நில அளவையாளர் ஜீ.எம்.கே. தென்னகோன் தயாரித்த 2017.11.18 ஆந் திகதியிட்ட 2514ஆம் இலக்க அண்மைய வரைபடத்தின்படி குறித்த காணியானது பின்வருமாறு விபரிக்கப்படுகிறது.

மேற்குறிப்பிட்ட பனிக்கன்குளம கிராமத்தில் அமைந்துள்ள ‘கொட இடம’ என்றழைக்கப்படும் காணியின் உரிமம் பெற்ற நில அளவையாளர் ஜீ.எம்.கே. தென்னகோன் தயாரித்த 2017.11.18ஆந் திகதியிட்ட 2514ஆம் இலக்க வரைபடத்தில் விபரிக்கப்பட்டுள்ளதும் பிரிக்கப்பட்டு எல்லை நிர்ணயிக்கப்பட்ட துண்டு 01 என அடையாளமிடப்பட்ட காணித்துண்டு வடக்கில் 2014/609ஆம் இலக்க வரைபடத்தில் துண்டு1 இனையும், கிழக்கில் வீதியையும் (RDA) தெற்கில் என்சிநோனா என்பவரின் காணியையும் மேற்கில் எஸ்.எம்.பியதிஸ்ஸ என்பவரின் காணியையும் எல்லைகளாகக் கொண்டுள்ளது. இத்துண்டு 01ஆனது மரங்கள், தோட்டங்கள், மற்றும் அங்குள்ள அனைத்துடனும் ஒரு ரூட் மற்றும் பதினேழு தசம் ஒன்பது பேர்ச்சுகள் (ஏ0.ரு1.பே17.9) அல்லது பூச்சியம் தசம் ஒன்று நான்கு ஆறு நான்கு ஹெக்டேயர்கள் (0.1464 ஹெக்டேயர்கள்) பரப்பளவைக் கொண்டுள்ளது.

**மேற்குறிப்பிட்ட இரண்டாவது அட்டவணை**

ஒதுக்கங்கள்

1. இக்காணியில் அல்லது அதற்கு மேலுள்ள கனிமங்கள் (இவ்வனுமதியில் விலைமதிப்பற்ற கல் எனக் குறிப்பிடப்படும்) அனைத்தினதும் உரிமையும் அத்தகையவற்றை தோண்டுவதற்கும், தேடுவதற்கும், அங்கு பணியாற்றுவதற்கும் மற்றும் எடுத்துச் செல்வதற்குமான உரிமையும் அரசுக்கே உரியதாகும்.
2. காணி உரிமையாளருக்கு காணிமீதுள்ள உரிமையானது இவ்வனுமதித் திகதியில் தற்போதுள்ள எந்தவொரு வழியுரிமைக்கும் அல்லது பிற சேவக உரிமைக்கும் உட்பட்டதாகும்.

நிபந்தனைகள்:

1. 1/4 ஏக்கர் மேட்டுநிலம் 1 ½ ஏக்கர்கள் நீர்பாசன நிலம் போன்ற இங்குக் குறிப்பிடப்பட்டுள்ள துணைப்பிரிவின் அலகினை விட பரப்பளவில் குறைவான இக்காணியின் பிரிக்கப்பட்ட பங்கொன்றினை உரிமையாளர் விற்பனை செய்யலாகாது.
2. உரிமையாளர் இங்கு குறிப்பிடப்பட்டுள்ள குறைந்தபட்சப் பகுதியைவிடக் குறைவான பங்கின் பிரிக்கப்படாத ¼ ஏக்கர் பங்கினை விற்பனை செய்யக்கூடாது.
3. நிபந்தனை 1இல் குறிப்பிடப்பட்டுள்ள துணைப்பிரிவின் அலகினை விட பரப்பளவில் குறைவான இக்காணியின் பிரிக்கப்பட்ட பங்கொன்றிற்கு எவ்வொரு நபரும் உரிமையாளராக முடியாது.
4. நிபந்தனை 2 இல் குறிப்பிடப்பட்டுள்ள இக்காணியின் குறைந்தபட்சப் பகுதியை விடக் குறைவான பிரிக்கப்படாத பங்கொன்றிற்கு எந்தவொரு நபரும் உரிமையாளராக முடியாது.
5. இக்காணியோ அல்லது அதன் எந்தவொரு பகுதியோ நீர்ப்பாய்ச்சத்தகு பிரதேசமாகவிருப்பின் அல்லது ஏற்கனவே கட்டுமானத்தின்போது கட்டப்பட்ட அல்லது இனிமேல் கட்டப்படவிருக்கும் நீர்ப்பாசனப் பணியின்போது நீர்ப்பாசனத்திற்கு உட்படுமாயின், உரிமையாளர் நீர்ப்பாசனப் பகுதியைப் பொறுத்து நீர்ப்பாசனக் கட்டளை (அத்தியாயம் 453) ஏற்பாடுகளுக்கும் அதன் கீழ் உருவாக்கப்பட்ட விதிகளுக்கும் இணங்க வேண்டும்.
6. அரச முகவரின் எழுத்துப்பூர்வமான அனுமதியையும் உரிய அதிகார சபையிடம் உரிமத்தினையும் பெற்றாலே ஒழிய உரிமையாளர் இக்காணியில் அல்லது அதன் உள்ளிருக்கும் கனிமங்களைத் தோண்டவோ, தேடவோ, எடுக்கவோ, உபயோகப்படுத்தவோ, விற்கவோ இல்லையெனில் அப்புறப்படுத்தவோ கூடாது.
7. பிரதேச செயலாளரின் எழுத்துமூலமான முன் அனுமதியின்றி காணியினது அல்லது அதன் எந்தவொருப் பகுதியினதும் இயல்பினை மாற்றக்கூடாது.

இலங்கை வங்கிப் பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி
பெயர்- திருமதி.எச்.எஸ்.டபிள்யு. சிறிவர்தன
கிளை முகாமையாளர்
இலங்கை வங்கி கெக்கிராவை கிளை
திகதி- 10.01.2023

1975 BOC
www.boc.lk

A (lka) Fitch ரேட்டிங், AAA- Brand Finance ரேட்டிங்.
இலங்கை வங்கியானது இலங்கை மத்திய வங்கியினால் அனுமதிக்கப்பட்டு, கண்காணிக்கப்படும் ஓர் வர்த்தக வங்கியாகும்.

இலங்கை வங்கி
BOC
தேசத்தின் வங்கியாளர்

தினகரன்
THINAKARAN
35, டி.ஆர்.விஜயவர்தன மாவத்தை, கொழும்பு - 10
தபால் பெட்டி இலக்கம் : 834
தொலைபேசி இலக்கம் : 2429429, 2429272, 2429279
பெக்ஸ் : 2429270, 2429329, விளம்பர முகாமையாளர் : 2429321

சுபகிருது வருடம் சித்திரை மாதம் 5ஆம் நாள் திங்கட்கிழமை
ஹிஜ்ரி வருடம் 1442 ஷவ்வால் பிறை 22




# உணவு உற்பத்தி பயிர்ச்செய்கையில் இளைஞரை ஊக்குவிப்பது அவசியம்

இலங்கை ஆரம்ப காலம் முதல் விவசாயப் பாரம்பரியத்தைக் கொண்ட நாடாகும். இந்து சமுத்திரத்தில் நாலாபுறமும் கடலால் சூழப்பட்டுள்ள இந்நாடு, பெருந்தோட்டச் செய்கைக்கும் உணவு உற்பத்தி பயிர்ச்செய்கைக்கும் தேவையான மண் வளத்தையும் சீதோஷண நிலையும் தன்னகத்தே கொண்டிருக்கிறது.

நாட்டின் மொத்த நிலப்பரப்பில் 46 சதவீதமான நிலம், அதாவது 2.3 மில்லியன் ஹெக்டேயர் நிலப்பரப்பு விவசாயச் செய்கைக்கு உகந்தது. அவற்றில் 80 வீதமானவை பெருந்தோட்டப் பயிர்ச்செய்கை சாராத நிலப்பரப்பாக உள்ளது.

இதன் பயனாகவே ஒரு காலத்தில் உணவுத் தானியங்களை ஏற்றுமதி செய்யக்கூடிய நாடாக விளங்கியுள்ள இந்நாடு, தெற்காசியாவின் தானியக் களஞ்சியமாகவும் திகழ்ந்துள்ளது.

இவ்வாறான பராம்பரியத்தைக் கொண்டுள்ள இந்நாட்டின் உணவு உற்பத்தி பயிர்ச்செய்கையின் இருப்பு எதிர்காலத்தில் பெரும் சவாலுக்கு உள்ளாகக் கூடிய அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளது.

ஏனென்றால் விவசாய நிலங்கள் நிரப்பப்பட்டு கட்டடங்கள் எழுப்பப்படுதல், இளைஞர்கள் மத்தியில் அரச தொழில்கள் மீது அதிக ஆர்வம், அரச தொழில் வாய்ப்புக்களில் ஈடுபடுவதைக் கௌரவமாகக் கருதுதல், உணவு உற்பத்தி விவசாயப் பொருட்களுக்கு உரிய பெறுமதியோ, சந்தை வாய்ப்போ கிடைக்கப் பெறாமை, விவசாயத்தில் ஈடுபடுபவர்களுக்கு உரிய அந்தஸ்து கிடைக்கப் பெறாமை என்பன காரணமாக உணவு உற்பத்தி விவசாயப் பயிர்ச்செய்கையில் ஈடுபடுவதில் இருந்து இளம் பராயத்தினர் பெரிதும் தூரமாகியுள்ளனர்.

தற்போது 708,000 ஹெக்டேயர் நிலப்பரப்பில் தான் நெற்செய்கை முன்னெடுக்கப்படுகிறது. மரக்கறிச் செய்கைக்கு பயன்படுத்தப்பட்டுள்ள நிலப்பரப்பு இதனை விடவும் குறைவாகவே உள்ளது.

இந்நிலைமை எதிர்காலத்தில் உணவு உற்பத்தி பயிர்ச்செய்கையில் பெரிதும் வீழ்ச்சி ஏற்படக் கூடிய அச்சுறுத்தலை ஏற்படுத்தியுள்ளது. இதற்கு இப்பயிர்ச்செய்கையில் ஈடுபடுவதற்கான ஆட்கள் இல்லாத நிலை தோற்றம் பெறுவது பிரதானமானதாக இருக்கும். இது ஆரோக்கியமான நிலைமை அல்ல. விவசாயத்திற்குத் தேவையான சீதோஷண நிலையையும் மண்வளத்தையும் கொண்டிருந்தும் பயிர்ச்செய்கையில் ஈடுபட ஆளணி இல்லாத நிலை ஏற்படுவது என்பது எவ்விதத்திலும் ஏற்றுக்கொள்ள முடியாததாகும்.

இந்த நிலையில்தான் இந்நாட்டின் உணவு உற்பத்தி பயிர்ச்செய்கை துறையில் இளம் பராயத்தினரை ஊக்குவிக்க வேண்டிய தேவை பரவலாக உணரப்பட்டுள்ளது. கடந்த சில தசாப்தங்களாக உணவு உற்பத்தி பயிர்ச்செய்கையில் இளம் பராயத்தினர் ஊக்குவிக்கப்படாததே இந்நிலைக்கு முக்கிய காரணமாகும். இந்த நிலைமை தொடர இடமளிக்கலாகாது. அது எதிர்கால உணவு உற்பத்தி பயிர்ச்செய்கையில் பெரிதும் பாதிப்பை ஏற்படுத்தி விடக்கூடியதாக அமைந்துவிடும்.

இது தொடர்பில் விஷேட கவனம் செலுத்தியுள்ள விவசாய அமைச்சர் மஹிந்த அமரவீர, வேலை வாய்ப்பில்லாத இளைஞர்களை விவசாய நடவடிக்கைகளில் ஊக்குவிப்பதற்கான நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளார். இத்திட்டத்தின் கீழ் விவசாய மற்றும் விவசாயம் சார்ந்த தொழில்களில் ஆர்வமுள்ள இளைஞர்களுக்கு குறைந்த வட்டி வீதத்தில் கடனுதவி வழங்கப்பட உள்ளது. இத்திட்டத்தின் முதற்கட்டமாக ஹம்பாந்தோட்டை மாவட்டத்தைச் சேர்ந்த தெரிவு செய்யப்பட்டுள்ள 50 இளைஞர்களுக்கு 10 தொடக்கம் 20 இலட்சம் ரூபா வரை 6.5 வீத வட்டி வீதத்தில் கடனுதவி பெற்றுக்கொடுக்கப்பட உள்ளது என்று குறிப்பிட்டுள்ளார். உண்மையில் இது வரவேற்கப்பட வேண்டிய வேலைத்திட்டமாகும். அதுவே இளைஞர்கள் உள்ளிட்ட அனைத்து தரப்பினரதும் அபிப்பிராயமாகும்.

ஆகவே நாட்டினதும் மக்களதும் நலன்களை முன்னிலைப்படுத்தி உணவு உற்பத்தி பயிர்ச்செய்கையில் இளம் பராயத்தினரை மேலும் ஊக்குவிக்க வேண்டும். இதன் நிமித்தம் விரிவான வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்பட வேண்டும். அவர்களது உற்பத்திகளுக்கு உரிய சந்தை வாய்ப்பைப் பெற்றுக் கொடுப்பதோடு, அவர்களது பயிர்ச்செய்கைகள் இயற்கை அழிவுகளுக்கு உள்ளாவதைக் கட்டுப்படுத்துவதற்கு தேவையான ஒத்துழைப்புக்களை நல்கவும் வேண்டும். அவற்றை உறுதிப்படுத்தவும் தவறக்கூடாது. இவற்றின் ஊடாக வேலைவாய்ப்பை எதிர்பார்த்துள்ள பெருந்தொகையான இளம் பராயத்தினருக்கு இத்தொழில் துறையில் தொழில் வாய்ப்புக்களைப் பெற்றுக்கொடுக்கக் கூடியதாக இருக்கும். அத்தோடு உள்நாட்டு மொத்த தேசிய உற்பத்தியும் மேலும் அதிகரிக்கும்.

இவ்வாறான ஏற்பாடுகள் உணவு உற்பத்தி பயிர்ச்செய்கையின் பக்கம் இளம்பராயத்தினரை மேலும் ஊக்குவிக்க வழிவகுப்பதோடு உணவுப் பாதுகாப்பையும் போஷாக்கையும் உறுதிப்படுத்திக் கொள்ளவும் துணைபுரியும்.

editor.tkn@lakehouse.lk

# அனைத்து மருத்துவர்களுக்கும் முன்மாதிரியாக வாழ்ந்து காட்டியவர் டொக்டர் சிவகுமாரன்

## மக்கள் போற்றும் மனிதநேயன் மறைந்தார்

"பெற்ற தாயும் பிறந்த பொன்னாடும் நற்றவ வானினும் நனி சிறந்தனவே" என்பதற்கிணங்க மக்களின் காவலனாக, பிணி தீர்க்கும் வைத்தியராக யாழ் போதனா வைத்தியசாலையில் நீண்ட காலமாக மருத்துவப் பணியாற்றிய உன்னத மனிதரே சபாரட்ணம் சிவகுமாரன் எனும் பெருந்தகை.

அல்லல்படும் நோயாளிகளுக்குச் சிகிச்சை அளிக்கும் பணியில் தன்னை முழுமையாக அர்ப்பணித்து பணி செய்த புகழ்பூத்த மருத்துவ நிபுணர் சபாரட்ணம் சிவகுமாரன் 14.05.23 அன்று கொழும்பில் காலமானார்.

யாழ் போதனா வைத்தியசாலையில் பேரிடர் சூழ்ந்த காலப்பகுதியில் சிறப்பாக கடமையாற்றிய வைத்திய நிபுணர் சிவகுமாரன், பல தலைசிறந்த வைத்தியர்களை உருவாக்கியவர் என்ற பெருமைக்குரியவர்.

போர்க் காலத்தில் பல மருத்துவர்கள் புலம்பெயர்ந்து வெளிநாடுகளுக்கும், தென்பகுதிக்கும் இடம்பெயர்ந்து வேளையிலும், தாய்நாட்டிற்கு மிகுந்த அர்ப்பணிப்புடன் சேவையாற்றிய சிறந்த வைத்தியர், சிரேஷ்ட ஆலோசகராக வைத்தியர் சபாரட்ணம் சிவகுமாரன் திகழ்கின்றார்.



அவரது தலைமைத்துவம், புத்திசாலித்தனம், இராஜதந்திரம், நேர்மை, தொழில்முறை, நேரக்கடமை, இரக்கம், உதவி செய்யும் மனப்பாங்கு ஆகியவை அவரது அணிகலன்களாகும். அவரது வழியைப் பின்பற்றி பலர் சிறந்த வைத்தியராக பணிபுரிகின்றனர்.

மருத்துவபீட மாணவர்களால் 'கடவுள்' என செல்லமாக அழைக்கப்பட்ட மறைந்த டொக்டர் சிவகுமாரன் அவர்கள் பல தலைசிறந்த வைத்தியர்களை உருவாக்கிய ஆசானும் ஆவார். கடமை, ஒழுக்கம், நோயாளி முதன்மையானவர் என பல சீரிய பண்புகளை கற்பித்தவர். அர்ப்பணிப்பு மிக்க சேவையாற்றிய அவர் யாழ் இந்துக் கல்லூரியின் முன்னாள் அதிபர் அமரர் என். சபாரட்ணம் அவர்களின் புத்திரன் ஆவார்.

மருத்துவத்தில் மட்டுமின்றி ஆன்மீகத்திலும் ஈடுபாடு கொண்ட அவர், தனது சொந்த ஊரான காரைநகர் வரலாற்று சிறப்புமிக்க ஈழத்து சிதம்பரம் கோவில் வருடாந்த திருவிழாக்களில் கலந்து கொள்வதற்காக பல தடவை சென்றுள்ளார். காரைநகரில் உள்ள இந்த பெரிய கோவிலின் அறங்காவலரின் முக்கிய ஆலோசகர்களில் ஒருவராக இருந்து, தனது நாட்டு மக்களிடையே சிறந்த ஆன்மீகத்தையும் அமைதியையும் ஏற்படுத்தும் வகையில் இந்த ஆலயத்தை அபிவிருத்தி செய்ய அவர் பல பணிகளை மிகவும் விரும்பி ஆற்றியுள்ளார்.

மனிதர் கடவுளாக முடியும் என்பதை மருத்துவர் சிவகுமாரன் வாழ்ந்து காட்டியிருக்கிறார். சிவபெருமானின் உண்மையான பக்தனாக வாழ்ந்து, தனது அதிகபட்ச ஆற்றலை நமது தேசத்திற்கு வழங்கி மகுடமாக வாழ்ந்தார்.

ஆதரவற்ற நோயாளருக்குத் தனது சொந்தச் செலவில் அத்தியாவசிய பால்மா வாங்கிக் கொடுத்துப் பராமரித்தவர். நோயாளருக்குச் சேவை செய்வதைத் தனது விருப்பமான பணியாகச் செய்த அவர், பல மருத்துவர்கள் தமிழ்ப் பிரதேசங்களை விட்டு வெளியேறிய கடினமான காலங்களில் எங்குமே இடம் பெயராமல் வடக்கில் மக்களுக்காகப் பணியாற்றியுள்ளார். நல்ல இதயம் கொண்ட ஒரு அற்புதமான மருத்துவரான அவர் இலங்கையின் பல இன மக்களால் பெரிதும் மதிக்கப்பட்டார்.

– ஐங்கரன் விக்கினேஸ்வரா

# குற்றச்செயல்களை அறிக்கையிடும் ஊடகவியலாளர்கள் மிகுந்த பொறுப்புணர்வுடன் நடந்து கொள்ள வேண்டும்

## –ஊடகப் பயிற்சிப் பட்டறையில் நீதி அமைச்சர் விஜயதாச ராஜபக்ஷ

ஒரு நாட்டின் 4 ஆவது சக்தியாக ஊடகவியலாளர்கள் திகழ்கின்றனர். நாடுகளின் ஆட்சியை தீர்மானிப்பவர்களாகவும் ஊடகவியலாளர்கள் உள்ளனர் என்று நீதி மற்றும் சிறைச்சாலைகள் அமைச்சர் கலாநிதி விஜயதாச ராஜபக்ஷ தெரிவித்தார்.

நீதிமன்ற வழக்குகளை ஊடக அறிக்கை செய்யும் கொழும்பு மாவட்ட ஊடகவியலாளர்கள் 75 பேருக்கு நீதியமைச்சு ஊடகப் பயிற்சிப் பட்டறை ஒன்றை நேற்றுமுன்தினம் 15 ஆம் திகதி கொழும்பு பண்டாரநாயக்க மாநாட்டு மண்டபத்தில் ஏற்பாடு செய்திருந்தது. இந்நிகழ்வின் ஆரம்ப வைபவத்தில் நீதி அமைச்சர் விஜயதாச ராஜபக்ஷ கலந்து கொண்டு பேசுகையில் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து தெரிவித்ததாவது:

ஊடகவியலாளர்கள், கலைஞர்களும் கூட சட்டத்தை இயற்றுவதற்கு உதவுகின்றனர். ஒரு பிரதேசத்தில் இடம்பெறும் குற்றச் செயல்களை ஊடகவியலாளர்கள் செய்தியாக மக்கள் மத்தியில் கொண்டு செல்லும்போது ஓர் ஒழுங்கு, ஊடக தர்மம் இருக்கிறது.



உதாரணமாக கடந்த வாரம் இடம்பெற்ற குற்றச் சம்பவத்தில் மரணமான பெண்களின் படங்களை நீங்கள் ஊடகங்களில் பிரசுரிக்கின்றீர்கள். தொலைக்காட்சியிலும் காட்சிப்படுத்துகிறார்கள். அது மட்டுமல்ல சந்தேகநபரை நீதிமன்றில் ஆஜர்படுத்தும் போது அவருக்கு குற்றவாளியாகத் தீர்ப்பு வழங்கி விடுகின்றனர்.

அத்துடன் அவரது புகைப்படத்தையும் பிரசுரித்து விட்டு அவரது பெயர், முகவரி, குடும்பம், இனம் எல்லாவற்றையும் பாலியல் குற்றம் துஷ்பிரயோகம் என்ற வசனங்களையும் எழுதுகின்றீர்கள். .

ஆனால் களுத்துறை சம்பவத்தில் வைத்திய அறிக்கையில் அவர் சிறுமி துஷ்பிரயோகம் செய்யப்படவில்லை. இதனால் குற்றவாளியின் குடும்பம் மிகவும் மனஉளைச்சலுக்கு ஆளாகின்றது. உறவினர்கள் பாடசாலை படிப்பை கைவிட்ட சம்பவமும் நிகழ்ந்துள்ளது.. ஆகவே ஊடகவியலாளர்கள் தமது பிரதேசத்தில் நடைபெறும் குற்றங்களை செய்தியிடும் போது மிகக் கவனமாக இருத்தல் வேண்டும். அதற்கு தண்டனை உண்டு. குற்றவாளியின் இனம், பெயர், பிரதேசம் இங்கு பிரசுரிக்க தேவையில்லை".

சட்ட விரிவுரையாளர் கலாநிதி பிரதீபா மகாதேவா உரையாற்றுகையில் "ஊடகவியலாளர்கள் முகநூலில் எழுதுவது போன்று நீங்கள் எழுத முடியாது. இந்த நாட்டில் ஸ்மார்ட்போன் யார் யாருக்கெல்லாம் இருக்கிறதோ அவர்கள் எல்லாம் ஊடகவியலாளராகி விட்டார்கள்.

உங்களுக்கு வருடா வருடம் அரச தகவல் திணைக்களம் அடையாள அட்டையும் வழங்குகிறது. முகநூல்களில் சமூக வலைத்தளங்கள் எழுதுவது போன்ற நீங்கள் செயல்பட முடியாது" என்றார்.

(அஷ்ரப் ஏ சமத்)

# இறக்காமம் நடமாடும் சேவையினால் மக்களின் நீண்ட கால பிரச்சினைகளுக்கு உடனடித் தீர்வு

அம்பாறை மாவட்டம் இறக்காமம் பிரதேச செயலகப் பிரிவில் வசிக்கும் சுமார் 20,000 மக்களின் நீண்ட காலப் பிரச்சினைகளுக்கு தீர்வை பெற்றுக் கொடுக்கும் நோக்கத்துடன் இறக்காமம் பிரதேச செயலாளர் எம். எஸ். எம். ரஸ்வானின் நெறிப்படுத்தலில் இறக்காமம் பிரதேச செயலகத்தில் நடமாடும் சேவை அண்மையில் நடத்தப்பட்டது.

மக்கள் தங்களுக்கான சேவைகளை இலகுவாக பெற்றுக் கொள்ளும் வகையில் காணி, சமுர்த்தி, தேசிய அடையாள அட்டை, வீடமைப்பு, கல்வி, வெளிநாட்டு கடவுச்சீட்டு, பொலிஸ் முறைப்பாட்டுப் பிரதி, பிறப்பு இறப்பு பதிவு, சிறுவர் மற்றும் மகளிர் பிரிவு, ஆயுர்வேத வைத்திய பிரிவு, நீர்ப்பாசனம், மின்சாரம் என 50 இற்கும் மேற்பட்ட திணைக்களங்கள் மற்றும் நிறுவனங்களின் அதிகாரிகளைக் கொண்ட பிரிவுகள் நடமாடும் சேவையில் காணப்பட்டன.

பிரதேச மக்கள் மிகவும் ஆர்வத்துடன் பங்கேற்றனர். 200 இற்கும் மேற்பட்ட பிரச்சினைகளில் சுமார் 65 வீதமானவற்றுக்கு உடனுக்குடன் தீர்வு காணப்பட்டது. ஏனைய 35 சதவீதமான பிரச்சினைகளை மேல் நடவடிக்கைகளுக்காக மாவட்ட செயலாளர் முதல் ஜனாதிபதி செயலகம் வரை அனுப்பி வைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

தீர்க்க முடியாத பிரச்சினைகளை இதில் கலந்துகொண்ட அதிகாரிகள் தங்கள் திணைக்களங்கள் மற்றும் நிறுவனங்கள் சார்ந்த உயர் அதிகாரிகளோடு அவ்வப்போது தொலைபேசியில் தொடர்பு கொண்டு தீர்வு காண முயற்சித்ததை அங்கு அவதானிக்க முடிந்தது.

இதன் போது சுமார் 43 வருட காலமாக இழுபறி நிலையிலிருந்த 115 வீடுகளைக் கொண்ட இறக்காமம் அமீர் அலி மாதிரிக் கிராமத்தின் பிரச்சினை கவனத்தில் எடுத்துக் கொள்ளப்பட்டது. மக்கள் தங்களுக்கான காணி உறுதிப்பத்திரத்தை பெற்றுக் கொள்ளும் வகையில் அம்பாறை மாவட்ட வீடமைப்பு அதிகார சபைக்கு பணம் செலுத்தி 30 வருட காலமாகியும் அந்த மக்களுக்கான காணி உறுதிப் பத்திரம் இதுவரை வழங்கப்படவில்லை என்ற கோரிக்கையை அமீர் அலிபுர கிராம மக்களின் முக்கியஸ்தர்கள் இதன்போது சுட்டிக் காட்டினர்.

இதனையடுத்து உடனடியாக ஜனாதிபதி செயலகத்துடன் தொடர்பு கொண்ட வீடமைப்பு உயர் அதிகாரிகள் இன்னும் மூன்று மாதங்களுக்குள் காணிஉறுதிப் பத்திரத்தைப் பெற்றுத் தருவதாக உறுதியளித்துள்ளார்கள்.

இந்நடமாடும் சேவையின் ஊடாக தங்களுக்கு அதிக பயன்கள் கிடைத்ததாக இப்பிரதேச மக்கள் தெரிவித்தனர்.

இந்நடமாடும் சேவையின் போது சமுர்த்தி பாதுகாப்பு நிதியத்தின் ஊடாக சமுர்த்தி உதவி பெறும் இரண்டு குடும்பங்களுக்கு மரண இழப்பீட்டுக்கான கொடுப்பனவாக தலா இருபதாயிரம் ரூபா வீதம் நாற்பதாயிரம் ரூபாவுக்கான காசோலையும், லொத்தர் தெரிவின் போதான இரண்டு இலட்சம் ரூபா நிதியுதவியும் வழங்கி வைக்கப்பட்டதுடன், காணி அனுமதிப்பத்திரமும், பாவனையாளர்கள் அதிகார சபையினால் மக்களை விழிப்பூட்டும் பாவனையாளர்கள் பாதுகாப்புக்கான வழிகாட்டி நூல்களும் வழங்கி வைக்கப்பட்டன.

இந்நிகழ்வில் இறக்காமம் பிரதேச செயலக உதவித்திட்டமிடல் பணிப்பாளர் கே. எல். ஹம்ஸார், கணக்காளர் ஏ.எல்.எப் ரிம்ஸியா, இறக்காமம் ஆயுர்வேத வைத்தியசாலையின் பொறுப்பதிகாரி டொக்டர் கே. எல். எம். நக்பர், பிரதேச செயலக பிரதம முகாமைத்துவ உதவி யாளர் ஏ.ஜீ. நிஸம்மா, சமுர்த்தி தலைமப்பீட முகாமையாளர் எம். ஸீ. எம். தஸ்லீம், சமுர்த்தி வங்கி முகாமையாளர் டி. கே. ரஹ்மதுல்லாஹ், சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் உள்ளிட்ட பல்வேறு துறை சார்ந்த உயர் அதிகாரிகளும் கலந்து கொண்டனர்.







– இறக்காமம் தினகரன் நிருபர்
(ஜௌபர் ஏ. கரீம்)

# மாற்றத்திற்கான முன்னணியினால் மாணவர்களுக்கு உபகரணங்கள்

மாற்றத்திற்கான முன்னணியினால் ஏற்பாடு செய்யப்பட்ட, மாணவர்களுக்கு பாடசாலை உபகரணங்கள் வழங்கும் நிகழ்வு முன்னணியின் செயலாளரும், ஊடகவியலாளருமான றிசாத் ஏ. காதர் தலைமையில் அட்டாளைச்சேனை சேவா நிவாச இல்லத்தில் அண்மையில் நடைபெற்றது.

கோணாவத்தை கிராமத்தில் நீண்ட காலமாக கிராம சேவகராக இருந்து பிறிதொரு கிராம சேவகர் பிரிவுக்கு இடமாற்றலாகிச் சென்ற எம். ஐ. அஸ்வர், அந்நூர் மகாவித்தியாலயத்தில் இருந்து கொழும்பு பல்கலைக்கழகத்தின் சட்டத் துறைக்கு தெரிவு செய்யப்பட்டு 4 வருட உயர்கல்வியை முடித்து சட்ட இளமாணியாக வெளியேறிய சுமையா ஹிபாஸ் ஆகியோருக்கான கௌரவம் முன்னணியினரால் வழங்கி வைக்கப்பட்டது.

தெரிவு செய்யப்பட்ட ஒரு தொகுதி பாடசாலை மாணவர்களுக்கான கற்றல் உபகரணங்கள் நிகழ்வில் கலந்து கொண்ட அதிதிகளினால் வழங்கி வைக்கப்பட்டன.

நிகழ்வுக்கு பிரதம அதிதியாக MJS குழுமத்தின் நிறைவேற்றுப் பணிப்பாளர் எம்.ஐ.எம்.ஜரீன் கலந்து கொண்டதுடன், விசேட அதிதியாக உத்தியோகத்தர் எம்.அஸ்லம் சஜா பங்கேற்றார். மாற்றத்திற்கான முண்ணனியின் உபதலைவர்களான கே.அப்துல் ஹமீட், எஸ்.எம். இத்ரீஸ் மற்றும் உயர்பீட உறுப்பினரும், பிரண்ஸ் விளையாட்டுக் கழகத்தின் தலைவருமான றிம்சான் புகாரி ஆகியோருடன் பழைய மாணவர் சங்க உறுப்பினரும் சமூக ஆர்வலருமான குத்தூஸ் கியாஸ், அல் நஜா விளையாட்டுக் கழக உயர்பீட உறுப்பினரும் சுகாதார உதவியாளருமான எம். ஏ. நிசார் ஆகியோருடன் பலரும் கலந்து சிறப்பித்திருந்தனர்.

– எம்.எப்.நவாஸ்
(திராய்க்கேணி தினகரன் நிருபர்)







# நிவ்பர்க் பெருந்தோட்ட காணிகள் ஆக்கிரமிப்பு; சம்பவ இடத்துக்கு வடிவேல் சுரேஷ் எம்.பி விஜயம்



**(ஊவா சுழற்சி நிருபர்)**

நிவ்பர்க் தோட்டக் காணியை அத்துமீறி கைப்பற்றுவதற்கு வெளியார் முயற்சித்துவருவதாக குற்றம்சாட்டப்பட்டுள்ளது. இதனால் ஏற்பட்ட கைகலப்பில் சிலர் காயமடைந்ததுடன் சம்பவம் தொடர்பில் பெருந்தோட்ட தொழிலாளர்கள் சிலரும் கைது செய்யப்பட்டுள்ளனர். இதனையடுத்து பாராளுமன்ற உறுப்பினரும் இலங்கை தேசிய தோட்ட தொழிலாளர் சங்கத்தின் பொதுச்செயலாளருமான வடிவேல் சுரேஷ் அண்மையில் அப்பகுதிக்கு கள விஜயமொன்றை மேற்கொண்டிருந்தார். இவ்விடயம் தொடர்பில் ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த வடிவேல் சுரேஷ்,

அரசாங்கம் பெருந்தோட்ட நிர்வாகத்துக்கு குத்தகைக்கு வழங்கிய காணிகளை அத்துமீறி வெளியாட்கள் ஆக்கிரமித்துள்ளனர். அரசாங்கம் ஹப்புகஸ்தன பெருந்தோட்ட நிர்வாகத்துக்கு குத்தகைக்கு வழங்கிய காணியை ப்ரவுன்ஸ் கம்பனி உப குத்தகைக்கு எடுத்திருப்பதும் பாரிய குற்றமாகும்.

தோட்ட முகாமைத்துவத்தை கையாளும் பொறிமுறையும் சட்டபூர்வமாக தவறான ஒரு நடைமுறையாகும்.

எனவே இதுதொடர்பில் சட்ட நடவடிக்கை எடுக்கத் தவறின் பாரிய தொழிற்சங்க போராட்டம் முன்னெடுக்கப்படும் என நான் எச்சரிக்கை விடுக்கின்றேன் என தெரிவித்தார்.

மாத்தளை

## நீர்வழங்கல் வடிகாலமைப்பு சபை காரியாலயத்தில் நீர் கட்டணங்களை செலுத்த வசதிகள் இல்லை

**உக்குவளை நிருபர்**

மாத்தளை நீர்வழங்கல் வடிகாலமைப்பு சபையின் பிரதான காரியாலயத்தில் பொது மக்கள் நீர் கட்டணங்களை செலுத்திட எந்தவித வசதிகளும் இல்லாமைக் காரணமாக பொது மக்கள் பாரிய அசௌகரியங்களுக்கு முகங்கொடுத்துவருவதாக தெரிவிக்கின்றனர்.

பல கோடி ரூபா செலவில் நிர்மாணிக்கப்பட்டு கடந்த 2022 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் ஆரம்பிக்கப்பட்ட மாத்தளை நீர் வழங்கல் வடிகாலமைப்பு சபையின் பிரதான காரியாலயத்தில் நீர் கட்டணங்களை செலுத்திட உரிய வசதிகள் இல்லையென பொதுமக்கள் தெரிவிக்கின்றனர். நீர் வழங்கல் வடிகாலமைப்பு சபை காரியாலயம் இல்லாத காரணத்தினால் கடந்த 2022 ஆம் ஆண்டு வரை மாத்தளை நகரில் பல இடங்களில் மாறி மாறி காரியாலயத்தை நடத்தி சென்றனர்.

இறுதியாக மாத்தளை தர்மபால மாவத்தையில் பிரபல அரசியல்வாதியொருவரின் பிரமாண்டமான கட்டடமொன்றை வாடகைக்கு பெற்று வடிகாலமைப்பு சபையின் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டது. அதன்பின்னர் மாத்தளை கூம்பியாங்கொடை வீதியில் தனியாருக்கு சொந்தமான சுமார் 50 பேர்ச்சஸ் காணியை பல கோடி ரூபாவுக்கு கொள்வனவு செய்து நீர்வழங்கல் வடிகாலமைப்பு சபைக்கு தேவையான சகல வசதிகளையும் கொண்ட கட்டடமொன்று நிர்மாணிக்கப்பட்டது.

இருப்பினும் பொது மக்களின் நீர்க்கட்டணங்களை செலுத்துவதற்கு இப்பாரிய கட்டடத்தில் எவ்வித வசதிகளும் செய்யப்படவில்லையென பொது மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.



இரத்தினபுரி உதவும் கரங்கள் அமைப்பினால் ஏற்பாடு செய்யப்பட்ட அன்னையர் தின நிகழ்வுகள் பொகவந்தலாவை சீனக்கொலை DP டிவிசன் பொது விளையாட்டு மைதானத்தில் நடைபெற்றது. பாரம்பரிய கலை கலாசார விளையாட்டு போட்டிகளுடன் மிக கோலாகலமாக இடம்பெற்றது. இந்நிகழ்வில் கலந்துக்கொண்ட அனைவருக்கும் பெறுமதிமிக்க பரிசுபொருட்கள் வழங்கிவைக்கப்பட்டன.

(படம்: தலவாக்கலை குறூப் நிருபர்)

## மாத்தளை ஆமினா மகளிர் பாடசாலை கட்டடத்துக்கு மறைந்த மு.கா தலைவர் அஷ்ரப் பெயர்

**(மாத்தளை சுழற்சி நிருபர்)**

மாத்தளை ஆமினா மகளிர் தேசிய பாடசாலை வளாகத்தில் அமைந்துள்ள புதிய கட்டடமொன்றுக்கு ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸின் மறைந்த தலைவர் மர்ஹூம் அஷ்ரப்பின் பெயர் சூட்டப்பட்டுள்ளது. பாடசாலை அதிபர், பாடசாலை அபிவிருத்திக் குழுவினருக்கு தமது நன்றியை தெரிவித்துக் கொள்வதாக ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சி மாத்தளை மாவட்ட அமைப்பாளர் அய்யூப் ஹசன் தெரிவித்துள்ளார்.

ஆமினா மகளிர் தேசிய பாடசாலைக்கு அருகில் கடந்த 1993ஆம் ஆண்டு அரசாங்கத்தினால் பொலிஸ் விடுதி அமைக்கும் பணிகள் முன்னெடுக்கப்பட்டது. இதனால் பாடசாலையில் கல்வி பயிலும் மாணவிகளுக்கு ஏற்படவுள்ள பாதக நிலைமைகளை கருத்திற் கொண்டு பாடசாலை நிர்வாகம், சமூக அமைப்புக்கள் ஒன்றிணைந்து இவ்விடயம் தொடர்பாக மறைந்த அமைச்சர் அஷ்ரபின் கவனத்திற்கு கொண்டு வந்தனர். அவர் இவ்விடயத்தில் கூடிய கவனம் செலுத்தி அவரின் பாரிய முயற்சியினால் பொலிஸ் விடுதி அமைக்கும் பணிகள் தடுத்து நிறுத்தப்பட்டதோடு இந்த காணி 1995 ஆம் ஆண்டு சட்டரீதியாக ஆமினா பாடசாலைக்கு பெற்றுக் கொடுக்கப்பட்டது.

இதன் ஞாபகார்த்தமாக பாடசாலை வளாகத்துடன் இணைக்கப்பட்டுள்ள இக்காணியில் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட கட்டடமொன்றுக்கு பாடசாலையில் அண்மையில் இடம்பெற்ற வைர விழாவின் போது மர்ஹூம் அஷ்ரப் என்ற பெயர் சூட்டப்பட்டது.


# இலங்கை வங்கி

## ஏல விற்பனை அறிவித்தல்

**1968ஆம் ஆண்டு 34ஆம் இலக்கச்சட்டத்தாலும் 1974ஆம் ஆண்டு 10ஆம் இலக்க அதிகாரச்சட்டத்தாலும் திருத்தப்பட்டவாறு இலங்கை வங்கி கட்டளைச்சட்டம் 22 ஆம் பிரிவின் (397ஆம் அத்தியாயம்) கீழ் வெளியிடப்படும் அறிவித்தல்.**

**கடன் தொடர்பு இலக்கம். 77761861**

1. தியபெதும, இஹகுலுவெவ, இல.63/41 எனும் முகவரியைச் சேர்ந்த திரு.மெகொடஹ கெதர பாலித்த செனரத் நந்தசிறியின் ஈடுவைத்த ஆதனத்தின் விற்பனை.

இலங்கை வங்கிக் கட்டளைச் சட்டத்தின் 19ஆம் பிரிவின் கீழ் இலங்கை வங்கிப் பணிப்பாளர்கள் சபை எடுத்த தீர்மானத்துக்கமைய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் 2018.03.29ஆம் திகதிய 2065ஆம் இலக்க வர்த்தமானியிலும் 2018.03.20ஆம் திகதி செவ்வாய்கிழமை தினமின, தினகரன் மற்றும் டெய்லி நியூஸ் ஆகிய பத்திரிகைகளிலும் வெளியிடப்பட்ட அறிவித்தல்களுக்கமைய நிலுவை முதலையும் விற்பனைத் திகதி வரை வருமதியாக உள்ள வட்டியையும் மேற்குறிப்பிட்ட கட்டளைச்சட்டத்தின் பிரிவு 26இன் கீழ் அறவிட வேண்டிய செலவு மற்றும் பணங்களையும் அறவிடும் பொருட்டு இங்கு கீழ் அட்டவணையில் விபரிக்கப்பட்டுள்ள சொத்தையும் நிலமனையையும் 2023.06.15ஆம் திகதி வியாழக்கிழமை மு.ப.11.00 மணிக்கு தியபெதும கிளையில் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்வாரென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

கட்டளைச்சட்டம் 21 ஆம் பிரிவின் அறிவித்தல் பிரசுரிக்கப்பட்ட பின்னர் வாடிக்கையாளர் ரூ.1,201,301.59/- வைப்பிலிட்டார் என்பதை கருத்தில் கொள்ளவும்.

மேற்குறிப்பிட்ட முதலாவது அட்டவணை

வடமத்திய மாகாணம் பொலன்னறுவ மாவட்டம் எலஹர பிரதேச செயலாளர் பிரிவில் மற்றும் பிரதேசசபை எல்லைகளுள் சிங்ஹல பற்று 27ஆம் இலக்க இஹகுலுவெவ கிராம உத்தியோகத்தர் பிரிவில் இஹகுலுவெவ கிராமத்தில் அமைந்த "எஸ்டேற் லாண்ட்" என அழைக்கப்படும் காணி அளவையாளர் நாயகம் அதிகாரமளித்த F.C.P P0.97ல் விபரித்த துண்டு 151 என அடையாளமிட்ட பிரிக்கப்பட்ட குறித்த காணித்துண்டு வடக்கில் காணித்துண்டு இலக்கங்கள் 150 மற்றும் 21ம், கிழக்கில் துண்டு இல.35ம், தெற்கில் துண்டு இல.45 மற்றும் 150ம், மேற்கில் துண்டு இல.150 எல்லைகளாகக் கொண்டு ஹெக்டெயர்கள் பூச்சியம் தசம் ஏழு இரண்டு பூச்சியம் ஆறு (ஹெக்டெயர்கள் 0.7206) விஸ்தீரணமுடைய காணியும் அங்கு அமைந்துள்ள மரங்கள், பயிர்கள், கட்டிடங்கள் மற்றும் சகலதும் ஆகும். இது பொலன்னறுவ மாவட்ட காணிப்பதிவகத்தில் LDOE/10/65ல் பதிவுசெய்யப்பட்டுள்ளது

மேற்கூறிய காணி உத்தரவு பெற்ற நில அளவையாளர் W.A. பிரேமரத்ன தயாரித்த 03.10.2014 திகதியிட்ட அண்மைய அளவை வரைபடம் இல.J/544/14ல் பின்வருமாறு விபரிக்கப்பட்டுள்ளது.

மேற்கூறிய இஹகுலுவெவ கிராமத்தில் அமைந்த "இஹகுலுவெவ" என அழைக்கப்படும் காணி உத்தரவுபெற்ற நில அளவையாளர் W.A. பிரேமரத்ன தயாரித்த 03.10.2014 திகதியிட்ட வரைபடம் இல.J/544/14ல் விபரித்த துண்டு 1 என அடையாளமிட்ட பிரிக்கப்பட்ட குறித்த காணித்துண்டு வடக்கில் F.C.P P0.97ல் துண்டு இல.150 மற்றும் 21ம், கிழக்கில் F.C.P P0.97ல் துண்டு இல.35ம், தெற்கில் F.C.P P0.97ல் துண்டு இல.45 மற்றும் 150ம், மேற்கில் F.C.P P0.97ல் துண்டு இல.150ம் எல்லைகளாகக் கொண்டு ஹெக்டெயர்கள் பூச்சியம் தசம் ஏழு இரண்டு பூச்சியம் ஆறு (ஹெக்டெயர்கள் 0.7206) அல்லது ஒரு ஏக்கர் மூன்று ரூட் நான்கு தசம் ஒன்பது பேர்ச்சுகள் (ஏ1.ரூ3.பே4.9) விஸ்தீரணமுடைய காணியும் அங்கு அமைந்துள்ள மரங்கள், பயிர்கள், கட்டிடங்கள் மற்றும் சகலதும் ஆகும். காணியை வங்கிக்கு ஈடுவைக்க இலங்கை மகாவெலி அதிகாரசபையின் குடியிருப்பு செயற்திட்ட முகாமையாளரின் 2014/10/21 திகதியிட்ட அவரது தொடர்பு இல.RPM/G/L/AT/08-111ன் கீழ் முன் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.

மேற்குறிப்பிட்ட இரண்டாவது அட்டவணை
ஒதுக்கங்கள்

01. வைத்திருப்பவையின்பேரில் அல்லது கனிப்பொருள்கள் எல்லாவற்றுக்கும் (இவ் வழங்கலில் பெறுமதி வாய்ந்த கற்கள் உட்பட) உரிமையும் எவையேனும் அத்தகைய கனிப்பொருள்களை அகற்றுவதற்கோ, தேடி எடுப்பதற்கோ, வேலைசெய்வதற்கோ அகழ்வதற்கோ வைத்திருக்கும் உரிமை அரசாங்கத்துக்கு ஒதுக்கப்பட்டுள்ளது.
02. இவ் வழங்கல் திகதியில் தற்சமயம் வைத்திருப்பவை மீதான வழி உரிமை அல்லது ஏனைய பணிகளுக்கு சொந்தக்காரருக்கான உரித்து உரிமை.

நிபந்தனைகள்:

01. உரிமையாளர் ஹெக்ரயர்/~~ஏக்கர்கள்—~~மேட்டுநிலம் 0.100, ஹெக்ரயர்/~~ஏக்கர்கள்~~ நீர்ப்பாசனக் காணி ......... என இங்கு குறித்த விஸ்தீரணத்தில் உப பிரிவின் அலகை விட காணப்படும் பிரிக்கப்பட்டதொரு பாகத்தை விற்பனை செய்யலாகாது.
02. இங்கு குறித்த ஆகக்குறைந்த பகுதி 0.100 ஹெக்டெயர்கள் / ஏக்கர்கள் தவிர்ந்த வைத்திருக்கும் பிரிக்கப்படாத பங்கை உரிமையாளர் விற்பனை செய்யலாகாது.
03. நிபந்தனை 1ல் குறிப்பிட்ட உப பிரிவின் அலகு தவிர்ந்த விஸ்தீரணத்தில் வைத்திருக்கும் பிரிக்கப்பட்ட குறைந்த பாகத்துக்கு எந்தவொரு நபரும் உரிமையாளராக முடியாது.
04. நிபந்தனை 2ல் குறிப்பிட்ட ஆகக்குறைந்த பகுதி தவிர்ந்த வைத்திருப்பவைகளின் பிரிக்கப்படாத பங்குக்கு ஒருவரும் உரிமையாளராக முடியாது.
05. வைத்திருப்பவை அல்லது நீர்ப்பாசன வசதியளிக்கக்கூடிய எவையேனும் பகுதி அல்லது இதன் பின்பு நீர்ப்பாசன கட்டளைச்சட்டத்தின் முன் ஏற்பாடுகளின் (அத்தியாயம் 453) கீழ் மற்றும் அதன் கீழான எவையேனும் விதிகளுடன் நீர்ப்பாசன பிரதேசம் தொடர்பில் நிர்மாண வேலையில் ஏற்கனவே நிர்மாணிக்கப்பட்ட எவையேனும் நீர்ப்பாசன வேலை அல்லது இதன் பின்பு நிர்மாணிக்கப்படுபவை தொடர்பில் உரிமையாளர் இணங்க வேண்டும்.
06. அரசாங்க அதிபர் மற்றும் சம்பந்தப்பட்ட அதிகார சபையிடமிருந்து எழுத்தில் அனுமதி பெற்றால் அன்றி எந்தவொரு கனிப்பொருளை தேடவோ, அகழ்வதற்கோ, அல்லது காணியை விற்பதற்கோ உரிமையாளருக்கு முடியாது.
07. பிரதேச செயலாளரின் எழுத்து மூலமான முன் அனுமதி இன்றி இதன் எந்தவொரு பகுதியையும் வைத்திருக்க ஏற்பாடு இல்லை.

விலைகூறுவோர் மேற்குறித்த ஆதனத்துடன் தொடர்புபட்ட உரித்துறுதிகளையும் பிற தொடர்புபட்ட ஆவணங்களையும் 2023.06.08 ஆம் திகதியில் இருந்து பார்வையிட முடியும். தொலைபேசி - 027 205 0016

இலங்கை வங்கி பணிப்பாளர் சபை கட்டளைப்படி.
திருமதி. ஜி.பீ.டீ.சீ சமரசிங்ஹ
முகாமையாளர்
இலங்கை வங்கி
தியபெதும
திகதி : 18 ஏப்ரல் 2023

1975 BOC
A (lka) Fitch தரப்படுத்தல், AAA - Brand Finance தரப்படுத்தல்

இலங்கை வங்கி
BOC
தேசத்தின் வங்கியாளர்

## சிறுநீரக...

மின்றி தொடருமென நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய தெரிவித்துள்ளார்.

'அஸ்வெசும' திட்டத்தின் கீழ் நன்மைகளைப் பெறுபவர்களுக்கு ஒரு குறிப்பிட்ட காலம் குறிப்பிடப்பட்டிருந்தாலும், ஊனமுற்றோர், சிறுநீரக நோயாளிகள் மற்றும் முதியோர் பயனாளிகள் போன்ற பிரிவுகளின் கீழ் நிதி உதவிக்காக தேர்ந்தெடுக்கப்பட்ட 5,20,000 க்கும் அதிகமான மக்களுக்கு வழமை போன்று அரசாங்கம் தொடர்ந்து நிதி உதவி வழங்கும் என்றும் அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

பொது வைபவம் ஒன்றின் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே அமைச்சர் இதனை தெரிவித்தார்.

## கடவுச்சீட்டு வழங்கல்...

நிறைவடையுமென குடிவரவு குடியகழ்வு கட்டுப்பாட்டாளர் நாயகம் ஹர்ஷ இலுக்பிட்டிய தெரிவித்துள்ளார்.

நெரிசலின்றி வழமை போன்று கடவுச்சீட்டுகளை தமது அலுவலகத்தினால் வழங்க முடியுமெனவும் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

## மிருகக்காட்சிசாலை...

உயிரியல் பூங்காக்களிலுமுள்ள மாமிச உண்ணி விலங்குகளுக்கு உணவு வழங்குவதற்கான கட்டணம் 200 ரூபாவாக அதிகரிக்கப்பட்டுள்ளது. தெஹிவளை மிருகக்காட்சிசாலையில் அனகோண்டாக்களுடன் படம் எடுப்பதற்கான கட்டணம் 500 ரூபாவாக அதிகரிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, ரிதியகம சபாரி பூங்காவில் குளிரூட்டப்பட்ட பஸ்களின் கட்டணம் 150 ரூபாவாகவும், ரிதியகம சபாரி பூங்காவில் குளிரூட்டப்படாத பஸ்களின் கட்டணம் 100 ரூபாவாகவும் அதிகரிக்கப்பட்டுள்ளது.

## வடக்கு, கிழக்கு மற்றும் வடமேல்...

வடமேல் மாகாணங்களின் ஆளுநர்கள் ஜனாதிபதியினால் பதவிகளிலிருந்து நேற்று நீக்கப்பட்டதையடுத்து புதிய ஆளுநர்களாக இவர்கள் நியமிக்கப்படவுள்ளனர்.

## 32 இலங்கை பணிப்பெண்கள்...

கட்டுநாயக்க விமான நிலையத்தை வந்தடைந்த னர்.

ஒப்பந்தம் செய்யப்பட்ட பணியிடங்கள் மற்றும் வீட்டை விட்டு வெளியேறி வேறு இடங்களில் இவர்கள் பணிபுரிந்தனர். இவர்களில், சொந்த விருப்பப்படி இலங்கை திரும்புவதற்காக தூதரகத்தில் தம்மைப் பதிவு செய்தவர்களே நாடு திரும்பினர். இவர்கள் அநுராதபுரம், வவுனியா, கம்பஹா, கிண்ணியா, கொழும்பு, குருநாகல் மற்றும் புத்தளம் ஆகிய பகுதிகளைச் சேர்ந்தவர்கள் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## இலங்கையின் முதலாவது...

துறைசார் மேற்பார்வைக் குழு, அதன் தலைவர் பாராளுமன்ற உறுப்பினர் நாலக பண்டார கோட்டேகொட தலைமையில் அண்மையில் பாராளுமன்றத்தில் கூடிய போதே இவ்விடயம் தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை, ஒட்டுவேலை (Welding) மற்றும் தொழிநுட்பம் சம்பந்தப்பட்ட துறையில் நிபுணர்களை உருவாக்குவது தொடர்பில், இந்தக் குழுவில் விரிவாகக் கலந்துரையாடப்பட்டது.

கொரியா உள்ளிட்ட நாடுகளில் இத்துறை சார்ந்த நிபுணர்களுக்கு பாரியளவு கேள்வி உள்ளதாகவும், இலங்கையில் இத்துறையில் முறையான அங்கீகாரத்துடன் பயிற்சிபெற்ற நிபுணர்களை உருவாக்குவதற்கு உரிய பொறிமுறை அவசியம் என்றும் குழு உறுப்பினர்கள் சுட்டிக்காட்டினர்.

## முள்ளிவாய்க்காலுக்கு வர...

இதனை தெரிவித்தார். அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

இலங்கைக்கு 1948 இல் சுதந்திரம் கிடைத்தது. அந்தச் சுதந்திரம் தமிழர் தேசத்திற்கும், தமிழருக்கும் கிடைக்கவில்லை.

ஐரோப்பியரிடம் இழந்த சுதந்திரத்தை , திரும்பப் பெறும் உரித்து தமிழர்களுக்கு உண்டு. இதனால் தான், கடந்த 70 ஆண்டுகளுக்கு மேலாக தமிழர்கள்,தமது விடுதலைக்காக ஜனநாயக, ஆயுதவழிகளில் போராட்டங்களை நடத்தினர். இவை இன்னும் கிடைக்கவில்லை என்பதை சர்வதேசமே அறியும்.

2009 மே18 இல்,இழக்கப்பட்டவை இறுதியாக இருக்கட்டும். எஞ்சியவற்றை மீட்பதற்கான தமிழர்களின் செயற்பாடுகள் இன்னும் ஓயவில்லை.

நாளை மே 18 நினைவேந்தல் நிகழ்ச்சி முள்ளிவாய்க்கால் முற்றத்திலும், உலகில் தமிழர் வாழும் பிரதேசங்களிலும் நடைபெறவுள்ளதால், இலங்கையிலும் இதை நடாத்த மக்கள் அணிதிரளவுள்ளனர்.

தமிழர் பாரம்பரியத்தில் உயிர் நீர்த்தவர்களுக்கு அஞ்சலி செய்வது, நினைவு கூர்வது தமிழர் பண்பாடும், உயர் நாகரிகமாகும். கடந்த பதினான்கு ஆண்டுகளாக இலங்கையில் முள்ளிவாய்க்கால் முற்றத்திலும், தமிழர் வாழ்விடங்களிலும் இந் நிகழ் வேந்தல் நிகழ்ச்சிகள் நடைபெற்றுவருகின்றன.

தமிழர் பாரம்பரியத்தில் உயிர்களை பலிகொடுத்த, களப் பலியாகிய மக்களின் ஆத்மாக்கள் நினைவு கூரப்படுவதும், அவர்கள் இறப்பில்லாது வாழ்கின்றனர் என்பதும் தமிழர்கள் நம்பிக்கையாகும். இந்த நம்பிக் கையில்,நாளை மே18 முள்ளிவாய்க்காலிலும், தாம் வாழும் இடங்களிலும் தமிழர்கள் அணிதிரள்கின்றனர்.

## 25,000 மெ.தொன் யூரியாவை...

குணவர்த்தன தெரிவித்தார். இதேவேளை 50 கிலோ எடை கொண்ட, MOP எனப்படும் பொற்றாசியம் முரியேட்டு உர மூடை ஒன்றின் விலை, 4,500 ரூபாவால் குறைக்கப்பட்டுள்ளதாக விவசாய அமைச்சு தெரிவித்துள்ளது.

இதன்படி, பொற்றாசியம் முரியேட்டு உர மூடை ஒன்றின் புதிய விலை 15, 000 ரூபாவாகும்.இந்த உரத்தை, அனைத்து கமநல சேவை மத்திய நிலையங்களிலும் பெற்றுக்கொள்ளலாமென விவசாய அமைச்சு தெரிவித்துள்ளது

## வடக்கில் சிறுமிகள்... (03 ஆம் பக்கத் தொடர்)

இரு மாணவிகள் பாடசாலை முடித்து வீடு திரும்பும் போது, இரண்டு வாகனங்கள் பின் தொடர்ந்ததாகவும் ஒரு வாகனத்திலிருந்தத ஐந்து பேர் கொண்ட குழு, அந்த சிறுமிகளை தாம் வீட்டுக்கு கொண்டு வந்து விடுவதாக கூறியுள்ளனர்.

இக் குழுவினரின் நடவடிக்கைகளினை அவதானித்த சிறுமிகள் அங்கிருந்து தப்பியோடி, அருகிலுள்ள வீடு ஒன்றிற்குள் ஒளிந்தனர். பின்னர்,தங்களுக்கு ஏற்படவிருந்த விபரீதத்தை வீட்டுக்காரருக்கு தெரியப்படுத்தினர். வாகனத்தின் நடமாட்டத்தை அவதானித்ததாக கிராமவாசிகள் பொலிஸாரிடம் தெரிவித்தனர்.

## பெருந்தோட்டத்துறை... (03 ஆம் பக்கத் தொடர்)

ஆகியோரும் உலக வங்கி குழுவினரை நேற்று கொழும்பில் சந்தித்தனர்.

உலக வங்கியின் கொழும்பு அலுவலகத்தில் நடந்த இந்த சந்திப்பு தொடர்பில் ஊடகங்களுடன் உரையாடிய மனோ கணேசன் எம்பி கூறியதாவது,

அரசாங்கம் உலக வங்கியின் நிதி உதவியுடன் இலங்கையில் வாழும் வறிய நலிவுற்ற குடும்பங்களுக்கு மாதாந்தம் நிதி கொடுப்பனவு வழங்கும் திட்டத்தை முன்னெடுக்க உள்ளது. முந்தைய சமுர்த்தி திட்டத்தில் பெருந்தோட்ட மக்களை சேர்த்து கொள்வதில் குறைபாடு நிலவியதை போல் இந்த திட்டத்தில் பெருந்தோட்ட குடும்பங்களை புறந்தள்ள இடன் கொடுக்க மாட்டும் என தமிழ் முற்போக்கு கூட்டணி பாராளுமன்றத்தில் தெளிவாக கூறி விட்டது. இந்த நிலைபாட்டை நான் நேரடியாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கக்கும் கூறி விட்டேன் என்றார்.

நுவரேலியா முதல் கொழும்பு அவிசாவளை வரை பதுளை, கண்டி, கேகாலை, இரத்தினபுரி, களுத்துறை, மாத்தளை, காலி, மாத்தறை, குருநாகலை, மொனராகலை ஆகிய மாவட்டங்களில் வாழும் பெருந்தோட்ட குடும்பங்களுக்கு, இந்த மாதாந்த கொடுப்பனவு திட்டத்தில் இடம்பெற நியாயமான வாய்ப்புகளை வழங்க வேண்டும். மேலும் பெருந்தோட்ட தொழிலாளர்கள் என இதை குறுக்கக் கூடாது. தோட்டங்களில் வேலை செய்தாலும், வெளியே வேலை செய்தாலும், செய்யாவிட்டாலும், பெருந்தோட்ட பிரதேசங்களில் வாழும் அனைத்து குடும்பங்களையும் இதில் சேர விண்ணப்பிக்க வாய்ப்பு வேண்டும். ஒரு வீட்டில் வசிக்கும், திருமணமான வெவ்வேறு குடும்பங்களையும் வெவ்வேறாக கணக்கெடுக்க வேண்டும் எனவும் நாம் கோரினோம். மேலும் பெருந்தோட்ட நிர்வாகங்களுக்கு இதில் தேவையின்றி தலையிட இடம் கொடுக்க வேண்டாம் எனவும் கூறியுள்ளோம் என்றார்.

## தாய்லாந்து நாட்டுடன்... (03 ஆம் பக்கத் தொடர்)

பிறந்த தினக் கொண்டாட்டத்தை இந்நாட்டின் மஹாசங்கத்தினரின் பங்குபற்றலுடன் நடத்த ஏற்பாடு செய்யப்பட்டுள்ளமை தொடர்பிலும் இதன்போது கலந்துரையாடப்பட்டது.இச்சந்திப்பில் பாராளுமன்ற செயலாளர் நாயகம் தம்மிக்க தசயநாயக்கவும் கலந்துகொண்டிருந்தார்.

## பாராளுமன்ற...

2012 ஆம் ஆண்டு முதல் பாராளுமன்றத்தின் உதவிச் செயலாளர் நாயகமாக (நிர்வாகம்) பதவி வகித்ததுடன், 1999 ஆம் ஆண்டில் பாராளுமன்ற அதிகாரியாக இலங்கை பாராளுமன்ற சேவைக்கு இணைந்துகொண்டார்.

அம்பலாங்கொட தர்மாஷோக்க வித்தியாலயத்தின் புகழ்பெற்ற பழைய மாணவியான இவர், கொழும்பு பல்கலைக்கழகத்தில் விஞ்ஞான இளமானிப் பட்டத்தைப் பூர்த்தி செய்துள்ளார்.

இதனையடுத்து இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தில் சட்டத்துறை இளமானிப்பட்டத்தை பூர்த்தி செய்த இவர், சட்டக் கல்லூரியில் பரீட்சைக்குத் தோற்றி சட்டத்தரணியாக உயர்நீதிமன்றத்தில் சத்தியப்பிரமாணம் செய்துள்ளார்.



பொலிஸ் ஆணைக்குழுவின் தலைவராக ஓய்வுபெற்ற உயர் நீதிமன்ற நீதிபதி லலித் ஏக்கநாயக்க நியமிக்கப்பட்டுள்ளார். இவருக்கான ஜனாதிபதியின் கடிதத்தை, செயலாளர் சமன் ஏக்கநாயக்க வழங்குவதைக் காணலாம்.

## அழகு சேர்வை காலமானார்



மாத்தளை சுதுகங்கை அருள்மிகு ஏழுமுகக் காளியம்மன் ஆலய பரிபாலன சபையின் முன்னாள் தலைவர் வேலாயுதம் அழகுசேர்வை 15.05.2023 இல் அமரரானார். ஏகாதிபத்திய எதிர்ப்பாளர்களான பெரியமருது, சின்னமருது ஆகியோரின் வழிவந்தவராவார். இன்று தேவஸ்தான அந்தஸ்துக்கு உயர்வடைந்துள்ள சுதுகங்கை ஏழுமுக காளியம்மன் ஆலயத்திற்கு பெருந்தொண்டாற்றியவர், திருப்பணிநாயகன்,'காளிமகா தேவி காவலன்'ஆகிய சிறப்புப் பெயர்களைப் பெற்று பாராட்டப்பட்டவர். ஆலய பரிபாலனசபையின் தற்போதைய உபதலைவர் அழ. சந்திரபோஸ் அவர்களின் தந்தையாராவார்.

இவரது மறைவினையொட்டி ஊடகவியலாளரும், பிரசுரகர்த்தாவுமாகிய எச்.எச்.விக்கிரமசிங்க, கலாசார அதிகாரி கலாசார அமைச்சின் (ஓய்வுநிலை) கலைமாமணி மாத்தளை பெ.வடிவேலன் ஆகியோர் வெளியிட்டுள்ள அனுதாபச்செய்தியில் அழகுசேர்வையின் மறைவு மாத்தளை இந்துக்களுக்கு மட்டுமல்ல ஏழ்மை நிலையில் திகழ்ந்த இந்து ஆலயங்களை உயர்வடைய அயராது உழைக்கும் தொண்டர்களுக்கு பேரிழப்பாகும். இவரது ஆடம்பரமற்ற எளிமையான சமயப்பணிஅனைவரும் பின்பற்றத்தக்கதாகும்.

## புலம்பெயர்ந்த இலங்கையருக்கு...

நடைமுறைப்படுத்தப்படவுள்ளது. புலம்பெயர் தொழிலாளர்கள் உட்பட வெளிநாடுகளில் வசிக்கும் இலங்கையரின் தேவைக்கேற்ப, நகர்ப்புற அடுக்குமாடி குடியிருப்புகளாகவும், கிராமப்புற தனிநபர் வீட்டுத் தொகுதிகளாகவும் இந்த வீட்டுத் திட்டம் நடைமுறைப்படுத்தப்படும் . இது தவிர சொந்த நிலத்தில் வீடு கட்டுவதற்கும் இதன் கீழ் ஏற்பாடுகள் செய்யப்படவுள்ளன.

இதற்கான நிதிப் பங்களிப்பை இலங்கை வெளிநாட்டு வேலை வாய்ப்புப் பணியகம் வழங்கவுள்ளது. இது தொடர்பான கலந்துரையாடல் நேற்று (16) நகர மற்றும் வீடமைப்பு அபிவிருத்தி இராஜாங்க அமைச்சர் தெனுகா விதானகமவுடன் நடைபெற்றது. எதிர்வரும் திங்கட்கிழமை புலம்பெயர் தொழிலாளர்களின் வீட்டுத் தேவைகள் தொடர்பான கணக்கெடுப்பை ஆரம்பிக்க தீர்மானிக்கப்பட்டது.

இரண்டு வாரங்களுக்குள் இந்த தகவல்கள் கிடைகுமென எதிர்பார்க்கப்படுகிறது.

சகல பிராந்திய செயலகங்கள், தூதரகங்கள் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தின் உத்தியோகபூர்வ இணையத்தளத்தினூடாகவும் இணைக்கப்பட்டுள்ள அபிவிருத்தி உத்தியோகத்தர்களூடாக கணக்கெடுப்பு நடத்தப்பட உள்ளது.

புலம்பெயர்ந்த தொழிலாளர்கள் மற்றும் அவர்களது குடும்ப உறுப்பினர்களை இலக்காகக் கொண்டு நடத்தப்பட்ட கணக்கெடுப்பில் பெறப்பட்ட தரவுகளை பகுப்பாய்வு செய்த பின்னர், கட்டப்படும் வீடுகளின் வகைகள், வீடுகளின் எண்ணிக்கை மற்றும் வீடுகள் கட்டப்படும் பகுதிகள் அடையாளம் காணப்படவுள்ளன. அதன் பின்னர் வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபைக்கும் அரசாங்கத்துக்கும் சொந்தமான காணிகளை பயன்படுத்தி வீட்டுத்திட்டம் நடைமுறைப்படுத்தப்படும்.

இக்கலந்துரையாடலில் இலங்கை வெளிநாட்டு வேலை வாய்ப்பு பணியகத்தின் தலைவர் ஹில்மி அஸீஸ், தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையின் தலைவர் ரஜீவ் சூரியாராச்சி உள்ளிட்ட அதிகாரிகள் கலந்துகொண்டனர்.

## மின்சார வாகனங்கள் இறக்குமதிக்கான...

நீடிக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் புலம்பெயர் தொழிலாளர்களுக்கு பெரும் சலுகை கிடைத்துள்ளதாக அமைச்சரவை தீர்மானத்தை அறிவிக்கும் செய்தியாளர் மாநாட்டில் கலந்துகொண்ட அமைச்சர் பந்துல குணவர்த்தன தெரிவித்தார்.

வெளிநாட்டில் பணிபுரிபவர்கள் தமது வருமானத்தை சட்டப்பூர்வமாக இலங்கைக்கு அனுப்பியிருந்தால், முழுமையாக மின்சார வாகனங்களை இறக்குமதி செய்ய அனுமதிக்கப்படுமென முன்னர் கூறப்பட்டது. இதற்கான அனுமதியும் அமைச்சரவையில் வழங்கப்பட்டிருந்தது. இதன்படி, மின்சார வாகனங்களை இறக்குமதி செய்வதற்கு, 01.05.2022 முதல் 31.12.2022 வரையான காலப்பகுதியில் இலங்கைக்கு அனுப்பப்பட்ட அந்நியச் செலாவணியின் அளவை அடிப்படையாகக் கொண்டு, மின்சார வாகனங்கள் இறக்குமதி செய்ய அனுமதிக்கப்பட்டது.

## ஜனாதிபதியை நியமித்த நாம்...

அவர் இவ்வாறு தெரிவித்தார்.

முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவை மீண்டும் பிரதமராக்கப்போவதாகக் கூறப்படுவது உண்மையா? என அவரிடம் கேட்டபோது, தான், பிரதமராக வேண்டுமென எங்காவது மஹிந்த ராஜபக்ஷ கேட்டிருக்கிறாரா? இதெல்லாம் உருவாக்கப்பட்ட செய்திகள். இப்போது ஒரு பிரதமர் இருக்கிறார்தானே எனப் பதிலளித்தார்.

அமைச்சுப் பதவிகள் இல்லாததால், எதிர்க்கட்சிக்கு செல்கிறீர்களா? என கேட்டபோது, நாம் நியமித்த ஜனாதிபதி சிறப்பாக நாட்டை நிர்வகித்து செல்கிறார்தானே.

எங்களுக்கு அமைச்சுப்பதவிகள் வேண்டாம், நாட்டின் பொருளாதாரத்தை வலுப்படுத்த வேண்டும், மக்களின் பொருளாதாரத்தை வளப்படுத்த வேண்டுமென்பதே எமது விருப்பம். அத்துடன் ஐக்கிய மக்கள் சக்தியிலிருந்து வேண்டியளவு ஆட்களை இணைத்துக் கொண்டு அரசை பலப்படுத்திக் கொள்ளுமாறே நாங்கள் கூறுவதாகவும் என்றும் ஜோன்ஸ்டன் பர்னாண்டோ தெரிவித்தார்.

## இராணுவத்தை அங்கீகரிக்கப்பட்ட அளவில்...

இராஜாங்க அமைச்சர் பிரமித பண்டார தென்னகோன், தெரிவித்துள்ளார்.

அமெரிக்க இராஜாங்கத் திணைக்களத்தின் பிரதி உதவிச் செயலாளர் (தெற்கு மற்றும் மத்திய ஆசிய விவகாரங்களுக்கான பணியகம்) திருமதி அஃப்ரீன் அக்தருடன் இடம்பெற்ற சுமுகமான கலந்துரையாடலின் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

கொழும்பிலுள்ள அமைச்சரின் அலுவலகத்தில் இந்த சந்திப்பு நடைபெற்றது. பாதுகாப்புச் சீர்திருத்தங்கள் தொடர்பாக எடுக்கப்பட்டு வரும் நடவடிக்கைகள் குறித்தும், அமெரிக்க பிரதி உதவிச் செயலாளர் திருமதி அக்தரிடம் தெரிவிக்கப்பட்டன.

அமெரிக்கா வழங்கிய ஒத்துழைப்பு நடவடிக்கைகளை நினைவு கூர்ந்த இராஜாங்க அமைச்சர் தென்னகோன், இரு நாடுகளுக்கும் இடையிலான இராணுவ மற்றும் பாதுகாப்பு ஒத்துழைப்பை மேலும் வலுப்படுத்துவதற்கான புதிய வழிமுறைகள் குறித்தும் கலந்துரையாடினார்.

மேலும் கடல்சார் விழிப்புணர்வு மற்றும் கடல்சார் பாதுகாப்பை மேம்படுத்துவதில் இலங்கைக்கு உதவும் அமெரிக்காவின் முயற்சிகள் மற்றும் கடல்சார் பாதுகாப்பு மற்றும் பிற பிராந்திய பிரச்சினைகளை அதன் பாதுகாப்புக் கொள்கையில் முன் வைப்பதற்கான இலங்கையின் முயற்சிகள் தொடர்பாகவும் இதன்போது கலந்துரையாடப்பட்டது.

வெளிநாடுகளில் அமைதி காக்கும் பணிகளில் இலங்கை இராணுவத்தின் உறுப்பினர்களுக்கான வாய்ப்புகள் தொடர்பிலும் இராஜாங்க அமைச்சர் விசேட கவனம் செலுத்தினார்.

இச்சந்திப்பை நினைவுகூரும் வகையில், பிரதி உதவிச் செயலாளர் அக்தர், இராஜாங்க அமைச்சர் தென்னகோனுக்கு நினைவுச் சின்னம் ஒன்றை வழங்கினார்.

இலங்கைக்கான அமெரிக்க தூதரகத்தின் பிரதித் தூதுவர் டக்ளஸ் இ.சொனெக், தூதரக அதிகாரிகள் மற்றும் பாதுகாப்பு இராஜாங்க அமைச்சின் அதிகாரிகளும் இந்த சந்திப்பில் கலந்துகொண்டனர்.

## விடுவிக்கப்படாத காணிகள்...

ஆசிய பணியகத்தின் பிரதி உதவி செயலாளர் அப்ரீன் அக்டரிற்கும் நீதி அமைச்சர் விஜேயதாச ராஜபக்ஷவுக்குமிடையிலான சந்திப்பு செவ்வாய்க்கிழமை நீதி அமைச்சில் நடைபெற்றது.

இதன்போது பிரதி உதவி செயலாளர் அமைச்சரிடம் வினவிய கேள்விகளுக்கு தெளிவுடுத்துகையிலேயே இவ்வாறு தெரிவித்ததாக நீதி அமைச்சு விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

வர்த்தமானியில் வெளியிடப்பட்டுள்ள உத்தேச பயங்கரவாத எதிர்ப்பு சட்டமூலம் தொடர்பில் பிரதி உதவி செயலாளர் அமைச்சரிடம் ஆலோசித்திருந்தார். அதற்கு அமைச்சர், இந்த சட்டமூலத்தில் உள்வாங்கப்பட்டுள்ள விடயங்கள், அத்துடன் அவற்றை உள்வாங்குவதற்கான தேசிய மற்றும் சர்வதேச மட்டத்தில் தாக்கம் செலுத்திய காரணிகள் ஆகியவற்றை இதன்போது தெளிவுப்படுத்தியுள்ளார்.

அத்துடன் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ள ஊழல் எதிர்ப்பு சட்டமூலம் தொடர்பிலும், இந்த சட்டமூலம் சட்டமாக்கப்பட்டதன் பின்னர், இலங்கையில் அரச மற்றும் தனியார் துறைகளில் ஏற்படும் மோசடிகளை கட்டுப்படுத்துவது தொடர்பிலும் அமைச்சர் தெளிவுபடுத்தியுள்ளார்.

அரசியலமைப்பின் 21 ஆவது திருத்தச் சட்டத்தை அனுமதிக்கும் போதும் எதிர்க்கட்சியால் தடைகள் வந்தபோதும் , அனைத்து தரப்பினருடன் கலந்துரையாடி பொருத்தமான நடவடிக்கைகளை எடுக்கிறோம்.

உத்தேச பயங்கரவாத எதிர்ப்பு சட்டமூலம் தொடர்பில் மக்கள் மத்தியில், அரசியல்வாதிகள் உட்பட சிவில் தரப்பின் பிரதிநிதிகள் தவறான நிலைப்பாட்டை தோற்றுவித்துள்ளனர் . பயங்கரவாத எதிர்ப்பு சட்டமூலம் வேண்டாமென்றால் நடைமுறையிலுள்ள பயங்கரவாத தடைச்சட்டத்தை முழுமையாக நடைமுறைப்படுத்துவதா என்ற கருத்தாடல் நாட்டுக்குள் ஏற்பட்டிருக்கிறது.

பயங்கரவாத எதிர்ப்பு சட்டமூலம் தொடர்பில் பிரேரணைகளை சமர்ப்பிக்க அனைவருக்கும் முடியுமான வகையில் நடவடிக்கை எடுத்திருக்கிறோம். தற்போது பிரேரணைகள் கிடைக்கப்பெற்று வருகின்றன.

## மின்சார முச்சக்கரவண்டிகள்...

ஊடகத்துறை அமைச்சர் பந்துல குணவர்த்தன தெரிவித்தார்.

சாதாரண முச்சக்கரவண்டிக்கு மேலதிகமாக ஒரே தடவையில் 07 பேர் பயணிக்கக்கூடிய மின்சாரத்தில் இயங்கும் முச்சக்கரவண்டி அமைச்சர் பந்துல குணவர்த்தனவினால் நேற்று அறிமுகப்படுத்தப்பட்டது. இந்த நவீன முச்சக்கரவண்டிகள் சர்வதேச சந்தைகளுக்கு விற்பனைக்கு விடப்படவுள்ளதாகவும் அமைச்சர் தெரிவித்தார். கொட்டாவையிலுள்ள மில்டன் மோட்டர்ஸ் நிறுவனத்தில் நேற்று இது தொடர்பில் இடம்பெற்ற விசேட நிகழ்வில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கும் போதே அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார். இது தொடர்பில் மேலும் தெரிவித்த அமைச்சர்,

மோட்டார் போக்குவரத்து ஆணையாளர் நாயகம் மற்றும் உயரதிகாரிகள் மின்சாரத்தில் இயங்கும் முச்சக்கரவண்டியை பார்வையிட்டுள்ளனர்.

மில்டன் மோட்டர்ஸ் உரிமையாளரான எச்.பி. மில்டன், உள்நாட்டு வீதிகளில் போக்குவரத்துச் செய்யக் கூடிய முச்சக்கரவண்டிகளை தயாரித்துள்ளார்.

அத்துடன் முச்சக்கரவண்டிகளுக்கான அனைத்து உதிரிப்பாகங்களும் மில்டன் மோட்டர்ஸ் நிறுவனத்தினால் உள்ளூரிலேயே தயாரிக்கப்படுகிறது.

வெளிநாட்டிலும், உள்நாட்டிலும் பெற்றுள்ள பயிற்சி மற்றும் அனுபவங்களைக் கொண்டு, பல்வேறு துறைசார்ந்தோரின் பங்கேற்புடன் அவர் இந்த நிறுவனத்தை செயற்படுத்தி வருகிறார்.

நூற்றுக்கணக்கானோருக்கு இதன் மூலம் வேலைவாய்ப்புக்கள் வழங்கப்பட்டு வருகின்றன.

ஐ.டி.எல். மோட்டர்ஸ் நிறுவனத்தின் தொழில்நுட்ப அனுசரணையுடன் மேற்படி முச்சக்கரவண்டி தயாரிக்கப்பட்டுள்ளது. சர்வதேச சந்தைக்கு விற்பனை செய்யும் அளவுக்கு உயர்ந்த தரம் கொண்டதாக,இந்த மின்சாரத்தில் இயங்கும் முச்சக்கரவண்டிகள் தயாரிக்கப்பட்டுள்ளன.

சாதாரண முச்சக்கர வண்டிகளுடன் ஒரு குடும்பம் முழுமையாக பயணம் செய்யக்கூடிய வகையில், ஏழு பேர் பயணிக்கக்கூடிய வகையில் முச்சக்கரவண்டிகள் இந்த நிறுவனத்தால் தயாரிக்கப்படுகின்றன. குடும்ப பிரயாணங்களுக்கு பயன்படுத்த உதவும் மிகச்சிறந்த இந்த வாகனத்தை, முதற்கட்டமாக ஆபிரிக்க நாடுகளுக்கு ஏற்றுமதி செய்வது நோக்கமாகும். இதற்கான ஆரம்பகட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இதற்குத் தேவையான சட்டரீதியான சான்றிதழ்களைப் பெற்றுக்கொடுக்க மோட்டார் போக்குவரத்து ஆணையாளர் திணைக்களம் அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொண்டு வருகின்றது

போக்குவரத்துத் துறை ஆரம்பித்துள்ள சிஷ்டம் சேஞ்சாக இதனைக் குறிப்பிடமுடியும்.

எனது தேர்தல் தொகுதியைச் சேர்ந்த மில்டன் என்பவரே இந்த நிறுவனத்தை ஆரம்பித்து, வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யக்கூடிய தரத்தில் மின்சாரத்தில் இயங்கும் முச்சக்கரவண்டிகளை தயாரித்துள்ளார். அவர் சாதாரண கிராம பாடசாலையில் இலவசக் கல்வியைக் கற்றவர். அவரது சொந்த தன்னார்வ முயற்சியில் இந்தளவு முன்னேற்றமடைய முடிந்துள்ளது என்றார்.

## 14 ஆண்டுகளின் பின் ஆரூரன்...

மேற்படி சந்தேக நபரை சகல குற்றச்சாட்டுகளிலிருந்தும் விடுவித்து தீர்ப்பு வழங்கியுள்ளார்.

மேற்படி சந்தேக நபர் 2009 ஆம் ஆண்டு பயங்கரவாத தடுப்புச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு கொழும்பு மெகசின் சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டிருந்தார்.

நேற்றைய தினம் அந்த வழக்கு கொழும்பு மேல் நீதிமன்றத்தில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட போதே நீதிமன்றத்தினால் சந்தேக நபர் சகல குற்றச்சாட்டுகளிலிருந்தும் விடுவிக்கப் பட்டுள்ளார்.

முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்சவை கொலை செய்வதற்கு சூழ்ச்சி செய்தமை தொடர்பில் 13 குற்றச்சாட்டுகளை முன்வைத்து சட்டமா அதிபரினால் 2013 ஆம் ஆண்டு மேற்படி வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

பிரதிவாதியான முன்னாள் பிரதிப் பொலிஸ் மாஅதிபர் சிசில் டி சில்வா முன்னிலையில் முன் வைக்கப்பட்ட வாக்குமூலத்தை வழக்கின் சாட்சியாக ஏற்றுக் கொள்வதாக சட்ட மாஅதிபர் முன்வைத்த வேண்டுகோள் கடந்த வழக்கு விசாரணையின் போது மேல் நீதிமன்ற நீதிபதியினால் நிராகரிக்கப்பட்டது.

அந்த வகையில் நேற்றைய தினம் சட்ட மாஅதிபர் சார்பில் நீதிமன்றத்தில் விடயங்களை முன்வைத்த மேலதிக சொலிசிட்டர் ஜெனரல் பிரதிவாதிக்கு எதிராக வேறு சாட்சிகள் கிடையாது என நீதிமன்றத்திற்கு அறிவித்தார். அதனால் தொடர்ந்தும் வழக்கை முன்னெடுத்து செல்வதற்கு சட்ட மாஅதிபர் கருதவில்லை என்பதை மேலதிக சொலிசிட்டர் ஜெனரல் நீதிமன்றத்திடம் தெரிவித்தார். அதனைக் கவனத்திற் கொண்ட நீதிபதி அனைத்து குற்றச்சாட்டுகளிலும் இருந்து சந்தேக நபரை விடுதலை செய்தார்.

43 வயதுடைய சிவலிங்கம் ஆரூரன் கடந்த 2004 ஆம் ஆண்டு மொரட்டுவ பல்கலைக்கழகத்தில் பொறியியல் பட்டம் பெற்றுள்ளதுடன் பேராதனை பல்கலைக்கழகத்தில் பட்டப்பின் படிப்பை மேற்கொண்டிருந்தபோது கைது செய்யப்பட்டுள்ளார்.

அவர் சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டிருந்த காலத்தில் ஏழு தமிழ் மொழி நூல்களையும் ஒரு ஆங்கில மொழி நூலையும் எழுதியுள்ளார். அத்துடன் 2002 ஆம் ஆண்டு சிறுகதை; தொகுப்பு நூல் விருதுக்கு உரித்தானது.

அத்துடன் 2016 ஆம் ஆண்டு சிறந்த தமிழ் சிறுகதைக்கான அரச சாகித்திய விருதும் அவருக்கு கிடைத்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# ஆசிய சவாட் குத்துச் சண்டைப் போட்டியில் பதக்கங்களை வென்ற இலங்கை வீரர்கள்

நான்காவது ஆசிய நாடுகளுக்கிடையிலான சவாட் குத்துச் சண்டைப் போட்டி மே 5 ஆம் திகதி முதல் 9 ஆம் திகதி வரை உஸ்பெக்கிஸ்தான் டாக்ஸ்கல் மைதானத்தில் நடைபெற்றது.இப் போட்டியில் 19 நாடுகள் கலந்து கொண்டிருந்தன.

இலங்கை தேசிய சவாட் குத்துச் சண்டை அணியில் 11 பேர் கலந்து கொண்டனர்.இதில் இலங்கை வீரர்கள் இரண்டு பேர் தங்கப் பதக்கமும் நான்கு பேர் வெள்ளிப் பதக்கங்களையும் நான்கு பேர் வெண்கலப் பதக்கங்களையும் ஒருவர் சிறந்த ஒழுக்கத் திறன் மிக்க விளையாட்டு வீராங்கனை என்ற பதக்கத்தையும் பெற்று நாட்டுக்கு பெருமையை தேடிக் கொடுத்துள்ளனர்.

**★ ஏழு பேர் கம்பளை சைனிஸ் குங்பூ என்ட் பிரன்ஸ் கிக் பொக்சிங் எகடமியைச் சேர்ந்தவர்கள்....**

**★ உஸ்பெக்கிஸ்தானில் 02தங்கம், 04 வெள்ளி, 04 வெண்கலம், சிறந்த ஒழுக்கத்திறன் பதக்கம்...**

**★ கம்பளை சைனிஸ் குங்பூ என்ட் பிரன்ஸ் கிக் பொக்சிங் எகடமி இயக்குனருடனான கலந்துரையாடல்....**

அதில் குருநாகல், இரத்தினபுரி மாவட்டங்களைச் சேர்ந்த சிரேஷ்ட பிரிவில் 60 கிலோ எடை சவாட் குத்துச் சண்டையில் போட்டியிட்ட அஞ்சுல பத்ம ஸ்ரீ தங்கப் பதக்கத்தையும், கனிஷ்ட பிரிவில் 36 கிலோ எடையில் போட்டியிட்ட உதித்த ஜயரத்ன தங்கப் பதக்கத்தையும் பெற்றுக் கொண்டார்.

கம்பளையில் அமைந்துள்ள ஸ்ரீலங்கா சைனிஸ் குங்பூ என்ட் பிரன்ஸ் எகடமி விளையாட்டுக் கழகத்தைச் சேர்ந்த ஏழு குத்துச் சண்டை வீர, வீராங்கனைகள் கலந்து கொண்டு 3 பேர் வெள்ளிப் பதக்கத்தையும் 3 பேர் வெண்கலப் பதக்கத்தையும் ஒருவர் சிறந்த ஒழுக்கத் திறன்மிக்க விளையாட்டுக்கான சிறந்த பதக்கத்தையும் பெற்றுள்ளனர். இந்தக் சாவட் குத்துச் சண்டைப் போட்டி தொடர்பில் கம்பளையில் அமைந்துள்ள ஸ்ரீலங்கா சைனிஸ் குங்பூ என்ட் பிரன்ஸ் கிக் பொக்சிங் எகடமி நிறுவனத்தின் இயக்குனர் பிரதான பயிற்றுவிப்பாளர் டி. எம். நௌஸாட் தினகரன் பத்திரிகைக்கு வழங்கிய செவ்வி.

***உங்களுடைய விளையாட்டுக் கழகம் ஆரம்பம் தொடர்பில்,..***

இது 2013 ஆம் ஆண்டு கம்பளையில் ஆரம்பிக்கப்பட்டு இயங்கி வருகின்றது. இது வரையிலும் 150200 அளவிலான குத்துச் சண்டை விளையாட்டு வீர, வீராங்கனைகள் கலந்து கொண்டு பயிற்சியினைப் பெற்றுள்ளனர். இக் கழகத்தில் பயிற்சியை பெற்றுவரும் வீரர்கள் தேசிய மட்டத்திலும் சர்வதேச மட்டத்திலும் நடைபெறும் போட்டிகளில் பங்கு கொண்டு எமது கழகத்திற்கும் நாட்டுக்கும் பெரும் புகழையீட்டித் தந்துள்ளனர்.

சர்வதேச சவாட் குத்துச் சண்டைப் போட்டிகளில் கலந்து கொண்ட வீர வீராங்கனைகள் இது வரைக்கும் 26 பேர் பதக்கங்களை வென்றுள்ளார்கள். கடந்த வருடம் பாகிஸ்தான் லாகூரில் சவாட் குங்பூ குத்துச் சண்டைப் போட்டி நடைபெற்றது. எங்கள் கழகத்தில் இருந்து சென்ற எட்டு வீர, வீராங்கனைகள் பதக்கங்களை பெற்று இலங்கைக்கு புகழையீட்டித் தந்துள்ளார்கள் எனலாம். இதே போன்று இம்முறை உஸ்பெக்கிஸ்தானில் நடைபெற்ற ஆசியா நாடுகளுக்கிடையிலான சவாட் கிண்ண குத்துச் சண்டைப் போட்டியில் 19 நாடுகள் கலந்து கொண்டன. இலங்கையில் இருந்து 11 வீர, வீராங்கனைகள் கலந்து கொண்டதில் ஏழு பேர் எங்கள் விளையாட்டுக் கழகத்தைச் சேர்ந்தவர்கள். அதில் ஆறு பேர் வெள்ளி, வெண்கலப் பதக்கங்களையும் ஒருவர் சிறந்த ஒழுக்கத் திறன்மிக்க விளையாட்டு வீராங்கனையாகவும் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

***உங்கள் விளையாட்டுக் கழகத்தின் சார்பில் கலந்து கொண்டவர்கள்?***

சிரேஷ்ட பிரிவில் 52 கிலோ எடைப் பிரிவில் போட்டியிட்ட முஹம்மட் ஸாமிக் வெள்ளிப் பதக்கத்தையும் கனிஷ்ட பிரிவில் 39 கிலோ எடை பிரவில் துசாரி பெர்ணான்டோ வெள்ளிப்பதக்கத்தையும் கனிஷ்டப் பிரிவில் 32 கிலோ எடைப்பிரிவில் சிராஜ் அப்துல்லா வெள்ளிப் பதக்கத்தையும் கனிஷ்ட பிரிவில் 48 கிலோ எடை பிரிவில் அப்துல் றசீட் வெண்கலப் பதக்கத்தையும் கனிஷ்டப் பிரிவில் 28 கிலோ எடை பிரிவில் மின்ஹாஜ் முஆவியா வெண்கலப்பதக்கத்தையும் கனிஷ்டப் பிரிவில் 34 கிலோ எடை பிரிவில் மின்ஹாஜ் யூசுப் வெண்கலப்பதக்கத்தையும் ஒருவர் ஒழுக்கத் திறன்மிக்க சிறப்பு பதக்கத்தையும் பெற்றுக் கொண்டனர்.

உஸ்பெக்கிஸ்தான் போட்டியில் கலந்து கொண்ட இருவருக்கு உலகக் கிண்ண சவாட் குத்துச் சண்டைப் போட்டியில் கலந்து கொள்ள சந்தர்ப்பம் கிடைத்துள்ளது என்பதையும் நான் இந்தச் சந்தர்ப்பத்தில் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கின்றேன். இவ் விளையாட்டு ஒஸ்ட்ரியா நாட்டில் செப்டம்பர் மாதம் அளவில் நடைபெறவுள்ளது. இவர்களுக்கான விசேட பயிற்சிகளை எதிர்வரும் ஜுன் மாதம் ஆரம்பிக்கவுள்ளோம்.

இந்த இரு விளையாட்டு வீரர்கள் கலந்து கொள்வதற்காக விளையாட்டுத் துறை அமைச்சு விமான பயணப் போக்குவரத்துக்கான செலவுகளைத் தருவதாக உறுதியளித்து. இந்த விளையாட்டு முயற்சிகளுக்கு விளையாட்டுத் துறை அமைச்சின் பங்களிப்பும் ஆதரவும் தொடர்ந்து இருக்க வேண்டும் என்று இந்தச் சந்தர்ப்பத்தில் தெரிவித்துக் கொள்கின்றேன்.

***இந்த சவாட் கிக் பொக்சின் குத்துச் சண்டைப் போட்டி பற்றி சற்று விளக்கமாகக் கூற முடியுமா?***

இந்த விளையாட்டானது இலங்கையின் 68 ஆவது தேசிய விளையாட்டாக விளங்குகிறது. இவ்விளையாட்டு குத்துச் சண்டை போன்று ஓர் ஆபத்தான விளையாட்டு அல்ல. மிகப் பாதுகாப்பான விளையாட்டு. கைக் கவசம், முகம் கால் கவசங்கள் அணிந்து மிகவும் பாதுகாப்பான முறையில் நடைபெறும் விளையாட்டு இது. உயிர் ஆபத்துக்கள் எவையும் இல்லை.

இதில் இரு வகை விளையாட்டுக்கள் உள்ளன. ஒன்று தாக்குதல் முறையில் விளையாடலாம். அடுத்து தொடுதல் முறையில் விளையாடலாம். தாக்குதல் முறையில் விளையாட்டினை மேற்கொண்டாலும் அதற்குத் தேவையான கவசங்கள் உள்ளன. அதனை அணிந்து கொண்டுதான் விளையாடுதல் வேண்டும்.நாங்கள் இதற்கான பயிற்சியினை கம்பளை வீபுலவத்த கிரிக்கெட் விளையாட்டுக் கழகத்தின் இடத்தில் வழங்கி வருகின்றோம்.

கம்பளை நகரப் பிரதேசத்தில் 150 பிள்ளைகள் பயிற்சி பெற்று வருகின்றார்கள். அதற்கப்பாலுள்ள உலுகங்கை, அக்குறணை, வட்டதெனிய, தெல்தோட்டை போன்ற பிரதேசங்களில் உள்ள கிளை நிலையங்களிலும் இந்த விளையாட்டுப் பயிற்சிகளை நடத்தி வருகின்றோம். அந்தந்த பிரதேசங்களிலுள்ள பிள்ளைகள் இந்த சவாட் குத்துச் சண்டை பயிற்சியினைப் பெற்று வருகிறார்கள். கண்டி மாவட்டத்தில் உள்ள ஏனைய பிள்ளைகள் இவ்விளையாட்டுப் பயிற்சியினைப் பெற்றுக் கொள்வதாக இருந்தால் குறித்த நிலையங்களுக்கு வருகை தந்து பயிற்சியினைப் பெற்றுக் கொள்ள முடியும்.

***இலங்கையிலும் கிக் சவாட் குத்துச் சண்டைப் போட்டிகள் எக்கால கட்டங்களில் நடைபெறும்? அதில் உங்களுடைய கழகத்தின் அணியில் இருந்து பங்கேற்று சாதனைகள் நிலை நாட்டியுள்ளீர்களா?***

எதிர்வரும் மாதம் இத்தினபுரியில் சவாட் குத்துச் சண்டைப் போட்டி நடைபெறவுள்ளது. கடந்த வருடம் தேசிய சவாட் குத்துச் சண்டைப் போட்டி இரத்தினபுரியில் நடைபெற்றது. அதன் போது எங்களுடைய கம்பளை ஸ்ரீலங்கா சைனிஸ் குங்பூ என்ட் கிக் பொக்சிங் பிரன்ஸ் எகடமி செம்பியன் கிண்ணத்தைச் சுவீகரித்துக் கொண்டது. எங்கள் வீர வீராங்கனை போட்டியிட்டு மொத்தமாக 42 பதக்கங்களைப் பெற்றுக் கொண்டனர். இதில் 26 தங்கப் பதக்கங்களாகும். இம்முறையும் எங்களது கழகத்தில் பயிற்சிகளைப் பெற்ற வீர, வீராங்கனைகள் கலந்து கொண்டு சிறந்த சாதனைகளைப் படைப்பார்கள் என்று நாங்கள் எதிர்பார்க்கின்றோம்.

எங்கள் நிலையத்தில் 12 பயிற்றுவிப்பாளர்கள் கடமையாற்றி வருகின்றனர். இங்கு பயிற்சிகளைப் பெறுகின்ற வீர, வீராங்கனைகளுக்கு சிறந்த பயிற்சிகளை வழங்கி இந்த குத்துச் சண்டை விளையாட்டுத்துறையில் ஒழுக்கமுள்ள சிறந்த விளையாட்டு வீர வீராங்கனைகளை உருவாக்கி வருகிறார்கள். அவர்களை இந்தச் சந்தர்ப்பத்தில் நன்றியுடன் நினைவு கூறிக் கொள்கின்றேன்.

**இக்பால் அலி**





























National Lotteries Board
திங்கட்கிழமை 2023.05.15
www.nlb.lk

மஹஜன சம்பத
சீட்டிழுப்பு இலக்கம் 5115
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 12,854,116.00
ஆங்கில எழுத்து U வெற்றி இலக்கங்கள் 5 0 8 4 0 4

தன நிதானய
சீட்டிழுப்பு இலக்கம் 1145
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 90,041,035.60
ஆங்கில எழுத்து Z வெற்றி இலக்கங்கள் 23 28 44 62

மெகா பவர்
சீட்டிழுப்பு இலக்கம் 1463
அடுத்த மெகா சுப்பர் பரிசு ரூ. 320,953,334.00
O 25 04 34 54 57
ரூ. 10,000,000.00

ஹந்தஹன
சீட்டிழுப்பு இலக்கம் 424
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 2,761,747.40
வெற்றி இலக்கங்கள் 06 36 39 54

ஜாதிக சம்பத
சீட்டிழுப்பு இலக்கம் 1570
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 11,009,517.20
வெற்றி இலக்கங்கள் 9 6 1 2 3 8

கொவிசெத
சீட்டிழுப்பு இலக்கம் 3357
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 103,438,871.44
ஆங்கில எழுத்து M வெற்றி இலக்கங்கள் 04 08 41 63

## கேள்விக்கான அழைப்பு

**கல்வி, தகவல் தொழில்நுட்பம் மற்றும் கலாசார விவகார அமைச்சு**

**சப்ரகமுவ மாகாண சபை**

2023ஆம் ஆண்டிற்காக GEMP செயற்றிட்டத்தின் கீழ் சப்ரகமுவ மாகாண பாடசாலைகளின் செயற்பாட்டு அறைகள் மற்றும் தொழில்சார் வழிகாட்டல் ஆலோசனை நிலையத்திற்கு தேவையான கீழ்க்கானும் உபகரணங்களை வழங்குவதற்கு தகைமைகள் உள்ள திறமையுள்ள கேள்விதாரர்களிடமிருந்து சப்ரபகமுவ மாகாண சபையின் கல்வி, தகவல் தொழில்நுட்பம் மற்றும் கலாசார விவகார அமைச்சின் பெறுகைக்குழுவின் தலைவரால் தேசிய போட்டி கேள்வி கோரல் (NCB) முறையின் கீழ் விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

| உருப்படியின இலக்கம் | விபரம் | அளவு |
|---|---|---|
| 01 | லெப்டொப் கணனி | 360 |
| 02 | WIFI ACCESS POINT | 30 |
| 03 | PHOTO COPIER | 35 |
| 04 | கணனி கதிரை | 360 |
| 05 | லெப்டொப் கணனி மேசை | 360 |

மேலதிக விவரங்களை **www.moe.sg.gov.lk** இணையதளத்தின் மூலம் பெற்றுக் கொள்ளலாம்.

02. கேள்வி ஆவணங்கள் விநியோகித்தல் மற்றும் பரீட்சித்துப் பார்த்தல் 2023.05.18 முதல் 2023.06.07 வரை ஆவதுடன் கேள்வி ஏற்றுக்கொள்ளும் இறுதித் திகதி மற்றும் நேரம் 2023.06.08 பி.ப. 2.00 ஆகும்.

**சுஜானி ஆர். விஜேதுங்க**
**செயலாளர்,**
**கல்வி, தகவல் தொழில்நுட்பம் மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சு,**
**சப்ரகமுவ மாகாண சபை, புதிய நகரம், இரத்தினபுரி.**

2023.05.17
**045-2222542**

# கிழக்கின் குரல்



# கிழக்கில் டெங்கு ஒழிப்பு வேலைத்திட்டம் முன்னெடுப்பு

## பாடசாலைகள், பொது இடங்களில் சிரமதானப் பணிகள் மாணவர்கள், அரச ஊழியர்கள் என பலர் பங்கேற்பு

(பாண்டிருப்பு தினகரன் , கல்முனை விஷேட, ஒலுவில் விசேட, காரைதீவு குறுப், அட்டாளைச்சேனை தினகரன், கிண்ணியா மத்திய, பாசிக்குடா, பெரிய நிலாவணை விசேட, வெல்லாவெளி தினகரன், சாய்ந்தமருது விசேட நிருபர்கள்)

பட்டிருப்பு வலயக் கல்வி பணிமனைக்குட்பட்ட பாடசாலைகளில் வலயக் கல்வி பணிப்பாளர் எஸ். சிறீதரன் வழிகாட்டலில் பிரதேச பொதுச் சுகாதார பரிசோதகர்கள் மேற்பார்வையில் டெங்கு ஒழிப்பு சிரமதானம் மேற்கொள்ளப்பட்டது.

டெங்கு நோயாளர்கள் 68 வீதமாக அதிகரித்துள்ளதாக சுகாதார பிரிவினர் தெரிவித்துள்ளனர். இந் நிலையில் டெங்கு காய்ச்சல், டெங்கு நுளம்பு பெருக்கம் தொடர்பில் பொதுமக்கள் எச்சரிக்கையுடன் நடந்து கொள்ள வேண்டும் என பிராந்திய சுகாதார வைத்திய அதிகாரிகள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

இதற்கமைய செவ்வாய்க்கிழமை (16) கோட்டைக்கல்லாறு மகா வித்தியாலயத்தில் அதிபர் க.செல்வராசா தலைமையில் பிரதேச பொதுச் சுகாதார பரிசோதகர் ரி. கஜானன் வழிகாட்டலில் மாணவர்களுக்கு டெங்கு நுளம்பு தொடர்பான விழிப்புணர்வு துண்டுப் பிரசுரங்கள், ஆலோசனைகள் வழங்கப்பட்டன.

பெற்றோர், ஆசிரியர்கள், மாணவர்கள், கல்விசார ஊழியர்கள், அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் ஆகியோரினால் பாடசாலை சுற்றுப் புறச் சூழல் சிரமதானம் மூலம் துப்பரவு செய்யப்பட்டமை குறிப்பிடத் தக்கது.

**கல்முனையில்...**

கல்முனை மாநகர சபையினால் ஒழுங்கு செய்யப்பட்ட டெங்கு ஒழிப்பு வேலைத் திட்டம் நேற்று வெற்றிகரமாக முன்னெடுக்கப்பட்டது.

கல்முனை மாநகர ஆணையாளர் ஏ.எல்.எம். அஸ்மியின் ஆலோசனை, வழிகாட்டலில் பல இடங்களில் டெங்கு ஒழிப்பு சிரமதான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டன.

அத்துடன் மாநகர சபையின் பிரதான அலுவலக வளாகம், பழைய கட்டிடத் தொகுதி வளாகம், பொது நூலகங்கள் மற்றும் மாநகர சபையின் கீழ் உள்ள பொது இடங்களும் மாநகர சபை உத்தியோகத்தர்களினால் சிரமதானம் செய்யப்பட்டு, தூய்மைப்படுத்தப்பட்டன.

**அக்கறைப்பற்றில்...**

கிழக்கு மாகாணத்தில் மீண்டும் டெங்கு நோயின் தாக்கம் அதிகரித்து காணப்படுவதாக, அக்கரைப்பற்று சுகாதார வைத்தியதிகாரி டாக்டர் எம்.எப்.ஏ. காதர் தெரிவித்தார்.

அக்கரைப்பற்று சுகாதார வைத்தியதிகாரி அலுவலகம் மற்றும் மாநகர சபை, பிரதேச செயலகம் ஆகியன ஒன்றிணைந்து ஏற்பாடு செய்யப்பட்ட டெங்கொழிப்பு வேலைத்திட்டமும், டெங்கு நோய் தொடர்பான விழிப்புணர்வு கருத்தரங்கு அக்கரைப்பற்று மாநகர சபை கேட்போர் கூடத்தில் செவ்வாய்க்கிழமை (16) நடைபெற்றது. இதில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்து கருத்துத் தெரிவிக்கையில்,

கிழக்கு மாகாண ஆளுநரின் ஆலோசனைக்கமைய டெங்கு பரவுவதை கட்டுப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

அக்கரைப்பற்று பிரதேசத்தில் கடந்த காலங்களில் டெங்கு நோயின் தாக்கம் அதிகரித்து காணப்பட்ட போதிலும் அண்மைக் காலமாக குறைவடைந்துள்ளது. பூச்சி ஆய்வாளர்களின் ஆய்வுகளின் படி மீண்டும் அக்கரைப்பற்று பிரதேசத்தில் டெங்கு நோய் அதிகரிக்கக் கூடிய வாய்ப்புகள் காணப்படுவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

டெங்கு நோயினால் சிறுவர்கள், வயோதிபர்கள் மற்றும் நாட்பட்ட நோயாளிகள் ஆகியோர் அதிகமாக பாதிக்கப்படுகின்றனர். பொதுச் சுகாதார பரிசோதகர்கள், பொலிஸார் மற்றும் சிவில் பாதுகாப்பு குழுவினர், டெங்கொழிப்பு செயலணி, சமூக மட்ட தலைவர்கள் ஆகியோர் ஒவ்வொரு வீடு வீடாகச் சென்று டெங்கு நோய் தொடர்பாக மக்களுக்கு விழிப்பூட்டல் செய்து வருகின்றனர்.

கிழக்கு மாகாணக் கல்வி அமைச்சின் அறிவுறுத்தல்களுக்கமைவாக, கிழக்கு மாகாண பாடசாலைகளில் விசேட டெங்கு ஒழிப்பு வேலைத் திட்டம் அமுல்படுத்தப்பட்டுள்ளது.

இதற்கமைவாக, அக்கரைப்பற்று தேசிய பாடசாலையில் ஏற்பாடு செய்யப்பட்ட டெங்கு ஒழிப்பு சிரமதான வேலைத் திட்டம் நேற்று

பாடசாலை வளாகம் மற்றும் சுற்றுப் புறச் சூழல் போன்றவற்றில் முன்னெடுக்கப்பட்டன.

**கிண்ணியாவில்...**

கல்வி அமைச்சின் சுற்றறிக்கைக்கு அமைய, நேற்று (16) கிண்ணியா அலிகார் மகா வித்தியாலய மாணவர்களால் தேசிய டெங்கு ஒழிப்பு வாரம் அனுஷ்டிக்கப்பட்டது.

இதன் போது, மாணவர்களால் விழிப்புணர்வு ஊர்வலம் ஒன்றும், சிரமதான வேலைத்திட்டம் ஒன்றும் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தன.

அதிபர் எம். எஸ். அகமட்ராஜ் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில், பாடசாலையில் உள்ளக வெளியக சூழல் துப்புரவு செய்யப்பட்டதுடன், டெங்கு நுளம்பின் ஆபத்து குறித்து மக்களுக்கு விழிப்பூட்டும் பொருட்டு, வீதி விழிப்புணர்வு ஊர்வலம் ஒன்றும் முன்னெடுக்கப்பட்டது.















## வரலாறு பாட கண்காட்சி

(முள்ளிப்பொத்தானை குறுப் நிருபர்)

"வாழ்வோடு இணைந்த வரலாறு" எனும் தொனிப்பொருளில் கிண்ணியா வலயத்துக்கு உட்பட்ட, முள்ளிப்பொத்தானை கோட்டத்துக்கு உட்பட்ட பாடசாலை மட்ட வரலாறு பாட கண்காட்சி அல் ஹிக்மா முஸ்லிம் மகா வித்தியாலயத்தில் திங்கட்கிழமை (15) நடைபெற்றது.

பாடசாலை மட்ட வரலாறு பாட கண்காட்சி சிறப்பான முறையில் நடைபெறுவதற்கு முழுமையான பங்களிப்பு நல்கிய பாடசாலை அதிபர் என்.எம்.அஹமட் நஷ்ரப், பிரதி அதிபர் எஸ்.எம்.சிபான், ஆசிரிய ஆலோசகர் வை. றாஷிக் பரீட், ஆக்கங்களை தயார்படுத்திய மாணவர்களை பாராட்டி கண்காட்சியை பார்வையிட்டனர்.

## மட்டு. மெதடிஸ்த கல்லூரி ஆசிரியர் பணியிலிருந்து ஓய்வு



(வெல்லாவெளி தினகரன் நிருபர்)

மட்டக்களப்பு மெதடிஸ்த மத்திய கல்லூரியின் ஆசிரியர் சரவணபவா சிற்சபேசன் 32 வருடங்கள் ஆசிரியப் பணியிலிருந்து திங்கட்கிழமை (15) ஓய்வு பெற்றார்.

இவர் நாவிதன்வெளி வேப்பையடி வாணி வித்தியாலயம்,சொறிக் கல்முனை திருச்சிலுவை மகா வித்தியாலயம், மட்டக்களப்பு மெதடிஸ்த மத்திய கல்லூரி போன்ற பாடசாலைளில் ஆசிரியப் பணியை முன்னெடுத்து, புலமைப்பரிசில் பரீட்சைக்கு தோற்றும் மாணவர்களுக்கு சிறப்பான கற்பித்தலை மேற்கொண்டு அதிகமான மாணவர்களை சித்தியடைய வைத்துள்ளார்.

இவருக்கான பிரியாவிடை நிகழ்வு பாடசாலை அதிபர் இ.பாஸ்கர் தலைமையில் நடைபெற்ற போது, மாணவர்கள் மலர்மாலை அணிவித்து, ஆசிரியர்களினால் பொன்னாடை போர்த்தி கௌரவிக்கப்பட்டார்.

## மின் கட்டணம் செலுத்தாதோரின் மின் இணைப்பு துண்டிப்பு

(ஒலுவில் விசேட நிருபர்)

இலங்கை மின்சார சபையின் கல்முனை பிராந்திய மின் பொறியியலாளர் பிரிவுக்குட்பட்ட பிரதேசங்களில் மாதாந்த மின் கட்டணத்தை செலுத்தாத மின் பாவனையாளர்கள் மின் நிலுவைக் கட்டணத்தை செலுத்துமாறு, கல்முனைப் பிராந்திய பிரதான மின் பொறியியலாளர் அறிவித்துள்ளார்.

மின்சாரக் கட்டணம் நிலுவையிலுள்ள சம்மாந்துறை, கல்முனை, சாய்ந்தமருது, மருதமுனை, காரைதீவு, நிந்தவூர், மாளிகைக் காடு, ஒலுவில், பாலமுனை, அட்டாளைச்சேனை ஆகிய பிரதேச மின் பாவனையாளருக்கே இவ் அறிவித்தல் விடுக்கப்பட்டுள்ளது.

ஒரு மாதத்திற்கும் மேலான கட்டணத்தை கொண்டிருப்பவர்களின் மின் துண்டிப்பு செய்யப்படவுள்ளதோடு, அவ்வாறு இணைப்பு துண்டிக்கப்படுமிடத்தில் மீள் இணைப்பை ஏற்படுத்துவதற்காக முற்று முழுதான மின் நிலுவைக் கட்டணம், தண்டப்பணம் மற்றும் மீள் இணைப்புக் கட்டணம் என்பன செலுத்த வேண்டுமெனவும் அவ் அறிவித்தலில் தெரிவிக்கப் பட்டுள்ளது.

மாதாந்த மின்சாரப் பட்டியலில் காணப்படும் நிலுவையினை உடனடியாக செலுத்தி மின் துண்டிப்பை தவிர்த்துக் கொள்ளுமாறு மின் பாவனையாளர்கள் கேட்கப்பட்டுள்ளனர்.

இது தொடர்பான பொது அறிவித்தல் ஒலிபெருக்கிகள் ஊடாக விடுக்கப்பட்டு வருகின்றது.

## ஒரு வழிப்பாதையாக மாற்றுமாறு கோரிக்கை

(அக்கரைப்பற்று வடக்கு தினகரன் நிருபர்)

அக்கரைப்பற்று மாநகர சபைக் குட்பட்ட ஆயிஸா பாலிகா மகளிர் கல்லூரி, அக்கரைப்பற்று ஆண்கள் வித்தியாலயம் மற்றும் முனவ்வறா கனிஷ்ட கல்லூரி ஆகிய பாடசாலைகள் அருகருகே அமைந்திருப்பதன் காரணமாக, பாடசாலைகள் ஆரம்பிக்கின்ற போதும் முடிவடைகின்ற போதும் வாகன நெரிசல் காரணமாக இப்பகுதி வீதிகள் அனைத்தும் ஸ்தம்பிதம் அடைவதோடு, மட்டுமன்றி வாகன விபத்துக்களும் அடிக்கடி இடம் பெறுவதாக இப்பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர்.

இப்பாதைகளுக்கு மாற்றீடாக பொதுமக்களுக்கு மேற்குறிந்த பாடசாலைகள் அமைந்துள்ள வீதிகளின் போக்குவரத்து ஒழுங்குகளை மாற்றி அமைப்பதன் மூலம் இலகுவான அடிப்படையில் இதற்கான தீர்வினைப் பெற்றுக்கொள்ள முடியும் எனவும் அப்பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர்.

## மீன், மரக்கறி விலைகள் அதிகரிப்பு

(அட்டாளைச்சேனை மத்திய நிருபர்)

அம்பாறை மாவட்டத்தில் மீன், மரக்கறி, காய்கறி என்பனவற்றின் விலைகள் அதிகரித்துக் காணப்படுகின்றன. திடீர் விலை அதிகரிப்புக் காரணமாக நுகர்வோர், அதிகம் சிரமங்களை எதிர்கொள்வதாக கவலை தெரிவிக்கின்றனர். உள்ளூர் காய்கறிகள், தக்காளி, இஞ்சிக் கிழங்கு, என்பனவற்றின் விலைகள் வெகுவாக அதிகரித்துள்ளன. விலை அதிகரிப்புக் காரணமாக மக்கள் காய்கறிகளின் கொள்வனவைக் குறைத்துள்ளதுடன், முடிந்தளவு நுகர்வையும் தவிர்த்து வருகின்றனர். உள்ளூரில் உற்பத்தி செய்யப்படும், வெண்டி, பயற்றை, அவரை, இலைக்கறி வகைகள் என்பனவற்றின் விலைகளும் அதிகரித்துள்ளன.



கல்முனை துரைவந்தியமேடு அரசினர் தமிழ் கலவன் பாடசாலையில் ஆசிரியையாக பணியாற்றி ஆசிரிய சேவையில் இருந்து ஓய்வு பெற்ற திருமதி. கிருபாதேவி இராமலிங்கத்திற்கான சேவைநலன் பாராட்டு விழா அதிபர் செல்லையாபேரின்பராசா தலைமையில் திங்கட்கிழமை (15) இடம்பெற்றபோது.

(படம்: துறைநீலாவணை நிருபர்)



முள்ளிவாய்க்கால் நினைவுக்கஞ்சி பரிமாறும் நிகழ்வு திருக்கோணமலை சல்லி கிராமத்தில் நேற்று (16) இடம்பெற்றது. இதன்போது பொது மக்கள் உட்பட வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளும் கலந்து கொண்ட போது.

(படம்: கந்தளாய் தினகரன் நிருபர்)

## கிராமத்துக்குள் உட்புகுந்த கடல்நீர்

(பெரியபோரதீவு தினகரன் நிருபர்)

களுதாவளை பகுதிக்குள் திங்கட்கிழமை (15) கடல் நீர் திடீரென கிராமத்துக்குள் வருவதை அவதானித்த மீனவர்கள், தமது தோணி, படகுகள், உள்ளிட்ட மீன்பிடி உபகரணங்களை பாதுகாப்பான இடத்திற்கு அப்புறப்படுத்தினர். வருடாந்தம் இக்காலப்பகுதியில் கடல்நீர் பெருக்கெடுப்பதாகவும், அது இம்முறை சற்று அதிகமாகக் காணப்படுவதாக மீனவர்கள் தெரிவிக்கின்றனர்.

இதேவேளை களுவாஞ்சிகுடி, ஓந்தாச்சிமடம், தேத்தாதீவு மற்றும் செட்டிபாளையம் போன்ற பல பகுதிகளிலும் இவ்வாறு கடல் நீர் கிராமங்களை நோக்கி உட்புகுந்துள்ளதாக மக்கள் தெரிவிக்கின்றனர்.

OBSERVER JOBS
BREAKING BOUNDARIES
THE COUNTRY'S LARGEST RECRUITMENT DATABASE
FOR JOBSEEKERS
www. observerjobs. lk

## போதனா வைத்தியசாலை - கராபிட்டிய

# விலைமனுக்கோரல்

கராபிட்டிய போதனா வைத்தியசாலையின் கீழ் குறிப்பிடப்படும் நிர்மாணத்திற்காக தகைமையுள்ள ஒப்பந்தக்காரர்களிடமிருந்து முத்திரைக் குறியிடப்பட்ட விலைமனுக்களை கோருவதற்கு வைத்தியசாலையின் பணிப்பாளரினால் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இதற்கான அனைத்து விலைமனுக்களும் இரண்டு பிரதிகளில் ஏற்றுக்கொள்ளப்படும்.

| தொடர் இலக்கம் | கருமத்தின் பெயர் | விண்ணப்ப தாரரின் தகைமை | மீளளிக்கப் படாத படிவக் கட்டணம் | கேள்விப் பிணைத் தொகை | ஆரம்ப மதிப்பீட்டு செலவினம் (மில்லியன்) |
|---|---|---|---|---|---|
| 1 | மின் பிறப்பாக்கி இயந்திரத்திற்காக அறையொன்றை நிர்மாணித்தல் | C6 அல்லது C7 | 3,500.00 | 100,000.00 | 10 |

01. இதற்காக அலுவலகத்தில் வழங்கப்படும் மாதிரிப்படிவங்களில் மாத்திரம் விலைமனுக்களைச் சமர்ப்பித்தல் வேண்டும்.
02. விலைமனுக்கோரலுக்கான ஆவணங்களை மீளளிக்கப்படாத பிணைத்தொகையைச் செலுத்தி வார வேலை நாட்களில் 2023.05.30 வரை மு.ப.9.00 முதல் பி.ப.3.00 வரை வைத்தியசாலையின் அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.
03. 2023.05.31 அன்று மு.ப.10.00 இற்கு விலைமனுக்கள் திறக்கப்படுவதனால் அதற்கு முன்னர் கிடைக்கக் கூடியவாறு அவை, "பணிப்பாளர், போதனா வைத்தியசாலை, கராபிட்டிய" என்ற முகவரிக்கு பதிவுத்தபாலில் அல்லது இவ் வைத்தியசாலையின் கணக்காளரின் அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள பெறுகைப் பெட்டியில் நேரடியாகச் சேர்த்தல் முடியும். தாமதமாகக் கிடைக்கப்பெறும் விலைமனுக்கள் நிராகரிக்கப்படும். விலைமனுக்கள் திறக்கப்படும் வேளையில் விண்ணப்பதாரர்கள் அல்லது அவர்களின் அதிகாரம் பெற்ற பிரதிநிதிகள் சமுகமளித்திருக்கலாம்.
04. விலைமனுக்களை அடக்கும் தபாலுறையின் இடதுபக்க மேல் மூலையில், விலைமனு இலக்கம் மற்றும் குறித்த கருமத்தின் பெயர் தெளிவாக குறிப்பிடப்படல் வேண்டும்.
05. எந்தவொரு விலைமனுவையும் ஏற்றுக்கொள்ளும் அல்லது நிராகரிக்கும் உரிமை பெறுகைக்குழுவிற்கு உரித்தாகும். விபரங்களை 091-2232250 தொலைபேசி இலக்கத்தின் மூலம் பெற்றுக்கொள்ளலாம்.

**பணிப்பாளர் - போதனா வைத்தியசாலை**
**கராபிட்டிய - காலி**
**2023.05.17**

# பெறுகை அழைப்பு

## முல்லேரியா — கொழும்பு கிழக்கு ஆதார வைத்தியசாலையின் உணவக சேவையை நடத்திச் செல்லல் — 2023/2024

முல்லேரியா கொழும்பு கிழக்கு ஆதார வைத்தியசாலையின் பிரதேச பெறுகைக் குழுவின் தலைவரால் 2023/2024 ஆண்டுடன் சம்பந்தப்பட்ட வைத்தியசாலையின் உணவகத்தை நடத்திச் செல்வதற்காக தகைமையுள்ள கேள்விதாரர்களிடம் கேள்விகள் கோரப்படுகின்றன.

- இது பற்றிய ஆர்வம் காட்டுகின்ற நபர்களுக்கு கேள்வி ஆவணக் கட்டணமாக ரூ. 2000.00 மீளளிக்கப்படாத கேள்விப்பத்திரக் கட்டணத்தை இவ் வைத்தியசாலையின் கணக்காளரிடம் செலுத்தி பெற்றுக் கொண்ட பற்றுச் சீட்டுடன் தமது தேசிய அடையாள அட்டையைச் சமர்ப்பித்து 2023.05.18 முதல் 2023.06.08 வரை சாதாரண அலுவலக நாட்களில் மு.ப. 9.00 முதல் பி.ப. 3.0 வரை தலைமையகத்தில் கேள்வி ஆவணங்களைப் பெற்றுக் கொள்ள முடிவதுடன் கட்டணம் இன்றியே குறித்த ஆவணங்களைப் பரீட்சிக்கலாம்.
- முறையாகப் பூத்தி செய்யப்பட்ட கேள்விப் பத்திரங்கள் 2023.06.08 மு.ப. 10.00 இற்கு அல்லது அதற்கு முன் கிடைக்குமாறு தலைவர், பிரதேச பெறுகைக் குழு, கொழும்பு கிழக்கு ஆதார வைத்தியசாலை, முல்லேரியா என்ற முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பலாம். அல்லது இவ் வைத்தியசாலையின் பணிப்பாளர் பணிமனையில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிடலாம்.
- கேள்விகள் ஏற்றுக் கொள்ளல் முடிவடைந்தவுடன் அவ் வேளையிலேயே கேள்விகள் திறக்கப்படுவதுடன் கேள்விதாரருக்கு அல்லது அவரது அதிகாரமளிக்கப்பட்ட பிரதிநிதியொருவருக்கு அவ் வேளையில் சமுகமளிக்கலாம்.
- கேள்வி ஆவணங்களை 02 பிரதிகளுடன் சமர்ப்பித்தல் வேண்டும். அத்துடன் அதனை வேறு வேறு உறைகளில் இட்டு மூலப்பிரதி மற்றும் நகல் பிரதியனெ பெயர் குறிப்பிட்டு தனி உறையில் இட்டு அங்கு 'முல்லேரியா - கொழும்பு கிழக்கு ஆதார வைத்தியசாலையின் உணவக சேவையை வழங்குதல் - 2023/2024 என்று குறிப்பிடுதல் வேண்டும்.
- அரச ஒப்பந்த நிபந்தனைகளை மீறி அபகீர்த்தியானோர் பட்டியலிடப்பட்டுள்ள நபர்களுக்கு கேள்விப் பத்திரங்கள் விநியோகிக்கப்படமாட்டாது
- குறித்த கேள்விப் பத்திரங்களை முழுமையாக ஏற்றுக் கொள்ளல் அல்லது நிராகரிக்கும் உரிமை பெறுகைக் குழுவிற்கு உரித்தாவதுடன் பெறுகைக் குழுவின் தீர்மானம் இறுதித் தீர்மானமாகும்.
- மேலதிக விபரங்களை அறிந்து கொள்வதற்காக கொழும்பு - கிழக்கு ஆதார வைத்தியசாலையின் கீழ்க்காணும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளுங்கள்.

தொ. பே. இல. 011-2578226, 011-2549390

**தலைவர்,**
**பிரதேச பெறுகைக் குழு,**
**கொழும்பு கிழக்கு ஆதார வைத்தியசாலை,**
**முல்லேரியா.**

2023.05.16

## இலங்கை தேசிய வைத்தியசாலை
## கொழும்பு -10
# பெறுகை அறிவித்தல்

இலங்கை தேசிய வைத்தியசாலையில் கீழே குறிப்பிடப்படும் வேலைகளை மேற்கொள்வதற்காக ICTAD இல பதிவு செய்துள்ள ஒப்பந்தக்காரர்களிடமிருந்து பொறியிடப்பட்ட விலைமனுக்கள் கோரப்படுகின்றன. 2023.05.17ம் திகதி மு.ப. 9.00 முதல் 2023.06.06 பி.ப. 3.00 மணி வரை இலங்கை தேசிய வைத்திய சாலையின் காசாளர் பிரிவிற்கு ஓர் மீளளிக்கப்படாத கட்டணமாக ரூபா 2500/- செலுத்திய பின்னர் பொது நிர்வாக அலுவலகத்திலிருந்து விலைமனு ஆவணங்களைக் கொள்வனவு செய்யலாம்.

முழுமையாக பூர்த்தி செய்த விலைமனுக்களை ஓர் கடித உறையில் உள்ளடக்கி மற்றும் பொறியிட்டு மற்றும் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் வேலையின் பெயரைக் குறிப்பிட்டு, 2023.06.07ம் திகதி மு.ப. 10.00 மணிக்கு முன் கிடைக்குமாறு கீழ்க் காணும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும். அல்லது பிரதம கணக்காளரின் அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்வி பெட்டியில் உள்ளிடலாம். கிடைக்கப்பெற்ற விலைமனுக்கள் மூடப்பட்ட பின்னர் உடனடியாகத் திறக்கப்படும். இந்த வேளையில் ஒப்பந்தக்காரர்கள் அல்லது அவர்களது அங்கீகரிக்கப்பட்ட பிரதிநிதிகள் சமுகமளிக்கலாம்.

| இல. | வேலை | மதிப்பிடப் பட்ட செலவு ரூ. சதம் | தரம் | மீளளிக்கப் படும் விலை மனுப் பிணை ரூ. சதம் | மீளளிக்கப் படாத கேள்விக் படிவக் கட்டணம் ரூ. சதம் | குறிப்புகள் |
|---|---|---|---|---|---|---|
| 01 | வார்ட் இல. 43இல் நோயாளர் கழிப்பறை புதுப்பித்தல் - (AC-1/23/2023) | 6,907,917.50 | விசேடம் கட்டிடம் தரம் C7 அல்லது அதற்கு மேல் | 103,600.00 | 2500.00 | விலைமனுக்களை சேகரிக்கும் போது மதிப்பிடப்பட்ட விலைமனு ரூபா 5,000,000/- இற்கு மேற்படும் போது பொது ஒப்பந்த பதிவாளரிடம் இருந்து ஓர் சான்றிதழை சமர்ப்பித்தல் வேண்டும். |
| 02 | மின் பிறப்பாக்கிக்கான கூரையை நிர்மாணித்தல் - (AC-1/21/2023) | 5,513,278.36 | விசேடம் கட்டிடம் தரம் C7 அல்லது அதற்கு மேல் | 83,000.00 | 2500.00 | |
| 03 | வார்ட் இல. 39இல் சீலிங் அகற்றுதல், அமைத்தல் - (AC-1/16/2023) | 6,627,200.00 | விசேடம் கட்டிடம் தரம் C7 அல்லது அதற்கு மேல் | 99,000.00 | 2500.00 | |
| 04 | பண்டாரநாயக்க கட்டிடத்தின் தனிப்பட்ட கிளையை விஸ்தரித்தல் - (AC-1/28/2023) | 3,534,170.00 | விசேடம் கட்டிடம் தரம் C8 அல்லது அதற்கு மேல் | 53,000.00 | 2500.00 | |
| 05 | 79 D/Q இல் நீர்த்தாங்கியை வழங்கி நிறுவுதல் மற்றும் உட்கட்டமைப்பு திருத்தங்கள் - (AC-1/29/2021) | 8,247,449.00 | விசேடம் கட்டிடம் தரம் C7 அல்லது அதற்கு மேல் | 125,000.00 | 2500.00 | |

**மருத்துவர் W.K. விக்ரமசிங்ஹ,**
**தலைவர், பெறுகைக்குழு,**
**இலங்கை தேசிய வைத்தியசாலை,**
**கொழும்பு -10.**

The largest Job Market in Sri Lanka
www.observerjobs.lk




Widest reach for your employment advertisement
Email : info@observerjobs.lk Hotline: 1949
For more information
0777270012 / 0777270000 / 0112429314

# கேள்வி அறிவித்தல்

## இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசு
## வலிகாமம் கிழக்கு பிரதேச சபை, புத்தூர், வட மாகாணம்.

## உழவு இயந்திரங்கள் பெறுகை

1. கீழ்வரும் அட்டவணையில் விபரிக்கப்பட்டுள்ள புதிய உழவு இயந்திரங்கள் பெறுகைக்காக தகுதி மற்றும் தகைமை வாய்ந்த கேள்விதாரர்களிடமிருந்து முத்திரை பொறிக்கப்பட்ட கேள்விகளை **வலிகாமம் கிழக்கு பிரதேச சபை, புத்தூர்,** வட உமாகாணம் சார்பில் **உள்ளூர் அதிகார பெறுகைக் குழு தலைவர்** கோருகின்றார்.
2. தேசிய போட்டி கேள்வி கோரல் நடைமுறைக்கு அமைவாகவே கேள்வி கோரப்படுகின்றது.
3. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் செயலாளர், வலிகாமம் கிழக்கு பிரதேச சபை, புத்தூர் (தொலைபேசி: 021 205 8867) இல் இருந்து மேலதிக தகவல்களை **2023.05.17**ஆம் திகதியிலிருந்து **2023.05.31**ஆம் திகதி வரை **09:00** மணி முதல் **15:30** மணி வரையான காலப்பகுதியில் பொது வேலை நாட்களில் பெற்றுக்கொள்ளலாம். அத்துடன் மேற்கூறிய இடத்தில் அதே காலப் பகுதியில் மேற்குறித்த நேரத்தில் கேள்வி ஆவணங்களை பார்வையிடலாம்.

   **தொலைபேசி: 021 205 8867, 021 205 8883**
4. குறிப்பிட்ட வகை துறை குறியீட்டுப்பெயரில் விற்பனை மற்றும் நாடளாவியரீதியில் பராமரித்தல் தொடர்பாக குறைந்தபட்சம் மூன்று வருட அனுபவத்தினை கொண்டிருத்தல் வேண்டும். மேலதிக தகவல்கள் கேள்வி ஆவணத்தில் வழங்கப்படுகின்றது.
5. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் எழுத்து மூலமான விண்ணப்பத்தினை அலுவலகத்தில் சமர்ப்பிப்பதன் மூலம் பூரணமான ஆங்கில மொழியில் அமைந்த கேள்வி ஆவணமொன்றை **வலிகாமம் கிழக்கு பிரதேச சபை, புத்தூர்** எனும் இடத்திலிருந்து **2023.05.17** ஆம் திகதியிலிருந்து **2023.05.31** ஆம் திகதி வரை காலை **09:00** மணியிலிருந்து பிற்பகல் **15.30** மணிக்கிடையில் மீளளிக்கப்படாத கட்டணமாக ரூபா. **2,000.00** செலுத்தி பெற்றுக்கொள்ளலாம். இத்தொகை பணமாகச் செலுத்தப்பட வேண்டும்.
6. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் கேள்வியை இரு பிரதிகளில் தயாரித்து மூலப்பிரதி, துணைப்பிரதியை தனித்தனி உறைகளிலிட்டு, இடதுபக்க மேல்மூலையில் கேள்வி ஆவண இலக்கத்தினை குறிப்பிட்டு **தலைவர், உள்ளூர் அதிகார பெறுகைக் குழு, வலிகாமம் கிழக்கு பிரதேச சபை, புத்தூர்** என்னும் முகவரிக்கு **2023.06.01** ஆம் திகதி **14:00** மணிக்கு முன்பதாக கிடைக்கக்கூடியதாக அனுப்பிவைத்தல் வேண்டும். இலத்திரனியல் முறையிலான பெறுகைகள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது. பிந்திய கேள்விகள் நிராகரிக்கப்படும். கேள்வியானது, கேள்வி நேரம் முடிவடைந்த உடனேயே வருகை தரும் கேள்விதாரர் அல்லது அவர்களின் பிரதிநிதிகள் முன்னிலையில் திறக்கப்படும்.
7. கேள்விகள் தொடர்பான முன்னோடிக் கலந்துரையாடல் **2023.05.23**ஆம் திகதி **14:00** மணிக்கு **வலிகாமம் கிழக்கு பிரதேச சபை, புத்தூர்** தலைமையலுவலகத்தில் நடைபெறும். ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் அனைவரும் இக்கலந்துரையாடலில் பங்குபற்றலாம்.
8. கேள்வி விண்ணப்பங்கள் சமர்ப்பிக்கப்படும் இறுதித்திகதியிலிந்து **77 நாட்கள்** வரை செல்லுபடியாகும். அத்துடன் கேள்விப்பிணை வைப்பானது நிபந்தனையற்றதும் தேவைக்கேற்ப வங்கி உத்தரவாதமாகக் காணப்படுவதுடன் **2023.09.14**ஆம் திகதி வரைசெல்லுபடியானதாக இருத்தல் வேண்டும்.
9. கேள்விப் பிணை வைப்புத்தொகையானது கீழ் அட்டவணையில் காட்டப்பட்டுள்ளவாறு அமையும்.
10. தெரிவு செய்யப்படும் வழங்குநர் **வலிகாமம் கிழக்கு பிரதேச சபை, புத்தூர்** என்னும் முகவரியில் உழவு இயந்திரங்களை விநியோகித்தல் வேண்டும்.

| தொ. இல. | கேள்ளி ஆவண இலக்கம் | பொருளின் பெயர் | ஒப்பந்தக் காலம் | கேள்வி செல்லு படிக் காலம் | கேள்விப் பிணை | |
|---|---|---|---|---|---|---|
| | | | | | தொகை | செல்லுபடி யாகும் காலம் |
| 01 | NP/14/41(13)/03/01/15/ Tractor Purchase /2023 | Tractors (04 nos) | 01 Month | 77 Days | 275,000.00 | 14.09.2023 |

**தலைவர்**
**உள்ளூர் அதிகார சபை பெறுகைக் குழு**
**வலிகாமம் கிழக்கு பிரதேச சபை, புத்தூர்**
**வடக்கு மாகாணம்.**
17.05.2023

## கடற்றொழில் அமைச்சு
## வரையறுக்கப்பட்ட இலங்கை மீன்பிடி துறைமுகங்கள் கூட்டுத்தாபனம்

# மனு அறிவித்தல்

## வரையறுக்கப்பட்ட இலங்கை மீன்பிடி துறைமுகங்கள் கூட்டுத்தாபனம் உள்ள பிரதான அலுவலக கட்டிடத்தின் முன்மொழியப்பட்ட கூரை சீரமைப்பு பணி

### CFHC/PD/T/ROOF RNVTN/HO/2023/24

**கொழும்பு 15, ரொக் ஹவுஸ் ஒழுங்கையில் இல-15** இல் காணப்படும் வரையறுக்கப்பட்ட இலங்கை மீன்பிடி துறைமுகங்கள் கூட்டுத்தாபனத்தின் தலைவரினால் **2023.06.01** ஆம் திகதி **பி.ப.02.00** மணி வரை முத்திரையிடப்பட்ட விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

| இல. | ஒப்பந்த இலக்கம் | விபரம் | பிணைமுறித் தொகை | மீள் செலுத்தப்படாத மனுக் கட்டணம் (ரு) | மூடப்படும் திகதி | CIDA பதிவு |
|---|---|---|---|---|---|---|
| 01 | **CFHC/PD/T/ROOF RNVTN/HO/2023/24** | CFHC இல் உள்ள பிரதான அலுவலக கட்டிடத்தின் முன்மொழியப்பட்ட கூரை சீரமைப்பு பணி | ரு.60,000.00 | ரு.3,500/- | 2023/06/01 | C8, C7 மற்றும் C6 |

இதற்காக ஆர்வம் காட்டும் மனுதாரர்கள் **2023.05.18** ஆம் திகதியிலிருந்து **2023.05.31** ஆம் திகதி **மு.ப.09.00 தொடக்கம் பி.ப.03.00** வரையான காலப்பகுதியினுள் மேற்கூறப்பட்ட மீளச்செலுத்தப்படாத கட்டணத்துடன் எழுத்து மூல விண்ணப்பத்தை முகாமையாளர் **(பெறுகை), கொழும்பு 15, ரொக் ஹவுஸ் ஒழுங்கையில் இல-15 இல் காணப்படும் வரையறுக்கப்பட்ட இலங்கை மீன்பிடி துறைமுகங்கள் கூட்டுத்தாபனத்தில்** கையளிப்பதன் மூலமாக ஆங்கில மொழியினாலான விண்ணப்பப்படிவத்தினை பெற்றுக்கொள்ள முடியும். கட்டண முறையானது பணமாக செலுத்தப்பட வேண்டும்.

| கேள்விப்பத்திரங்கள் திறத்தல் | - 2023.06.05 பி.ப. 2.30 இற்கு |

கேள்வி விண்ணப்பங்கள் வேறு வேறாக 02 பிரதிகளுடன் (மூலப் பிரதி/நகல் பிரதி) விநியோகிக்கப்படுவதுடன் அப் பிரதிகளை மூலப்பிரதி மற்றும் நகல் பிரதிகளை இரு உறைகளில் இட்டு பொறியிட்டு கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் ‘மூலப்பிரதி/நகல் பிரதி - குப்பைகளை போக்குவரத்து செய்யும் சேவைகளை வழங்குதல்’ என்று குறிப்பிட்டு தலைவர், ஹோமாகம பிரதேச சபை, நீதிமன்ற வீதி, ஹோமாகம என்ற முகவரிக்கு பதிவுத் தபாலில் குறித்த நேரத்திற்கு அனுப்பலாம். அல்லது சபையின் செயலாளரின் உத்தியோக பூர்வ அறையில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிடலாம்.

சமர்ப்பிக்கப்படும் கேள்வி பற்றிய இறுதித் தீர்மானம் ஹோமாகம பிரதேச சபைக்கு உரித்தாவதுடன் இது பற்றிய மேலதிக விபரங்களை ஹோமாகம பிரதேச சபையின் கீழ்க்காணும் இலக்கத்தை அழைத்து பெற்றுக் கொள்ளலாம்.

| | |
|---|---|
| கேள்வி விண்ணப்பப்படிவக் கட்டணங்கள் | - ரூ. 2000.00 |
| மீளளிக்கப்படும் வைப்புத் தொகை | - ரூ. 200,000.00 (இத்தொகையை கேள்வி விண்ணப்பங்கள் பெற்றுக் கொள்ளும் போது வைப்புச் செய்தல் வேண்டும்) |

**தொலைபேசி இலக்கம் 011 2855230**
**பெக்ஸ் 011 2857169**

**செயலாளர்,**
**பிரதேச சபை, ஹோமாகம.**

2023 மே 15

# மத்திய சுற்றாடல் அதிகார சபை

## உத்தேசிக்கப்பட்டுள்ள காணிகளை துண்டு பிரித்தல் திட்டம் - எகொடவத்த, அம்பிட்டிய, கண்டி

## ஆரம்ப சுற்றாடல் ஆய்வறிக்கை (ஆ.சு.ஆ) இறுதித் தீர்மான பொது அறிவித்தல்

### தேசிய சூழல் சட்டத்தின் பிரிவு 23 வ (4) இன் கீழான அறிவித்தல்

மேற்கூறப்பட்ட ஆரம்ப சுற்றாடல் பரிசோதனை அறிக்கையை பூரண ஆய்வின் பின்னர் மத்திய சுற்றாடல் அதிகார சபையானது 1993 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க தேசிய சூழல் சட்டம் மற்றும் 22 நவம்பர் 2000 திகதியன்று வெளியிடப்பட்ட 1159/22 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தலின் மூலம் திருத்தியமைக்கப்பட்ட சட்டம் (கருத்திட்டங்களை அங்கீகரிப்பதற்கான அறிவித்தல் முறை) 9 (i) இற்கமைவாக **இல: 341/21, வினி.்.ப்ரெட்எஸ்டேட், மரதகஹமுல.** விலாசத்தை கொண்ட **“மந்தாகினி” ப்ரொபேர்ட்டிஸ் தனியார் நிறுவனத்தின், பிராந்திய முகாமையாளர்** அவர்களுக்கு நடைமுறைபடுத்துவதற்கான அங்கீகாரத்தை குறித்துரைக்கப்பட்ட நிபந்தனைகள், விசேட விதிகளுக்கமைய வழங்க தீர்மானிக்கப்பட்டுள்ளதுஎன்பதை இத்தால் பொதுமக்கள் யாவருக்கும் அறியத்தருகின்றேன். 2000ஆம் ஆண்டின் 53வது இலக்க (திருத்தியமைக்கப்பட்ட) தேசிய சுற்றாடல் சட்டத்தின் பொது ஆவணமான மேற்கூறப்பட்ட ஆரம்ப சுற்றாடல் ஆய்வறிக்கையானது மத்திய சுற்றாடல் அதிகாரசபையின் தேசிய சுற்றாடல் தகவல் மையத்தில் வைக்கப்பட்டுள்ளது.

**பணிப்பாளர் நாயகம்**
**மத்திய சுற்றாடல் அதிகாரசபை**
**“பரிசர பியச”**
**இல 104 டென்சில் கொப்பேகடுவ மாவத்தை,**
**பத்தரமுல்ல.**

# வாகன விற்பனை

| மூன்று சக்கர வாகனம் | மேக்/மாடல் | ஆண்டு | முற்றம் |
|---|---|---|---|
| ABP-7924 | பஜாஜ் | 2017 | ராகம-2 |
| ABF-9738 | பஜாஜ் | 2015 | ராகம-2 |
| ABD-0687 | பஜாஜ் | 2015 | ராகம |
| ABD-5367 | பஜாஜ் | 2015 | அனுராதபுரம் |
| ABC-6080 | பஜாஜ் | 2015 | குருநாகல் |
| AAR-8633 | பஜாஜ் | 2014 | ராகம |
| AAW-4480 | பஜாஜ் | 2014 | அம்பாரா |
| AAT-5537 | பஜாஜ் | 2014 | நுவரெலியா |
| AAW-1546 | பஜாஜ் | 2014 | அனுராதபுரம் |
| AAH-9946 | பஜாஜ் | 2013 | ராகம |
| YW-2432 | பஜாஜ் | 2012 | ராகம |
| YZ-2026 | பஜாஜ் | 2012 | அம்பாரா |
| AAD-2402 | பஜாஜ் | 2012 | பாணடுரா |
| AAD-7664 | பஜாஜ் | 2012 | திருகோணமலை |
| YL-9654 | பஜாஜ் | 2011 | ராகம |
| YM-8470 | பஜாஜ் | 2011 | ராகம-2 |
| YO-2197 | பஜாஜ் | 2011 | ராகம |
| YQ-0485 | டி.வி.எஸ் | 2011 | அம்பாரா |
| QU-8329 | பஜாஜ் | 2009 | கண்டி |

| மோட்டார் லாரி | மேக்/மாடல் | ஆண்டு | முற்றம் |
|---|---|---|---|
| JZ-7349 | மிட்சுபிஷி | 1996 | கண்டி |
| GE-5801 | மஸ்தா | 1995 | ராகம |

| ஒற்றை வண்டி | மேக்/மாடல் | ஆண்டு | முற்றம் |
|---|---|---|---|
| DAA-8945 | டாடா | 2015 | குருநாகல் |

| மோட்டார் வாகனம் | மேக்/மாடல் | ஆண்டு | முற்றம் |
|---|---|---|---|
| CBB-1398 | டொயோட்டா | 2017 | ராகம |
| CAS-0815 | ரெனால்ட் | 2016 | பாணடுரா |
| CAK-9880 | சுசுகி | 2015 | ராகம |
| CAO-0112 | மைக்ரோ | 2015 | அனுராதபுரம் |
| CAO-0991 | FORD | 2015 | அம்பாரா |
| 65-8813 | நிசான் | 1997 | மாதரா |
| 17-7045 | நிசான் | 1987 | ராகம |

மேற்கண்ட வாகனங்களை யார்டுகளிலும் சோதனை செய்யலாம் அது ஏல அடிப்படையில் இருக்கும்

ராகம 0773 951 796
நுவரேலியா 0777 717 562
அனுராதபுரம் 0767 139 916
அம்பாரா 0773 547 556
குருநாகல் 0764 425 205
கண்டி 0773 972 860
பாணடுரா 0775 215 263
திருகோணமலை 0769 138 400
மாத்தறை 0743 601 121

# கண்டி மாநகர சபை

## 2023ஆம் அரை ஆண்டிற்கான வழங்குநர்களைப் பதிவு செய்தல்

2023 அரை ஆண்டின் பொருட்டு பின்வரும் வழங்கல்கள் மற்றும் சேவைகளை வழங்குவதற்காக வழங்குநர்களாகப் பதிவு செய்து கொள்வதற்காக உற்பத்தியாளர்கள், பதிவு செய்யப்பட்ட நிறுவனங்கள் மற்றும் நபர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**01. வழங்கல்கள்**

1. ஆயுர்வேத மருந்து வகைகள்
2. மேல்நாட்டு மருந்து வகைகள் மற்றும் மருத்துவ உபகரணங்கள்
3. தீயணைப்புக் கருவிகள் (பொருத்துதல் உட்பட)
4. பொதுவான களஞ்சியப் பொருட்கள் (இரும்பு, ஜீஐ குழாய்கள் மற்றும் உதிரிப்பாகங்கள், பிளாஸ்டிக் நீர்த்தாங்கி, கொம்போஸ்ட் பீப்பாய்கள் கூரைகள் போன்றன)
5. நிறப்பூச்சு வகைகள் மற்றும் அதனைச் சார்ந்த பொருட்கள்
6. சுகாதாரம் சார்ந்த உபகரணங்கள் (ஈர்க்கிள், தும்புத்தடி, பிரம்புக் கூடைகள், பிளாஸ்டிக் குப்பைக் கூடைகள், விம், ஹார்பிக், சவர்க்கார வகைகள், பைனோல், கையுறைகள்)
7. காலணிகள், சப்பாத்து, காலுறைகள் போன்றன
8. சீருடைக்குத் தேவையான துணிகள் மற்றும் டி சேர்ட்
9. விளையாட்டுப் பொருட்கள் உடற்பயிற்சி உபகரணங்கள்
10. டயர், டயர் டியூப் மற்றும் பெட்டறி (வாகனங்களுக்கானவை)
11. வாகனங்களுக்கான உதிரிப்பாகங்கள் (வேன், மோட்டார் சைக்கிள், டிராக்டர், கல் உருளை, டிப்பர், முச்சக்கர வண்டி, பகோ உட்பட சகல வாகனங்களுக்குமான பாவித்த மற்றும் புதிய உதிரிப்பாகங்கள்)
12. அலுவலக மின் உபகரணங்கள் (கூட்டல் இயந்திரம், கேத்தல், மின் விசிறிகள்)
13. கைவிரல் அடையாள இயந்திரங்கள் CCTV கெமரா மற்றும் அது சார்ந்த துணைப்பாகங்கள்
14. அலுவலக உபகரணங்கள் மரம் மற்றும் உருக்குத் தளபாடங்கள் (ராக்கைகள் / அலுமாரிகள் / மேசை / பைல் கெபினெட்டுகள், பிளாஸ்டிக் கதிரைகள் போன்றன)
15. புகைப்படப் பிரதி இயந்திரங்கள், தொலைநகல் இயந்திரங்கள், நகல் பிரதி இயந்திரங்கள்
16. மின்சார சேவைகளை வழங்குவதற்குத் தேவையான உபகரணங்கள் (வயர் / சுவிட்ச் / பல்ப் / பிளக் போன்றன)
17. அலுவலக காகிதாதிகள், கணனி ரிபன் கார்ட்ரிச், டோனர் போன்றன
18. அச்சு வேலைகள் (அச்சடிக்கப்பட்ட படிவங்கள் மற்றும் புத்தகங்கள், திகதி முத்திரைகள் மற்றும் இறப்பர் முத்திரைகள்)
19. கட்டிடப் பொருட்கள் (மணல் / கல் / மெட்டல் போன்றன)
20. ஹியூம் குழாய்கள், கொங்கிறீட் தூண்கள், எல்லைக் கற்கள், சீமெந்து புளொக் கற்கள், கொங்கிறீட் சார்ந்த உற்பத்திகள்
21. சீமெந்து, கொங்கிறீட் முன் கலவை (Ready mix), பிரிமிக்ஸ் போன்றன.
22. அரியப்பட்ட மரம் (பலகை, தீராந்தி போன்றன)
23. உராய்வுநீக்கி எண்ணெய் வகைகள்
24. இமல்ஷன் தார்
25. உரங்கள் மற்றும் இரசாயனப் பொருட்கள் (இரசாயன உரங்கள் மற்றும் மிருக உரங்கள்)
26. நீரை சுத்திகரிக்கும் இரசாயனப் பொருட்கள் (ஹைட்ரேட் லைம், அலுமினியம் சல்பேற், குளோரின், டீ.சீ.எல் தூள்கள் போன்றன)
27. நீரிறைக்கும் இயந்திரத்திற்கான பெயாரிங்
28. பீவீசீ உபகரணங்கள் (சீ.ஐ.ஜீ.ஐ. நீர்க்குழாய் துணைப்பாகங்கள் மற்றும் உதிரிப்பாகங்கள்)
29. நீர் மானிகள், நீரிறைக்கும் இயந்திரங்கள் / நீர் மோட்டர்கள், நீரைச் சுத்திகரிக்கும் மின் உபகரணங்கள் / நீர் சுத்திகரிப்பு முறைமைக்குத் தேவையான உபகரணங்கள் போன்ற பொருட்களுக்குத் தேவையான உதிரிப்பாகங்கள்
30. புத்தகங்கள் / புதினப் பத்திரிகைகள் / சஞ்சிகைகளைக் கொள்வனவு செய்தல்
31. பாதுகாப்பு உபகரணங்கள் (அங்கிகள், ஹெல்மெட் போன்றன)
32. தோட்டத்திற்குத் தேவையான மர வகைகள், மலர்க் கன்றுகள் மற்றும் புல் பற்றைகள்
33. மேற்கவிகைகள், கூடாரத் துணிகள் மற்றும் திரைச் சீலைகள் போன்றன.
34. பதக்கம், சின்னம், பித்தளைப் பெயர் பலகை, விருதுகள்
35. மின் வலுத் தொகுதி (மின் வான் டிரில் மெசின் போன்றன)

**02. சேவைகள்**

36. நீர்ப் பம்பிகள் / நீர் மோட்டர்கள் / நீரைச் சுத்திகரிக்கும் முறைமைகளின் திருத்த வேலைகள்
37. ரோணியோ இயந்திரங்கள் / வளிச்சீராக்கி இயந்திரங்கள் / தொலைநகல் இயந்திர திருத்தவேலைகள்
38. கணனி இயந்திரங்கள் மற்றும் அச்சுப்பொறிகளின் திருத்தவேலைகள்
39. கதிரை பின்னுதல் மற்றும் குஷன் செய்தல்
40. கைவிரல் அடையாள இயந்திரங்கள், CCTV கெமரா பழுதுபார்த்தல்கள்
41. வாகனங்களை வாடகைக்கமர்த்துதல் (டிராக்டர் / பயணிகள் வாகனங்கள் / டிப்பர் / கம்பெக்டர் வாகனம் / மரம் வெட்டும் இயந்திரம் போன்றன)
42. டயர்களை மீள நிரப்புதல் மற்றும் பழைய டயர்களைக் கொள்வனவு செய்தல்
43. இயந்திரங்கள் மற்றும் இயந்திரோபகரணங்களை வாடகைக்கு வழங்குதல்
44. சம்பத் பியஸ பொருட்களை விற்பனை செய்தல்
45. கெனபி கதிரை பீங்கான் கோப்பை போன்ற உற்சவப் பொருட்கள் வாடகைக்கு வழங்குதல்
46. ஏனையவை.

மேற்குறிப்பிடப்பட்ட ஒவ்வொரு வழங்கல் மற்றும் சேவையின் பொருட்டும் வெவ்வேறாக பதிவு செய்து கொள்வதற்காக ஒரு உருப்படியின் பொருட்டு 1150.00 ரூபா வீதி வரி உள்ளடங்கலான கட்டணம் அறவிடப்படும். 2023.05.17ஆம் திகதி முதல் 2023.06.09ஆம் திகதி வரையான அரச வேலை நாட்களில் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 3.30 மணி வரை விண்ணப்பப் படிவங்கள் விநியோகிக்கப்படும் இல்லையெனில் எமது இணையதளமான http://kandy.mc.gov.lk மூலம் விண்ணப்பத்தை பதிவிறக்கம் செய்துகொள்ளலாம். என்பதுடன் பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப்படிவங்களை ஏற்றுக்கொள்ளும் இறுதி நாள் 2023.06.12ஆம் திகதியாகும். விண்ணப்பப்படிவங்களைப் பெற்றுக்கொள்ளும் பொருட்டு வியாபாரப் பெயர்ப் பதிவுச் சான்றிதழின் பிரதியொன்று, வேண்டுகோள் கடிதம் மற்றும் வெட் வரி செலுத்துபவரானால் பதிவுச் சான்றிதழின் பிரதியொன்றையும் சமர்ப்பித்தல் வேண்டும்.

காசு செலுத்துதல் நாட்டிற்குள் அமைந்துள்ள இலங்கை வங்கிக் கிளையில் கண்டி மாநகர சபையின் 0000032764 கணக்கு இலக்கத்திற்கு காசாக மட்டும் கொடுப்பனவுகளை மேற்கொண்டு பற்றுச் சீட்டை விண்ணப்பத்துடன் இணைத்து அனுப்புதல் வேண்டும். பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப் படிவங்களை ‘‘கணக்காளர் (வழங்கல்கள்), மாநகர சபை, கண்டி’’ எனும் பெயருக்கு 2023.06.12ஆம் திகதிக்கு முன் கிடைக்கும் வகையில் பதிவுத் தபாலில் அல்லது நேரில் கொண்டு வந்து ஒப்படைக்கலாம். உரிய தினத்திற்குப் பின் கிடைக்கப்பெறும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். 2022ஆம் வருடத்திற்காக ஏற்கனவே பதிவு செய்து கொண்டவர்கள் மீண்டும் பதிவு செய்து கொள்ளத் தேவையில்லை.

**வழங்குநர்களைப் பதிவு செய்வதற்கான நிபந்தனைகள்**

i. பதிவு செய்து கொண்டுள்ள வழங்குநர்களுக்கு புறம்பாக தேவையான வேளைகளில் வேறு விலைகளைக் கோரி பொருட்களைக் கொள்வனவு செய்யும் அதிகாரம் இந்த சபைக்கு / மாநகர சபை ஆணையாளருக்கு உண்டு.
ii. தேவையான வேளைகளில் மாதிரிகளை சமர்ப்பிக்காத மற்றும் தருவித்தற் கட்டளையின் பிரகாரம் உரிய நேரத்திற்கு, தரம் மற்றும் உயர்ந்த இயல்புகளைக் கொண்ட பொருட்களை வழங்காத வழங்குநர்களின் பதிவு எவ்வித முன்னறிவித்தலுமின்றி இரத்துச் செய்யப்படும்.
iii. பொருட்கள் வழங்கிய நாள் முதல் குறைந்தபட்சம் 45 நாட்களுக்கான கடன் வசதியை வழங்குநர்கள் வழங்குதல் வேண்டும்.
iv. வழங்குநர்களுக்கு முற்பணம் வழங்கப்பட மாட்டாது.
v. சகல விண்ணப்பத்துடனும் வியாபார பதிவுச் சான்றிதழின் பிரதியொன்றை வேறு வேறாக இணைத்து அனுப்புதல்வேண்டும்.

மேலதிக விபரங்களை கணக்காளர் (வழங்கல்கள்) அவர்களிடமிருந்து 081-2232071/070-3738117 எனும் தொலைபேசி இலக்கத்தினூடாகப் பெற்றுக்கொள்ளலாம்.

**கே.கே.பீ.ஐ.டி.பி. விஜேதிலக்க,**
**கண்டி மாநகர ஆணையாளர்.**

2023.05.15ஆம் திகதி,
**மாநகர சபை, கண்டி.**

OBSERVER JOBS
BREAKING BOUNDARIES
THE COUNTRY'S LARGEST RECRUITMENT DATABASE
FOR JOBSEEKERS
www.observerjobs.lk

# மஹர பிரதேச சபை

# கேள்வி அழைப்பு

## பிலிகுத்துவ சுற்றுலா சேருமிடத்தில் பிரதேச பாதையை அபிவிருத்தி செய்து அதன் அருகில் வாகன நிறுத்தும் இடத்தை நிர்மாணிப்பதற்கான தரையை அமைத்தல்

## பெறுகை இலக்கம் - DS/01/2023

01. மஹர பிரதேச சபையின் பெறுகைக் குழுத் தலைவரால் மாகாண சபை அபிவிருத்தி வழங்கல் - 2023 மானியங்களின் கீழ் கீழே அட்டவணையில் விபரிக்கப்பட்டுள்ளவாறு தகைமையான கேள்விதாரர்களிடமிருந்து பொறியிடப்பட்ட கேள்விகள் கோரப்படுகின்றன.

| தொ. இல. | செயற்றிட்டத்தின் பெயர் | மதிப்பிடப்பட்ட தொகை (வெ. இன்றி) | ஒப்பந்த கால எல்லை | ஒப்பந்தப் பதிவு | மீளளிக்கப் படாத படிவக் கட்டணம் | மீளளிக்கப் படும் வைப்புத் தொகை |
|---|---|---|---|---|---|---|
| 1 | பிலிகுத்துவ சுற்றுலா சேருமிடத்தில் பிரவேச பாதையை அபிவிருத்தி செய்து அதன் அருகில் வாகன நிறுத்துமிடத்தை நிர்மாணிப்பதற்காக தகைமை அமைத்தல் (N238124110008) | 6,328,295.94 | 03 மாதங்கள் | C6 - 7 (கட்டிடங்கள் மற்றும் வீதி) | ரூ. 5,000.00 | 63,500.00 |

02. கேள்வி கோரப்படல் தேசிய போட்டி கேள்வி கோரல் முறைமையின் பிரகாரமாகும் பிரதேச முன்னுரிமை மேல் மாகாணத்திற்குள் 5% ஆகும்.

03. இது பற்றி ஆர்வம் காட்டுகின்ற கேள்விதாரர்களுக்கு 2023.05.16 முதல் அரச அலுவலக நாட்களில் மு.ப. 9.00 முதல் பி.ப. 3.00 வரையான காலத்திற்குள் மஹர பிரதேச சபையின் தலைமையகத்தில் அபிவிருத்திப் பிரிவிற்கு வருகை தந்து கேள்விப் பத்திரங்களை பரீட்சித்துப்பார்க்க முடிவதுடன் இது பற்றிய மேலதிக விபரங்களை அலுவலக நேரங்களில் வேலை அதிகாரி (011 2929076) இடம் பெற்றுக் கொள்ளலாம்.

04. 2023.05.16 முதல் 2023.06.05 வரை மு.ப. 9.00 முதல் பி.ப. 3.00 வரையான காலத்திற்குள் கேள்விப் படிவக் கட்டணத்தை காசாக செலுத்தி குறித்த நிறுவனத்தின் படிதத் தலைப்பில் எழுத்து மூல விண்ணப்பத்தை சமர்ப்பித்து அபிவிருத்தி பிரிவில் முழுமையான கேள்வி ஆவணத் தொகுதியைப் பெற்றுக் கொள்ளலாம். கேள்வி விண்ணப்பப் படிவங்களைப் பெற்றுக் கொள்ளும் போது CIDA பதிவுச் சான்றிதழை சமர்ப்பித்தல் வேண்டும்.

05. இலங்கை மத்திய வங்கியில் பதிவு செய்த அங்கீகரிக்கப்பட்ட வங்கியில் இருந்து அல்லது காப்புறுதி நிறுவனத்திலிருந்து பெற்றுக் கொண்ட நிபந்தனையற்ற மற்றும் கோரும்போது பெற்றுக் கொள்ளக் கூடிய 2023.10.05 வரை செல்லுபடியாகும் ரூபா 63.500.00 (ரூபா அறுபத்தி மூவாயிரத்து ஐந்நூறு) பெறுமதியுடைய மஹர பிரதேச சபையின் செயலாளருக்கு எழுதப்பட்ட கேள்விப் பிணையொன்றை முத்திரையிடப்பட்ட கேள்வியுடன் சமர்ப்பித்தல் வேண்டும். காசாக செலுத்துவதாயின் ரூ. 63,500.00 தொகையை மஹர பிரதேச சபையில் வைப்புச் செய்து அப் பற்றுச்சீட்டுடன் சமர்ப்பித்தல் வேண்டும்.

06. கேள்விகள் மூல மற்றும் நகல் பிரதியாக தயாரிக்கப்பட்டு 2023.06.06 மு.ப. 10.30 இற்கு அல்லது அதற்கு முன்பு கிடைக்குமாறு 'செயலாளர் மஹர பிரதேச சபை, பஹல கரகஹமுன, கடவத்த' என்ற முகவரிக்கு தபாலில் அனுப்பலாம். அல்லது மஹர பிரதேச சபையின் தலைமையகத்தின், செயலாளரின் உத்தியோக பூர்வ அறையில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிடல் வேண்டும். பெறுகை இலக்கம், செயற்றிட்டத்தின் பெயர் மற்றும் மூலப்பிரதி அல்லது நகல் பிரதியென உறையின் இடது பக்க மேல் மூலையில் தெளிவாகக் குறிப்பிடுதல் வேண்டும். தாமதமாகக் கிடைக்கும் மற்றும் பூர்த்தியற்ற கேள்விகள் நிராகரிக்கப்படும். அக் கேள்விகள் 2023.06.06ம் திகதி கேள்விகள் ஏற்றுக் கொள்ளல் முடிவடைந்தவுடன் வருகை தந்துள்ள கேள்விதாரர்கள்/ பிரதிநிதிகள் முன்னிலையில் மஹர பிரதேச சபை கேட்போர் கூடத்தில் திறக்கப்படும்.

07. இக் கேள்விகளை ஏற்றுக் கொள்ளல் அல்லது சகல கேள்விகளையும் நிராகரிக்கும் அதிகாரத்தை பிரதேச சபையின் பெறுகைக் குழு கொண்டிருக்கும்.

**எல்.ஏ. மஞ்சுளா சமந்தி**
**செயலாளர் மற்றும் சபையின் அதிகார செயற்பாடுகளை அமுல்படுத்தும் அதிகாரி,**
**தலைவர்,**
**பெறுகைக்குழு,**
**மஹர பிரதேச சபை,**
**பஹலகரகஹமுன, கடவத்த.**

2023.05.15
**தொ. பே. இல. 011 2927076**
**பெக்ஸ். 011 2925247**

# குண்டசாலை பிரதேச சபை

# பெறுகை அறிவித்தல்

கீழே அட்டவணையில் குறிப்பிடப்படும் கைத்தொழில்களை நிறைவேற்றுவதற்காக தகைமையுள்ள மற்றும் அபகீர்த்தியானோர் பட்டியல்படுத்தப்படாத கேள்விதாரர்களிடமிருந்து குண்டசாலை பிரதேச சபையின் பெறுகைக் குழுவின் தலைவரால் பொறியிடப்பட்ட கேள்விகள் கோரப்படுகின்றன.

| உருப்படி இல. | கைத்தெரில் மற்றும் கேள்வி இலக்கம் | பொறியியல் அளவுப் பத்திர பெறுமதி (VAT இன்றி) (ரூ. மி.) | ஒப்பந்த காலம் (வாரங்கள்) | CIDA/ICTAD பதிவு | கேள்விப் பிணை | | | மீளளிக்கப் படாத கேள்வி ஆவணக் கட்டணம் (ரூ.) |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | பிணையின் பெறுமதி | காசாக வைப்புச் செய்ய வேண்டிய பெறுமதி (ரூ.) | செல்லு படியாக வேண்டிய தினம் | |
| 01 | அளுத்வத்த சேதன உரக்களஞ் சியத்தின் கவசீமா இயந்திரத்தை 100 மீட்டர் வரை நீடித்து மீண்டும் புனரமைப்புச் செய்தல் மற்றும் துணைப் பாகங்கள்களை பொருத்துதல் CPC/KUPS/3/2/1/-2023-AD1-a | 12.7 | 12 | CIDA C5 அல்லது C6 அல்லது C7 (கட்டிடம்) | 200,000.00 | 100,000.00 | 2023.09.19 | 5,000.00 |

01. இக் கேள்விக் கோரல் தேசிய போட்டி கேள்வி கோரல் முறைமையின் பிரகாரம் இடம் பெறும். இப் பெறுகையின் கீழ் செயற்படுத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ள வேளையின் மதிப்பிடப்பட்ட பெறுமதி ரூ. 50 மில்லியனுக்கு மேற்படுகின்ற படியால் இல. 04/2016(iv) அரச நிதி சுற்று நிருபத்தில் தரப்பட்டுள்ளவாறு பிரதேச முன்னுரிமை மற்றும் CIDA தர முன்னுரிமை பொருந்தும்.

02. இது பற்றிய மேலதிக விபரங்களை தொ. பே. இல. 081-2375624ஐ அழைத்து குண்டசாலை பிரதேச சபையின் செயலாளரிடம் பெற்றுக் கொள்ளக் கூடியதுடன் கேள்வி ஆவணங்களை 2023.05.17 முதல் 2023.06.05 வரை அலுவலக நேரங்களில் குண்டசாலை பிரதேச சபை அலுவலகத்தில் கட்டணங்கள் இன்றியே பரீட்சித்துப் பார்க்கலாம்.

03. மேற்படி முகவரிக்கு எழுத்துமூல வேண்டுதல் கடிதத்தைச் சமர்ப்பித்த பின்னர் மேலே தரப்பட்டுள்ளவாறு மீளளிக்கப்படாத கேள்வி ஆவணக் கட்டணத்தை குண்டசாலை பிரதேச சபையின் காசாளரிடம் காசாக செலுத்தி குறித்த பற்றுச் சீட்டை சமர்ப்பித்து கேள்வி ஆவணங்களை 2023.05.17 முதல் 2023.06.05 வரை அலுவலக நேரங்களில் மு.ப. 9.00 முதல் பி.ப. 3.00 வரை குண்டசாலை பிரதேச சபையின் செயலாளரிடம் பெற்றுக் கொள்ளலாம்.

04. கேள்வியின் பெறுமதி ரூ. 05 மில்லியனுக்கு மேற்படும் வேளையில் ஒப்பந்தம் வழங்குவதற்கு தகைமை பெறுவதற்கு சித்திகரமான கேள்விதாரரால் 1987 இல. 03 பொது ஒப்பந்த சட்டத்தின் 8ஆம் பிரிவின் கீழ் கம்பனிகள் பதிவாளரால் விநியோகிக்கப்படும் சான்றிதழை சமர்ப்பித்தல் வேண்டும்.

05. மேற்படி அட்டவணையில் குறிப்பிடப்படும் பெறுமதிக்கு 'குண்டசாலை பிரதேச சபை' பெயரில் அவ் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள திகதி வரை செல்லுபடியாகுமாறு அரச அங்கீகாரம் பெற்ற (இலங்கை மத்திய வங்கியினால் அனுமதிக்கப்பட்ட) வங்கி மூலம் அல்லது நிர்மாண பாதுகாப்பு நிதி (CGF) மூலம் பெற்றுக் கொண்ட கேள்விப் பிணையொன்றை சமர்ப்பித்தல் அல்லது கேள்விப் பிணையை காசாக வைப்புச் செய்வதாயின் மேற்படி அட்டவணையில் குறிப்பிடப்படும் தொகையை குண்டசாலை பிரதேச சபையின் காசாளரிடம் வைப்புச்செய்து அப் பற்றுச்சீட்டை சமர்ப்பித்தல் வேண்டும்.

06. முறையாகப் பூர்த்தி செய்து பொறியிடப்பட்ட கேள்விப் பத்திரங்கள் நகல் பிரதியுடன் 'தலைவர், பெறுகைக் குழு, குண்டசாலை பிரதேச சபை, மெனிக்ஹின்ன' என்ற முகவரிக்கு 2023.06.06 பி.ப. 2.00 இற்கு அல்லது அதற்கு முன் கிடைக்குமாறு பதிவுத் தபாலில் அனுப்பலாம். அல்லது கையோடு கொண்டுவந்து குண்டசாலை பிரதேச சபையின் சபை செயலாளரின் அறையில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிடல் வேண்டும். குறித்த நேரத்தின் பின்னர் கிடைக்கும் கேள்விகள் நிராகரிக்கப்படும். கேள்விகள் ஏற்றுக் கொள்ளல் முடிவடைந்தவுடன் கேள்விகள் திறக்கப்படுவதுடன் கேள்வி தாரர் அல்லது அவரது அதிகாரமளிக்கப்பட்ட பிரதிநிதியொருவருக்கு சமுகமளிக்கலாம்.

07. இது பற்றிய கேள்விக்கு முன்னரான கூட்டம் 2023.05.26 மு.ப. 11.00 இற்கு குண்டசாலை பிரதேச சபையின் நடைபெறும். அதற்காக கேள்விதாரருக்கு அல்லது அவரது அதிகாரமளிக்கப்பட்ட பிரதி நிதிக்கு சமுகமளிக்கலாம்.

சமர்ப்பிக்கப்படும் கேள்விகளை முழுமையாக ஏற்றுக் கொள்ளல் அல்லது நிராகரித்தல் அல்லது ஒரு பகுதியை ஏற்றுக் கொள்ளல் பற்றிய முழுமையான உரிமை குண்டசாலை பிரதேச சபையின் பெறுகைக் குழுவிற்கு உரியது.

**தலைவர்,**
**பெறுகைக்குழு.**
**குண்டசாலை பிரதேச சபை,**
**மெனிக்ஹின்ன.**
2023.05.16

# கொழும்பு தாமரைக்கோபுர முகாமைத்துவ தனியார் நிறுவனம்

# விலைமனுக்கோரல் (IFB)

**கொழும்பு தாமரைக்கோபுர முகாமைத்துவ தனியார் நிறுவனம்** சார்பாக **பிரதான பெறுகைக் குழுவின் தலைவரினால்** கீழ்க் குறிப்பிடப்பட்டுள்ள ஒப்பந்தத்திற்கு தகுதியான முத்திரையிடப்பட்ட மனுதாரர்கள் கோரப்படுகின்றனர்.

| ஒப்பந்த இலக்கம் | ஒப்பந்ததின் பெயர் | மீளச்செலுத்தப் படாத கட்டணம் (ரூ). | காலம் | தேவைப்படும் மனுப்பாதுகாப்புத் தொகை (ரூ). | மனுக்கள் கோரப்படும் திகதி மற்றும் நேரம் |
|---|---|---|---|---|---|
| CLT/GOODS/004/2023 | கொழும்பு தாமரை கோபுரத்திற்காக Dual viewing Large Parcel மற்றும் Small Cargo Scanneச (1000mm x 1000MM) வழங்கல், நிறுவுதல், பரிசோதிதல், செயற்படுத்தல் மற்றும் பராமரித்தல் | 5,000.00 | 30 நாட்கள் | 350,000.00 | 2023.05.30 14.00 மணி |

01. ஆர்வமுள்ள மனுதாரர்கள் மீளச்செலுத்தப்படாத கட்டணத்தை **கொழும்பு தாமரைக்கோபுர முகாமைத்துவ** தனியார் நிறுவனத்தின் நிதிப் பிரிவில் செலுத்தி **2023.05.17 ஆம் திகதி முதல் 2023.05.29 ஆம் திகதி** வரை கொழும்பு தாமரைக்கோபுர முகாமைத்துவ தனியார் நிறுவனம் முகாமையாளர் (பெறுகை) அலுவலகத்தில் ஆங்கில மொழியில் அச்சிடப்பட்ட மனு ஆவணங்களை பெற்றுக்கொள்ளலாம்.

02. மேலதிக விபரங்களை **இல.320, டி.ஆர்.விஜேவர்தன மாவத்தை, கொழும்பு 10 இல் அமைந்துள்ள கொழும்பு தாமரைக்கோபுர முகாமைத்துவ தனியார் நிறுவனத்தின் முகாமையாளரிடம் (பெறுகை)** பெற்றுக்கொள்ளலாம்.

**(தொ.பே: 0112 - 421952 / 075 553 1416 மின்னஞ்சல் – tender@colombolotustower.lk**).

03. மனுக்கள் செல்லபடியாகும் காலம் **60 நாட்கள்.**

04. முத்திரையிடப்பட்ட மனுக்கள் **இல.320, டி.ஆர்.விஜேவர்தன மாவத்தை, கொழும்பு 10** இல் அமைந்துள்ள கொழும்பு தாமரைக்கோபுர முகாமைத்துவ தனியார் நிறுவனத்தின் **அலுவலகர் (பெறுகை)** கிடைக்குமாறு அனுப்புதல் வேண்டும்.

05. அனைத்து மனுக்களும் கட்டாயமாக மேலே குறிப்பிட்டுள்ள மனுப் பாதுகாப்புத் தொகையுடன் இணைத்து சமர்ப்பிக்கப்பட வேண்டும். மனுப்பாதுகாப்புத் தொகை செல்லுபடியாகும் காலம் **90 நாட்கள்.**

06. மேலே குறிப்பிடப்பட்டுள்ள திகதி முடிவடைந்த பின்னர் உடனடியாக மனுக்கள் திறக்கப்படும். மனுக்கள் திறக்கப்படும் வேளையில் மனுதாரர் அல்லது அவரது பிரதிநிதி அவ்வேளையில் பிரசன்னமாயிருக்க முடியும்.

**பணிப்பாளர் / தலைமை நிர்வாக அதிகாரி,**
**கொழும்பு தாமரைக்கோபுர முகாமைத்துவ தனியார் நிறுவனம்,**
**இல. 320, டி. ஆர். விஜேவர்தன மாவத்தை,**
**கொழும்பு 10.**

# கொழும்பு மாநகர சபை

# கேள்வி அறிவித்தல்

கொழும்பு மாநகர சபையின் மாநகர ஆணையாளரினால் பின்வரும் உருப்படிகளை விற்பனை செய்வதற்காக முத்திரைக் குறி பொறிக்கப்பட்ட கேள்விகள் கோரப்படுகின்றன.

| இலக்கம் | விபரங்கள் | | | | | |
|---|---|---|---|---|---|---|
| CMC/MT/RV/TEND/4-1 | கொழும்பு மாநகர சபைக்குரித்தான உடைந்த பொருட்கள் மற்றும் உபகரணங்களை கேள்வியிடல் | | | | | |
| | No | Description | Lot No | Materials/Scraps Description | Qty | Deposit |
| | 1 | Scrap Iron + Aluminum Scrap + Copper Scrap | Lot No 01 | Bulbs, Chalk, Lamp cover, tube lights, electrical panel boards. | Lot | 10,000.00 |
| | 2 | Concrete light Posts | Lot No 02 | Damaged & part of concrete light posts (considered as 6m length) | 107 nos | 1,500.00 |
| | 3 | GI light posts | Lot No 03 | GI light posts (Hollow Type) | 2500 kg | 12,500.00 |
| | 4 | Iron Scraps | Lot No 04 | Various Type Iron Scrap | 500 kg | 2,500.00 |
| | 5 | Cast Iron Scraps | Lot No 05 | Removed machine parts | 1000 kg | 3,000.00 |
| | 6 | Lorry cabins | Lot No 06 | Removed Lorry Driver cabins | 05 nos | 10,000.00 |
| | 7 | Iron Scraps | Lot No 07 | Various Type Chassis parts, removed round shape tank | 2000 kg | 10,000.00 |
| | 8 | Iron Scraps | Lot No 08 | Various Type removed iron Scrap from compactor units. | 1000 kg | 5,000.00 |
| | 9 | Removed vehicle spare parts | Lot No 09 | Various Type removed vehicle spare parts | 5000 kg | 25,000.00 |
| | 10 | Removed vehicle spare parts | Lot No 10 | Various Type removed vehicle spare parts | 1000 kg | 5,000.00 |
| | 11 | Removed vehicle spare parts | Lot No 11 | Various Type removed vehicle spare parts | 3000 kg | 15,000.00 |

- 2023-05-17ஆம் திகதி மு.ப. 9.00 மணி முதல் 2023-06-07ஆம் திகதி பி.ப. 3.00 மணி வரை விண்ணப்பப் படிவங்கள் வழங்கப்படும் என்பதுடன் விண்ணப்பக் கட்டணம் 2,300.00 ரூபாவாகும். (விண்ணப்பப் படிவம் மூலப் பிரதி மற்றும் நகல் பிரதி என இரு பிரதிகளைக் கொண்டது)
- முறை 01 - கொழும்பு மாநகர சபையின் இணையதளத்திலிருந்து (**www.colombo.mc.gov.lk**) தரவிறக்கம் செய்துகொள்ளலாம். தரவிறக்கம் செய்துகொள்ளும் போது விண்ணப்பக் கட்டணத்தை இரண்டு முறைகளில் செலுத்தலாம்.

அ) மக்கள் வங்கி நகர மண்டப கிளையில் பேணப்படும் 167-1-001-6-3169425 எனும் கணக்கிலக்கத்திற்கு வரவு வைக்கலாம்.

ஆ) கொழும்பு மாநகர சபை எல்லைக்குள் அமைந்துள்ள பின்வரும் கொடுப்பனவு கருமபீடங்களில் வார நாட்களில் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 3.00 மணி வரை செலுத்தலாம்.

➢ மாவட்ட அலுவலகம் 04, இல. 147, ஹைலெவல் வீதி, கிருலப்பனை, கொழும்பு 06.

➢ வடிகாலமைப்பு மற்றும் நீர் வழங்கல் பிரிவு, மாளிகாகந்த, கொழும்பு 10.

இ) விண்ணப்பப் படிவங்கள் வழங்கப்படும் இறுதி நாளான 2023-06-07ஆம் திகதியின் பின் தரவிறக்கம் செய்யப்படும் அல்லது வங்கிக் கணக்குகளுக்கு பணம் செலுத்துவதன் மூலம் சமர்ப்பிக்கப்படும் விண்ணப்பப் படிவங்கள் நிராகரிக்கப்படும்.

முறை 02 - நகர மண்டப தலைமை அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

கொழும்பு மாநகர சபை, கொழும்பு 07, நகர மண்டப வளவில் அமைந்துள்ள மாநகர பொருளாளர் திணைக்களத்தின் வருமானப் பிரிவிற்கு வாரத்தின் வேலை நாட்களில் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 3.00 மணி வரை எழுத்துமூல வேண்டுகோள் ஒன்றைச் செய்து விண்ணப்பக் கட்டணத்தைச் செலுத்தி கேள்வி ஆவணங்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

➢ உரிய முறையில் பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்களை மூலப் பிரதி மற்றும் நகல் பிரதிகளில் 2023-06-09ஆம் திகதி மு.ப. 10.00 மணிக்கு முன் கொழும்பு-07, நகர மண்டபம், செயலாளரின் திணைக்களத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிடல் வேண்டும். கேள்வி ஆவணங்களுடன் விண்ணப்பக் கட்டணத்தைச் செலுத்திய பற்றுச்சீட்டை இணைத்து சமர்ப்பித்தல் கட்டாயமாகும்.

➢ விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளல் 2023-06-09ஆம் திகதி மு.ப. 10.00 மணிக்கு முடிவுறுத்தப்படும் என்பதுடன் அதன் பின் உடன் திறக்கப்படும். இது தொடர்பான மேலதிக விபரங்களை 0112-692465 எனும் தொலைபேசி இலக்கத்தில் பிரதி மாநகர பொருளாளர் (வருமானம்) அவர்களிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

**பத்ராணி ஜயவர்தன,**
**மாநகர ஆணையாளர்,**
**கொழும்பு மாநகர சபை.**

Replies to Classifieds & Casual Advertisements published C/o the Daily News should only be sent by ordinary post. Replies sent under registered cover will not be accepted.

## பொது அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7ஆம் இலக்க கம்பனி சட்டத்தின் 8 ஆம் பிரிவின் பிரகாரம் **Bata Shoe Company of Ceylon Limited,** கம்பனியின் பெயரானது **Footwear Retailer Ltd** என மாற்றப்பட்டுள்ளதென குறித்த சட்டத்தின் பிரிவு 9 (2) இன் கீழ் இத்தால் அறிவிக்கப்படுகிறது.

**கம்பனியின் முன்னைய பெயர்** : Bata Shoe Company of Ceylon Limited
**கம்பனியின் பதிவு இலக்கம்** : PB 963
**கம்பனியின் பதிவு முகவரி** : No. 100, General Sir John Kotelawala Road, Rathmalana.
**கம்பனியின் புதிய பெயர்** : Footwear Retailer Ltd
**பெயர் மாற்றப்பட்ட திகதி** : 18.04.2023

நிறுவனத்தின் மறுசீரமைப்பின் ஒரு பகுதியாக இந்தப் பெயர் மாற்றம் செய்யப்பட்டுள்ளது. நிறுவனத்தின் தற்போதைய உரிமை, இயக்குநர்கள் குழு, நிர்வாகம் மற்றும் சட்ட நிறுவனத்தில் மாற்றம் ஏதும் இல்லை என்றும் அறிவித்துக்கொள்கின்றோம்.

Board of Directors / Company Secretary

## தங்கக் கடன் பகிரங்க விற்பனை / ஏலம்

ரிச்சர்ட் பீரிஸ் ஃபைனான்ஸ் லிமிடெட்டின் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள தங்கக் கடன் மையங்களில் 02.03.2023 வரையிலான காலப்பகுதியில் அடகு வைக்கப்பட்ட தங்கப் பொருட்கள், இது வரை மீட்டெடுக்கப்படவில்லை, 30.05.2023 அன்று விற்கப்படும்.

### தங்க கடன் நிலையங்கள்

பொறளை, கம்பஹா, ஹட்டன், களனி, குளியாப்பிட்டிய, குருநாகல், நுவரெலியா, வென்னப்புவ, நீர்கொழும்பு, கல்முனை, ஹோமாகம, சிலாபம்

### திகதி, நேரம் மற்றும் விற்பனை நடைபெறும் இடம்

திகதியும் நேரமும் : **30.05.2023 மு.ப 10.00 மணிக்கு**
இடம் : **ரிச்சர்ட் பீரிஸ் ஃபைனான்ஸ் லிமிடெட் இல.453/1, கண்டி வீதி, தலுகம, களனி.**

பங்கேற்கும் அனைவரும் தேசிய அடையாள அட்டை மற்றும் உத்தரவாத வைப்புத் தொகையை கொண்டு வர வேண்டும். ரிச்சர்ட் பீரிஸ் ஃபைனான்ஸ் லிமிடெட் எந்த அறிவிப்பும் இல்லாமல் ஏலத்தை ரத்து செய்ய அல்லது ஒத்திவைக்கும் உரிமையை கொண்டுள்ளது.

**ரிச்சர்ட் பீரிஸ் பினான்ஸ் லிமிட்டெட்**
தொலைபேசி: 0714 368 997 / 0711 692 272

skills

## அற்றோணி அதிகாரத்தை இரத்துச் செய்தல்

2018ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 25ஆம் திகதி திகதியிடப்பட்டு யாழ்ப்பாண பிரசித்த நொத்தாரிசு **அருளம்பலம் இராஜரட்ணம்** முகதாவில் நிறைவேற்றப்பட்ட 10434 இலக்க அற்றோணி அதிகார பத்திரத்திற்கமைவாக இல. 63/20, சிவன் வீதி, பரவைக்குளம் திருநெல்வேலி யாழ்ப்பாணம் இல் வசிக்கும் **ஆறுமுகம் ஜெயராணி** ஆகிய நான் இல. 63/21, சிவன் வீதி, பரவைக்குளம், திருநெல்வேலி, யாழ்ப்பாணம் இல் வசிக்கும் **சாந்தகுமார் ஜனார்த்தனி** என்பவருக்கு வழங்கிய அதிகாரங்களை 30.04.2023ஆம் திகதியிலிருந்து செல்லுபடியாகும் வண்ணம் இரத்து செய்யப்பட்டு விட்டதாக இலங்கை ஜனநாயக சோஷலிச குடியரசுக்கும் அதன் பொது மக்களுக்கும் இத்தால் அறிவித்துக் கொள்கின்றேன்.

# விலை கோரலுக்கான அழைப்பு

## மேல் மாகாண சபை

## பொறியியல் பணியகம்

1. பின்வருமாறு விபரிக்கப்பட்டுள்ள வேலைகளுக்காக இயைபுடைய பிரதேச பொறியியலாளர் பெறுகைக் குழுத் தலைவரினால் தகுதி மற்றும் தகைமை வாய்ந்த விலைமனுதாரர்களிடமிருந்து முத்திரைக் குறி பொறிக்கப்பட்ட விலைமனுக்கள் கோரப்படுகின்றன.
2. I. தேசிய போட்டி ரீதியில் விலைக்கோரல் மூலம் விலைக்கோரல்கள் மேற்கொள்ளப்படும். 04/2016(iv)ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம் (வெட் மற்றும் ஏனைய வரிகள் இன்றி) மொத்தப் பெறுகையின் பெறுமதி 50 மில்லியன் ரூபாவுக்குக் குறைவாக இருப்பதனால் பிராந்திய முன்னுரிமை மற்றும் CIDA பதிவுத் தர முன்னுரிமை பிரயோகிக்கப்படும்.
3. ஒப்பந்தத்தைப் பெற்றுக்கொள்ளும் வெற்றிகரமான விலைகூறுநர் அபகீர்த்தியாளர் பட்டியலில் உள்வாங்கப்பட்டவர்களாக இருத்தல் ஆகாது என்பதுடன் விலைமனு ஆவணத்தின் பிரகாரம் பின்வரும் தேவைப்பாடுகளைப் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்

| (1) தொ. இல. | (2) ஒப்பந்தத்தின் இலக்கம் | (3) வேலையின் பெயர் | (4) நேரடி மதிப்பீட்டுக் கிரயம் | (5) 03ஆம் இலக்க பொது ஒப்பந்தத் தேவைப்பாடு | (6) CIDA பதிவு | (7) மீளளிக்கப்படாத கட்டணம் (ரூபா) | (8) மீளளிக்கப்படும் விலைக்கோரல் பிணை முறி | (9) விலைமனு ஆவணங்கள் வழங்கப்படும் இடம் மற்றும் தொலைபேசி இலக்கம் |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | WP/PU/CON/23/222 | மேமா/களு/ஞானோதய ம. வி. - மின்சார வசதிகளை மேம்படுத்துதல் | 864,579.00 | இல்லை | EM 5 அல்லது அதற்கு மேல் | 1,000.00 | ரொக்கப் பண வைப்பு - ரூபா 5,000.00 | பிரதேச பொறியியலாளர் அலுவலகம் களுத்துறை, சுமங்கள வீதி, களுத்துறை வடக்கு. தொலைபேசி இல . 034-2237349 |
| 2 | WP/PU/CON/23/223 | மேமா/களு/போம்புவல ஸ்ரீ தம்மாலோக்க ம. வி. - 5 பாடசாலைக் கட்டிடங்களுக்கான மின்சார வசதிகளை மேம்படுத்துதல் | 1,919,000.00 | இல்லை | EM 5 அல்லது அதற்கு மேல் | 1,000.00 | ரொக்கப் பண வைப்பு - ரூபா 12,000.00 | |
| 3 | WP/PU/CON/23/224 | களுத்துறை வலயக் கல்வி அலுவலகத்தின் மின்சார முறைமை திருத்தவேலைகள் | 1,714,097.00 | இல்லை | EM 5 அல்லது அதற்கு மேல் | 1,000.00 | ரொக்கப் பண வைப்பு - ரூபா 10,000.00 | |
| 4 | WP/PU/CON/23/225 | மேமா/களு/போம்புவல ஆ. வி - எல்லைச் சுவரை நிர்மாணித்தல் | 4,229,165.00 | இல்லை | C9, C8 மற்றும் C7 | 2,000.00 | ரொக்கப் பண வைப்பு - ரூபா 30,000.00<br>விலைமனுப் பிணை முறி - ரூபா 60,000.00 | |
| 5 | WP/PU/CON/23/226 | மொரன்ன - மனித வள அபிவிருத்தி மற்றும் முகாமைத்துவ பயிற்சி நிலையத்தின் சமையலறை மற்றும் உணவருந்தும் மண்டபத்தின் புதுப்பித்தல் வேலைகள் | 5,202,094.83 | ஆம் | C8, C7 மற்றும் C6 | 2,500.00 | ரொக்கப் பண வைப்பு - ரூபா 32,500.00<br>விலைமனுப் பிணை முறி - ரூபா 65,000.00 | பிரதேச பொறியியலாளர் அலுவலகம் கம்பஹா, நீதிமன்ற வீதி, கம்பஹா. தொலைபேசி இல. 033-2222515 |
| 6 | WP/PU/CON/23/227 | வேயங்கொட ஜனாதிபதி ம.வி. - எல்லைச் சுவரை நிர்மாணித்தல் | 3,828,003.20 | இல்லை | C9, C8 மற்றும் C7 | 2,000.00 | ரொக்கப் பண வைப்பு - ரூபா 23,000.00<br>விலைமனுப் பிணை முறி - ரூபா 46,000.00 | |
| 7 | WP/PU/CON/23/228 | கனேமுல்ல PMCU விலுள்ள புதிய கட்டிடத்திற்கு ETU, OPD மற்றும் காத்திருக்கும் பிரதேசத்தை நிர்மாணித்தல். | 9,576,424.25 | ஆம் | C8, C7 மற்றும் C6 | 4,000.00 | ரொக்கப் பண வைப்பு - ரூபா 60,000.00<br>விலைமனுப் பிணை முறி - ரூபா 120,000.00 | |
| 8 | WP/PU/CON/23/229 | தொம்பே மாவட்ட வைத்தியசாலையின் ஆய்வு கூடத்தில் மின்சாரத்தை மேம்படுத்துதல் | 336,972.00 | இல்லை | EM 5 அல்லது அதற்கு மேல் | 1,000.00 | ரொக்கப் பண வைப்பு - ரூபா 2,500.00 | |
| 9 | WP/PU/CON/23/230 | வல்பிட்டவில் உள்ள கமத்தொழில் பயிற்சி நிலைய அலுவலகக் கட்டிடத்தின் கூரை திருத்தவேலைகள் | 6,192,219.60 | ஆம் | C8, C7 மற்றும் C6 | 3,000.00 | ரொக்கப் பண வைப்பு - ரூபா 40,000.00<br>விலைமனுப் பிணை முறி - ரூபா 80,000.00 | பிரதேச பொறியியலாளர் அலுவலகம், மினுவாங்கொட. வலயக் கல்வி அலுவலகம், மினுவாங்கொட. தொலைபேசி இல. 0112-296418 |
| 10 | WP/PU/CON/23/231 | மேமா/மினு/தம்மிட்ட ம.வி. - 20'×80' கட்டிடத்தின் கூரை திருத்தவேலைகள் (“T” மண்டபம்) | 2,482,520.00 | இல்லை | C9, C8 மற்றும் C7 | 1,500.00 | ரொக்கப் பண வைப்பு - ரூபா 15,000.00<br>விலைமனுப் பிணை முறி - ரூபா 30,000.00 | |
| 11 | WP/PU/CON/23/232 | துனகல PMCU வில் வேலியை நிர்மாணித்தல் | 1,538,534.45 | இல்லை | C9 மற்றும் C8 | 1,000.00 | ரொக்கப் பண வைப்பு - ரூபா 10,000.00 | |
| 12 | WP/PU/CON/23/233 | மேமா/கள/வெலேகொட முஸ்லிம் க.வி - 90'×25' மூன்று மாடிக் கட்டிடத்தின் மிகுதி வேலைகள் (படிநிலை IV) | 7,918,244.10 | ஆம் | C8, C7 மற்றும் C6 | 3,500.00 | ரொக்கப் பண வைப்பு - ரூபா 50,000.00<br>விலைமனுப் பிணை முறி - ரூபா 100,000.00 | பிரதேச பொறியியலாளர் அலுவலகம், பியகம, உடுபில வீதி, மாகொல, பியகம. தொலைபேசி: 0112-962091 |
| 13 | WP/PU/CON/23/234 | வீதியகொட ஆயுர்வேத வைத்தியசாலையில் கழிவுநீர் மற்றும் மழை நீர் வடிகானை நிர்மாணித்தல் | 2,583,830.70 | இல்லை | C9, C8 மற்றும் C7 | 1,500.00 | ரொக்கப் பண வைப்பு - ரூபா 16,000.00<br>விலைமனுப் பிணை முறி - ரூபா 32,000.00 | பிரதேச பொறியியலாளர் அலுவலகம், ஹொரணை, பல்லபிட்டிய, ஹொரண. தொலைபேசி: 034-2261019 |
| 14 | WP/PU/CON/23/235 | ஹொரண - பிரதேச பொறியியலாளர் அலுவலகத்தின் கூரை மற்றும் ஏனைய திருத்தவேலைகள் | 2,911,894.50 | இல்லை | C9, C8 மற்றும் C7 | 1,500.00 | ரொக்கப் பண வைப்பு - ரூபா 17,500.00<br>விலைமனுப் பிணை முறி - ரூபா 35,000.00 | |
| 15 | WP/PU/CON/23/236 | மத்துகம - நவுத்துடுவ மகா வித்தியாலயத்தின் 90'-0"×31'-0" இரண்டு மாடிக் கட்டிடத்தின் மிகுதி வேலைகள் (படிநிலை IV) உட்பட கூரையை நிர்மாணித்தல். | 10,108,021.50 | ஆம் | C7, C6 மற்றும் C5 | 4,000.00 | ரொக்கப் பண வைப்பு - ரூபா 30,000.00<br>விலைமனுப் பிணை முறி - ரூபா 60,000.00 | பிரதேச பொறியியலாளர் அலுவலகம், மத்துகம. ஆனந்த சிராஸ்தலாய, மத்துகம. தொலைபேசி இல. 034-2243082 |
| 16 | WP/PU/CON/23/237 | மேமா/மத்து/பெல்லன ம.வி. - விளையாட்டு மைதானத்தை மேம்படுத்துதல் (படிநிலை 1) | 5,010,158.00 | ஆம் | C8,C7 மற்றும் C6 | 2,500.00 | ரொக்கப் பண வைப்பு - ரூபா 60,000.00<br>விலைமனுப் பிணை முறி - ரூபா 120,000.00 | |
| 17 | WP/PU/CON/23/238 | பாணந்துறை பிரதேச பொறியியலாளர் அலுவலகத்திலுள்ள இரண்டு மாடிக் கட்டிடத்தின் மிகுதி வேலைகள் - படிநிலை III | 5,850,000.00 | ஆம் | C8, C7 மற்றும் C6 | 3,000.00 | ரொக்கப் பண வைப்பு - ரூபா 37,500.00<br>விலைமனுப் பிணை முறி - ரூபா 75,000.00 | பிரதேச பொறியியலாளர் அலுவலகம், ஸ்ரீ மகா விஹார வீதி, பாணந்துறை. தொலைபேசி இல. 038-2234774 |
| 18 | WP/PU/CON/23/239 | பொரலஸ்கமுவ ஆமுர் உத்தேச நுழைவாயில் கூரை | 4,023,249.49 | இல்லை | C9, C8 மற்றும் C7 | 1,500.00 | ரொக்கப் பண வைப்பு - ரூபா 25,000.00<br>விலைமனுப் பிணை முறி - ரூபா 50,000.00 | பிரதேச பொறியியலாளர் அலுவலகம் இரத்மலானை, இல. 25, மாளிகாவ வீதி, இரத்மலானை. தொலைபேசி இல. 0112-622517 |
| 19 | WP/PU/CON/23/240 | மித் செவனவின் சாக்கடை முறைமையைப் புதுப்பித்தல் | 2,545,314.15 | இல்லை | C9, C8 மற்றும் C7 | 1,500.00 | ரொக்கப் பண வைப்பு - ரூபா 20,000.00<br>விலைமனுப் பிணை முறி - ரூபா 40,000.00 | |
| 20 | WP/PU/CON/23/241 | மேமா/ஹொர/இலுக்கோவிட்ட க.வித்தியாலயத்தின் 70'-0"x25'×0" இரண்டு மாடி பாடசாலைக் கட்டிடத்தின் மிகுதி வேலைகள் (படிநிலை II) | 8,051,735.30 | ஆம் | C8, C7 மற்றும் C6 | 3,500.00 | ரொக்கப் பண வைப்பு - ரூபா 50,000.00<br>விலைமனுப் பிணை முறி - ரூபா 100,000.00 | பிரதேச பொறியியலாளர், பிரதேச பொறியியலாளர் அலுவலகம், ஹோமாகம, நீதிமன்ற வீதி, ஹோமாகம. தொலைபேசி 011-2855719 |
| 21 | WP/PU/CON/23/242 | கொஸ்கம மாவட்ட வைத்தியசாலையிலுள்ள அம்பியூலன்ஸ் தரிப்பிடத்தின் புதுப்பித்தல் வேலைகள் | 5,435,818.01 | ஆம் | C8, C7 மற்றும் C6 | 2,500.00 | ரொக்கப் பண வைப்பு - ரூபா 35,000.00<br>விலைமனுப் பிணை முறி - ரூபா 70,000.00 | |
| 22 | WP/PU/CON/23/243 | கொஸ்கம மாவட்ட வைத்தியசாலையிலுள்ள வைத்தியசாலை வார்டுகளின் வயரிங் முறைமைகளைப் புதுப்பித்தல் | 2,409,441.00 | இல்லை | C9, C8 மற்றும் C7 | 1,500.00 | ரொக்கப் பண வைப்பு - ரூபா 15,000.00<br>விலைமனுப் பிணை முறி - ரூபா 30,000.00 | |
| 23 | WP/PU/CON/23/244 | மேமா/ஹொர/ஹபரக்கட க.வி. - எல்லைச் சுவரை நிர்மாணித்தல் | 2,528,103.85 | இல்லை | C9, C8 மற்றும் C7 | 1,500.00 | ரொக்கப் பண வைப்பு - ரூபா 16,000.00<br>விலைமனுப் பிணை முறி - ரூபா 32,000.00 | |
| 24 | WP/PU/CON/23/245 | மேல் மாகாண அழகியற்கலை - மின் பிறப்பாக்கி அறையின் கூரை திருத்தவேலைகள் | 1,270,026.50 | இல்லை | C9 மற்றும் C8 | 1,000.00 | ரொக்கப் பண வைப்பு - ரூபா 10,000.00 | பிரதேச பொறியியலாளர் அலுவலகம், இல. 151/4/2/1, மாளிகாவத்த பிளேஸ், மாளிகாவத்தை, கொழும்பு-10. தொலைபேசி-: 011-2447773 |
| 25 | WP/PU/CON/23/246 | மேமா/கொ/விகாரமகாதேவி மகளிர் வித். - ஒற்றை மாடிக் கட்டிடத்தின் திருத்தவேலைகள் | 5,211,303.83 | ஆம் | C8, C7 மற்றும் C6 | 2,500.00 | ரொக்கப் பண வைப்பு - ரூபா 30,000.00<br>விலைமனுப் பிணை முறி - ரூபா 60,000.00 | |
| 26 | WP/PU/CON/23/247 | மேமா/கொ/விகாரமகாதேவி மகளிர் வித் - வடிகாலமைப்பு முறைமை மற்றும் எல்லைச் சுவரின் திருத்தவேலைகள் | 2,117,666.70 | இல்லை | C9, C8 மற்றும் C7 | 1,500.00 | ரொக்கப் பண வைப்பு - ரூபா 12,500.00<br>விலைமனுப் பிணை முறி - ரூபா 25,000.00 | |
| 27 | WP/PU/CON/23/248 | மேமா/கொ/விகாரமகாதேவி மகளிர் வித் - மலசலகூட முறைமையின் திருத்தவேலைகள் | 1,300,145.90 | இல்லை | C9 & C8 | 1,000.00 | ரொக்கப் பண வைப்பு - ரூபா 10,000.00 | |
| 28 | WP/PU/CON/23/249 | மேல் மாகாண அழகியற்கலை ரிசோட்டின் மலசலகூட திருத்தவேலைகள் மற்றும் பிரதான மண்டபத்தின் கூரைக்கான அணுகுவழியை வழங்குதல் | 1,025,648.65 | இல்லை | C9 & C8 | 1,000.00 | ரொக்கப் பண வைப்பு - ரூபா 6,500.00 | |

04. இதில் ஆர்வம் கொண்டுள்ள விலைமனுதாரர்கள் மேலதிக விபரங்களை அட்டவணையின் குறிப்பிடப்பட்டுள்ள இயைபுடைய பொறியியல் அலுவலகங்களில் பெற்றுக்கொள்ளலாம் என்பதுடன் அலுவலக நேரத்தினுள் இதே அலுவலகத்தில் விலைமனு ஆவணங்களை இலவசமாகப் பரீசித்துப் பார்க்கலாம்.
05. மீளளிக்கப்படாத கட்டணத்தை 2023-05-16ஆம் திகதி முதல் 2023-05-29ஆம் திகதி வரை எந்தவொரு வேலை நாளிலும் மு.ப. 9.00 மற்றும் பி.ப. 03.00 மணிக்கிடையில் மேல் மாகாண சபைக்கு (அட்டவணையின் 07ஆம் நிரலில் குறிப்பிடப்பட்டுள்ளதன் பிரகாரம்) செலுத்தியதன் பின் இயைபுடைய பிரதேச பொறியியலாளர் அவர்களுக்கு (அட்டவணையின் 09ஆம் நிரலில் குறிப்பிடப்பட்டுள்ளதன் பிரகாரம்) எழுத்து மூல விண்ணப்பமொன்றைச் செய்வதன் பேரில் எந்தவொரு வளமுள்ள விலைமனுதாரர் அல்லது அவரது அதிகாரபூர்வ பிரதிநிதி முழுமையான விலைமனு ஆவணத் தொகுதியொன்றைக் கொள்வனவு செய்யலாம்.
06. முத்திரைக் குறி பொறிக்கப்பட்ட நகல் பிரதிகளுடனான விலைமனுக்களை வெவ்வேறான கடித உறைகளில் இட்டு கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் செயற்றிட்டத்தின் பெயரைக் குறிப்பிட்டு இரு நகல்களில் தயாரிக்கப்பட்ட விலைமனுக்களை இயைபுடைய் அலுவலகத்திற்கு (அட்டவணையின் 09ஆம் நிரலில் குறிப்பிடப்பட்டுள்ளதன் பிரகாரம்) 2023-05-30ஆம் திகதி மு.ப. 10.30 மணி அல்லது அதற்கு முன் கிடைக்கச் செய்தல் வேண்டும். விலைமனுக்கள் ஏற்றுக்கொள்வது நிறைவடைந்த உடனடுத்து அவ்வேளையிலேயே விலைமனுதாரர்கள் அல்லது அவர்களின் தெரிவு செய்யப்பட்ட பிரதிநிதிகள் முன்னிலையில் விலைமனுக்கள் திறக்கப்படும். பிந்திக் கிடைக்கும் விலைமனுக்கள் நிராகரிக்கப்படும்.
07. சகல விலைமனுக்களுடனும் விலைமனுப் பிணை முறி அல்லது ரொக்கப் பண வைப்பு பற்றுச்சீட்டு இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும். (அட்டவணையின் 07ஆம் நிரலில் குறிப்பிடப்பட்டுள்ளதன் பிரகாரம்). செல்லுபடிக் காலமானது விலைமனு ஆவணத்தின் பிரகாரமாகவிருத்தல் வேண்டும்.
08. விலைமனுதாரர்கள் 1987இன் 3ஆம் இலக்க பொது ஒப்பந்தங்கள் சட்டத்தின் கீழ் பதிவு செய்து கொண்டிருத்தல் வேண்டும் என்பதுடன் பதிவுச் சான்றிதழைச் சமர்ப்பித்தல் வேண்டும். (அட்டவணையின் 05ஆம் நிரலில் குறிப்பிடப்பட்டுள்ளதன் பிரகாரம்)

**பிரதிப் பிரதான செயலாளர் (பொறியியல்),**
**பொறியியல் பணியகம் (மே.மா),**
**5ஆம் மாடி, 204, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை,**
**பத்தரமுல்ல.**

2023-05-15
**தொலைபேசி: 0112-092504**

ஆசிய கிண்ண உரிமையை இழந்தால்

# உலகக் கிண்ணத்தை 'புறக்கணிப்பது' குறித்து பாகிஸ்தான் கடும் எச்சரிக்கை



ஆசிய கிண்ணத்தை நடத்தும் உரிமையை பாகிஸ்தான் இழந்தால் இந்த ஆண்டின் உலகக் கிண்ணத்தை பாகிஸ்தான் புறக்கணிக்க அதிக வாய்ப்பு உள்ளதாக பாகிஸ்தான் கிரிக்கெட் சபை தலைவர் நஜாம் செதி எச்சரித்துள்ளார்.

அரசியல் பதற்றத்திற்கு மத்தியில் ஆசிய கிண்ணத் தொடருக்காக இந்திய அணி பாகிஸ்தான் வர மறுத்துள்ள நிலையில் தொடரை நடத்துவதில் தொடர்ந்து சிக்கல் நீடித்து வருகிறது.

இந்திய போட்டிகளை பொது மைதானத்திலும் ஏஞ்சிய ஆட்டங்களை பாகிஸ்தானிலும் நடத்தும் வகையில் கலப்பு முறையில் ஆசிய கிண்ணத் தொடரை நடத்த பாகிஸ்தான், ஆசிய கிரிக்கெட் கௌன்சிலுக்கு பரிந்துரை செய்துள்ளது.

எனினும் இது தொடர்பில் இந்தியா இதுவரை உத்தியோகபூர்வமாக எந்த முடிவையும் அறிவிக்காத நிலையில் அந்த நாடு ஒட்டுமொத்த தொடரையும் பாகிஸ்தானுக்கு வெளியில் நடத்த விரும்புவதாக தெரியவருகிறது.

இது இந்த ஆண்டு இறுதியில் இந்தியாவில் நடைபெறவுள்ள ஒருநாள் உலகக் கிண்ணப் போட்டி மற்றும் 2025 ஆம் ஆண்டு பாகிஸ்தானில் நடைபெறவிருக்கும் சம்பியன்ஸ் கிண்ணப் போட்டிகள் தொடர்பில் இரு நாடுகளுக்கும் இடையே பிரச்சினையை ஏற்படுத்தியுள்ளது.

“அவர்கள் ஒட்டுமொத்தப் போட்டிகளையும் பொது இடம் ஒன்றில் நடத்த விரும்புகிறார்கள். இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டு சபை சிறந்த, அறிவுபூர்வமான முடிவு ஒன்றை எடுக்க வேண்டும். அப்போதே எம்மால் பிரச்சினை இன்றி முன்னோக்கிச் செல்ல முடியும்.

நாம் ஆசிய கிண்ணம் மற்றும் உலகக் கிண்ணத்தை புறக்கணித்து, பின்னர் இந்தியா சம்பியன்ஸ் கிண்ணத்தை புறக்கணிக்கும் வகையிலான சூழலுக்கு இந்தியா முடிவெடுக்கக் கூடாது. இது பெரும் குழப்பத்திற்குக் காரணமாகிவிடும்” என்று சூம் தொழில்நுட்பம் ஊடாக வழங்கிய பேட்டியில் நஜாம் செதி குறிப்பிட்டுள்ளார்.

## இந்திய டி20 தொடரில் ஆட அஹ்மத் தெரிவு



இந்திய டி20 கிரிக்கெட் சம்மேளனத்தினால் நடத்தப்படும் 17 வயதுக்குட்பட்ட தொடரில் டைடன்ஸ் ஜூனியர் அணியில் விளையாட பேருவளை, அல்–ஹுமைஸரா தேசிய பாடசாலையின் 13 வயதான அஹ்மத் ஹிஷாம் தெரிவாகியுள்ளார்.

இந்தியாவின் பஞ்சாபில் எதிர்வரும் 20ஆம் திகதி ஆரம்பமாகும் இந்தத் தொடரில் இந்தியாவின் 13 அணிகளுடன் இலங்கை, பங்களாதேஷ் மற்றும் நேபாளத்தின் தலா ஒரு அணி பங்கேற்கவுள்ளன.

சகலதுறை வீரராக செயற்படும் அஹ்மத் ஷிஹாம் இந்த அணியின் உப தலைவராகவும் உள்ளார். இவர் அண்மையில் நடைபெற்ற அல்–ஹுமைஸரா மற்றும் பயாகலை, பண்டாரநாயக்க பாடசாலை அணிக்கு எதிரான ஒருநாள் போட்டியில் ஆட்டநாயகனாக தெரிவு செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

அஹ்மத் ஹிஷாம் கொழும்பு சி.சி.சி, களுத்துறை என்.ஆர் அகடமி மற்றும் அளுத்கம ஆர்.சி. அகடமிகளுக்காக போட்டிகளில் விளையாடி வருகிறார். இவர் களுத்துறை மாவட்ட 15 வயதுக்கு உட்பட்ட அணியிலும் இடம்பெற்றுள்ளார்.

## கிழக்கில் பூப்பந்து பயிற்சி

காரைதீவு குறூப் நிருபர்



உலகத் தமிழர் பூப்பந்தாட்டப் பேரவையின் கிழக்கு மாகாணத்திற்கான பூப்பந்தாட்ட பயிற்சிப்பட்டறை முதல்முறையாக அம்பாறை மாவட்டத்தில் இடம்பெற்றது.

இப் பயிற்சி முகாமின் பயிற்றுவிப்பாளராக உலக தமிழர் பூப்பந்தாட்ட பேரவையின் இலங்கைக்கான இணைப்பாளராக உள்ள அன்ரனி ஜெயகாந்தன் செயற்பட்டார். இதில் அம்பாறை மற்றும் மட்டக்களப்பு மாவட்டத்தைச் சேர்ந்த வீர வீராங்கனைகள் கலந்துகொண்டனர்.

இப் பயிற்சி முகாமின் போது கனடா நாட்டின் எல்சன் பூப்பந்தாட்டக் கழகத்தினால் வீரர்களுக்குத் தேவையான விளையாட்டு உபகரணங்கள் வழங்கப்பட்டன.

## டைடன்ஸ் 'பிளே ஓப்' தகுதி



சன்ரைசஸ் ஹைதராபாத் அணியை 34 ஓட்டங்களால் தோற்கடித்து வெளியேற்றிய நடப்புச் சம்பியன் குஜராத் டைடன்ஸ் அணி இந்திய பிரீமியர் லீக் தொடரின் பிளே ஓப் சுற்றுக்குத் தகுதி பெற்றது.

அஹமதாபாத்தில் கடந்த திங்கட்கிழமை நடைபெற்ற போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாட பணிக்கப்பட்ட டைடன்ஸ் அணிக்கு சுப்மன் கில் தனது முதல் ஐ.பி.எல் சதத்தை பெற்றார். 58 பந்துகளுக்கு முகம் கொடுத்த அவர் 101 ஓட்டங்களை விளாசினார்.

இதன்மூலம் அந்த அணி 20 ஓவர்களுக்கும் 9 விக்கெட்டுகளை இழந்து 188 ஓட்டங்களை பெற்றது. புவனேஷ்வர் குமார் 5 விக்கெட்டுகளை வீழ்த்தியமை குறிப்பிடத்தக்கது.

இந்நிலையில் பதிலெடுத்தாடிய ஹைதராபாத் அணி 20 ஓவர்களுக்கு 9 விக்கெட்டுகளை இழந்து 154 ஓட்டங்களையே பெற்றது. மொஹமட் ஷமி மற்றும் மொஹித் ஷர்மா தலா 4 விக்கெட்டுகளை பதம்பார்த்தனர்.

இந்த வெற்றியுடன் ஐ.பி.எல் புள்ளிப் பட்டியலில் முதலிடத்தை உறுதி செய்த டைடன்ஸ் அணிக்கு மே 28 ஆம் திகதி நடைபெறவுள்ள இறுதிப் போட்டிக்கு முன்னேற இரு வாய்ப்புகள் கிடைக்கின்றமை குறிப்பிடத்தக்கது.

ரக்பி லீக் உலகக் கிண்ணம்

## போட்டியை நடத்துவதில் இருந்து பிரான்ஸ் விலகல்



நிதியை காரணம் காட்டி ரக்பி லீக் உலகக் கிண்ணத்தை நடத்துவதில் இருந்து பிரான்ஸ் விலகியுள்ளது.

வட அமெரிக்காவில் இந்தப் போட்டியை நடத்தும் திட்டம் கைவிடப்பட்ட நிலையிலேயே போட்டியை நடத்தும் உரிமை பிரான்ஸுக்கு வழங்கப்பட்டது.

பிரான்ஸ் அரசு நிர்ணயித்த நிதி அளவுகோலை பூர்த்தி செய்ய போட்டி ஏற்பாட்டாளர்களால் முடியாத நிலையில், போட்டியை நடத்துவதில் நிதிப் பற்றாக்குறை ஏற்படும் அச்சுறுத்தல் உருவானது.

இந்த உலகக் கிண்ண போட்டி வரும் 2025 ஒக்டோபர் மற்றும் நவம்பரில் நடத்த ஏற்பாடாகி உள்ளது. இந்நிலையில் வரும் ஜூலை மாதம் நடைபெறவுள்ள சபைக் கூட்டத்தில் வேறு தேர்வுகள் குறித்து ஆலோசிக்கப்போவதாக சர்வதேச ரக்பி லீக் தெரிவித்துள்ளது.

2022ஆம் ஆண்டு இங்கிலாந்தில் நடைபெற்ற ரக்பி லீக் உலகக் கிண்ணத்தின் ஆடவர் பிரிவில் அவுஸ்திரேலியாவும் பெண்கள் மற்றும் சக்கர நாற்காலி பிரிவுகளில் இங்கிலாந்தும் சம்பியன் பட்டத்தை வென்றன.

## கிழக்கு மாகாண போட்டிக்கு அஸ்–ஸிறாஜ் அணி தகுதி

ஒலுவில் கிழக்கு தினகரன் நிருபர்



அக்கரைப்பற்று கல்வி வலய மட்ட கிரிக்கெட் சுற்றுப் போட்டியில் அக்கரைப்பற்று அஸ்–ஸிறாஜ் மகா வித்தியாலய அணி வெற்றியீட்டி கிழக்கு மாகாண மட்டப் போட்டிக்கு தெரிவாகியுள்ளது.

அக்கரைப்பற்று கல்வி வலய உதவி கல்விப் பணிப்பாளர் ஏ.எம். ஜெமீல் தலைமையில் பாலமுனை பொது விளையாட்டு மைதானத்தில் நேற்று முன்தினம் (15) நடைபெற்ற இறுதிப் போட்டியில் அக்கரைப்பற்று அஸ் –ஸிறாஜ் மகா வித்தியாலய அணியினரும், அக்கரைப்பற்று தேசிய பாடசாலை அணியினரும் மோதினர்.

இதில் முதலில் துடுப்பெடுத்தாடிய அஸ்–ஸிறாஜ் அணி 5 ஓவர் நிறைவில் 50 ஓட்டங்களைப் பெற்றது. பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய தேசிய பாடசாலை அணி 5 ஓவர்களுக்கும் 44 ஓட்டங்களைப் பெற்றது. இதனால் அஸ்–ஸிறாஜ் அணியினர் 6 ஓட்டங்களால் வெற்றி பெற்றனர்.

## புளோரன்ஸ் டயமண்ட் லீக்கில் பங்கேற்கிறார் யுபுன் அபேகோன்



இலங்கை குறுந்தூர ஓட்ட வீரர் யுபுன் அபேகோன் எதிர்வரும் ஜூன் 2 ஆம் திகதி இத்தாலியின் புளோரன்ஸில் நடைபெறவுள்ள 100 மீற்றர் டயமண்ட் லீக் போட்டியில் பங்கேற்கவுள்ளார்.

இதில் தற்போது உலக சம்பியனாக உள்ள பிரெட் கெர்லி, ஒலிம்பிக் சம்பியன் லமொன்ட் மார்செல் ஜகப்ஸ் மற்றும் பொதுநலவாய சம்பியன் பெர்டினன்ட் ஓமன்யாலா ஆகிய முன்னணி வீரர்களுடன் அபேகோன் போட்டியிடவுள்ளார்.

தவிர முன்னாள் உலக சம்பியன் யொஹான் பிளக், முன்னாள் உள்ளக சம்பியன் ட்ரைவோன் ப்ரோமல் மற்றும் பொதுநலவாயப் போட்டியில் வெள்ளிப் பதக்கம் வென்ற அகனி சிம்பினே ஆகியோரும் புளோரன்ஸ் போட்டியில் பங்கேற்கவுள்ளனர்.

அபேகோன் இலங்கையின் முதலாவது மற்றும் ஒரே வீரராகவே டயமண்ட் லீக் போட்டியில் பங்கேற்று வருகிறார். 2021 ஆம் ஆண்டு முதல் முறை இந்தப் போட்டியில் பங்கேற்ற அவர் அது தொடக்கம் 2 சூரிச் டயமன்ட் லீக் உட்பட 5 ஓட்டங்களில் பங்கேற்றுள்ளார்.

அபேகோன் கடந்த ஆண்டில் ஆடவர் 100 மீற்றர் ஓட்டப்போட்டியை 10 விநாடிகளுக்குக் குறைவாக ஓடி முடித்த முதல் இலங்கை வீரராக பதிவானார் என்பது குறிப்பிடத்தக்கது.

## உலகில் மரண தண்டனை 5 ஆண்டுகளில் அதிகரிப்பு



உலகில் கடந்த ஐந்து ஆண்டுகளில் அதிகபட்சமாக கடந்த ஆண்டில் சுமார் 883 பேர் மீது மரண தண்டனை நிறைவேற்றப்பட்டிருப்பதாக சர்வதேச மன்னிப்புச் சபை குறிப்பிட்டுள்ளது. இதில் போதைக் கடத்தல் குற்றங்களுக்கு மரண தண்டனை பயன்படுத்துவது குறித்த கவலை அதிகரித்திருப்பதாகவும் அது தெரிவித்தது.

எனினும் இந்த எண்ணிக்கையில் சீனாவில் நிறைவேற்றப்பட்டதாக நம்பப்படும் பல்லாயிரம் மரண தண்டனைகள் உள்ளடக்கப்படவில்லை. எனினும் 2021 உடன் ஒப்பிடுகையில் மரண தண்டணை 50 வீதத்திற்கு மேல் அதிகரித்திருப்பதாக சர்வதேச மன்னிப்புச் சபையின் ஆண்டு அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

சீனாவுக்கு வெளியில் உலகில் அறியப்பட்ட மரண தண்டனைகளில் சுமார் 90 வீதமானவை மத்திய கிழக்கு மற்றும் வட ஆபிரிக்காவைச் சேர்ந்து வெறும் மூன்று நாடுகளில் பதிவாகியுள்ளன.

இதில் ஈரானில் கடந்த ஆண்டில் 576 மரண தண்டனைகளும், சவூதி அரேபியாவில் 196 மரண தண்டனைகளும் எகிப்தில் 24 மரண தண்டனைகளும் நிறைவேற்றப்பட்டுள்ளன.

சவூதியில் 30 ஆண்டுகளில் இல்லாத அளவுக்கு மரண தண்டனை அதிகரித்திருப்பதாக மன்னிப்புச் சபை சுட்டிக்காட்டியுள்ளது. குறிப்பாக சவூதியில் ஒரே நாளில் 81 பேருக்கு மரண தண்டனை நிறைவேற்றப்பட்டதாக மன்னிப்புச் சபை வெளியிட்ட அறிக்கையில் குறிப்பிடப்பட்டது.

கடந்த ஆண்டு நிறைவேற்றப்பட்ட மரண தண்டனைகளில் 40 வீதமானவை போதைக் கடத்தலுடன் தொடர்புபட்டவை என்பது குறிப்பிடத்தக்கது.

# சர்வதேச செய்திகள்

## உக்ரைனிய தலைநகரில் ரஷ்யா மீண்டும் சரமாரி வான் தாக்குதல்



உக்ரைன் தலைநகர் கீவ் மீது இந்த மாதத்தில் எட்டாவது முறையாகவும் ரஷ்யா கடும் வான் தாக்குதல்களை நடத்தியுள்ளது. இந்தத் தாக்குதல்களில் மூவருக்குக் காயம் ஏற்பட்டுள்ளது.

நகருக்கு மேலால் வந்த ஏவுகணைகள் மீது வான் பாதுகாப்பு முறை சூடு நடத்தும் வீடியோ சமூக ஊடகத்தில் வெளியாகியுள்ளது. இடைமறிக்கப்பட்ட ஏவுகணை பாகங்கள் விழும் ஆபத்து இருப்பதால் மக்கள் ஜன்னல்களில் இருந்து ஒதுங்கி இருக்கும்படி அரசு எச்சரிக்கை விடுத்துள்ளது.

சில ரொக்கெட் பாகங்கள் நகரின் மிருகக்காட்சி சாலை உட்பட மத்திய மாவட்டங்களில் விழுந்ததாக நகர மேயர் விடாலி கிளிச்கோ தெரிவித்துள்ளார்.

வான் தாக்குதல் எச்சரிக்கை உக்ரைன் நேரப்படி நேற்று அதிகாலையில் விடுக்கப்பட்ட நிலையில் இரண்டு மணி நேரத்தின் பின்னர் அது விலக்கிக் கொள்ளப்பட்டது.

ஆளில்லா விமானங்கள் மற்றும் ஏவுகணைகள் கொண்டு இந்த சிக்கலான தாக்குதல் நடத்தப்பட்டிருப்பதோடு இந்தத் தாக்குதலின் தீவிரம் அசாதாரணமாக இருந்தது என்று கீவ் நகர அதிகாரி ஒருவர் விபரித்துள்ளார்.

உக்ரைன் ஜனாதிபதி வொலோடிமிர் செலென்ஸ்கி ஐரோப்பிய சுற்றுப்பயணத்தை பூர்த்தி செய்து நாடு திரும்பிய நிலையிலேயே இந்தத் தாக்குதல் இடம்பெற்றுள்ளது. அவரது சுற்றுப்பயணத்தில் ரோம், பெர்லின், பாரிஸ் மற்றும் லண்டன் கூட்டணிகள் பெரும் அளவான இராணுவ உதவிகளை வழங்க உறுதி அளித்தமை குறிப்பிடத்தக்கது.

கடந்த ஆண்டு பெப்ரவரி 24 ஆம் திகதி உக்ரைன் மீது ரஷ்யா படையெடுத்தது தொடக்கம் நூற்றுக்கணக்கான பொதுமக்கள் கொல்லப்பட்டதோடு மோதல்களால் பல நகரங்களும் அழிவுக்கு உள்ளாகி உள்ளன. சுமார் 8.2 மில்லியன் உக்ரைனியர்கள் ஐரோப்பாவில் அகதிகளால் பதிவாகி இருப்பதோடு இவர்களில் 2.8 மில்லியக் பேர் ரஷ்யாவில் அடைக்கலம் பெற்றுள்ளனர்.

## நீருக்கடியில் இருந்து சாதனை முறியடிப்பு



நீருக்கு அடியில் அதிக காலத்தை செலவிட்டு அமெரிக்க ஆய்வாளரான ஜோசப் டிடுரி சாதனை படைத்துள்ளார்.

அமெரிக்காவின் புளோரிடா மாநிலத்தின் கீ லார்கோவில் உள்ள களப்பில் 30 அடி ஆழத்தில் அவர் 74 நாட்களுக்கு மேல் செலவிட்டுள்ளார். அவர் தனது செயற்பாட்டை இன்னும் நிறுத்தவில்லை. கடலுக்கடி விடுதியில் அவர் குறைந்தது 100 நாட்கள் இருக்க திட்டமிட்டுள்ளார்.

முன்னதாக 2014 ஆம் ஆண்டு இதே களப்பு விடுதியில் இரு பேராசிரியர்கள் 73 நாட்கள் செலவிட்டதே சாதனையாக இருந்தமை குறிப்பிடத்தக்கது.

நீர்மூழ்கிக் கப்பல் போன்று இந்த விடுதியில் அதிகரித்த நீருக்கடி அழுத்தத்தை சரிசெய்ய முடியாது என்பது குறிப்பிடத்தக்கது.

## மோக்கா சூறாவளி: மியன்மாரில் 41 பேர் பலி



மியன்மாரின் ரகினே மாநிலத்தில் சூறாவளி தாக்கிய கிராமங்களில் உயிரிழந்தோர் எண்ணிக்கை 41 ஆக அதிகரித்துள்ளது.

மணிக்கு 195 கிலோமீற்றர் வேகத்தில் காற்று வீசிய மொக்கா சூறாவளி கடந்த ஞாயிற்றுக்கிழமை தாக்கியதில் மியன்மார் மற்றும் பங்களாதேஷில் பெரும் சேதங்களை ஏற்படுத்தியுள்ளது. “17 பேர் உயிரிழந்திருப்பதை எம்மால் உறுதி செய்ய முடியும்” என்று பு மா கிராமத்தின் நிர்வாகியான கார்லோ ஏ.எப்.பி செய்தி நிறுவனத்திற்கு தெரிவித்துள்ளார். “நூற்றுக்கும் அதிகமானோர் காணாமல்போன நிலையில் மேலும் உயிரிழப்புகள் பதிவாகக் கூடும்” என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

அருகில் இருக்கும் கவுங் டொக் கார் கிராமத்தில் உயிரிழந்தவர்கள் எண்ணிக்கை 24 ஆக அதிகரித்துள்ளது.

இங்கு ரொஹிங்கிய முஸ்லிம்கள் மீதான வன்முறைகள் இடம்பெற்ற கிராமங்களே பாதிக்கப்பட்டுள்ளன.

இந்த சூறாவளி பங்களாதேஷ் ரொஹிங்கிய அகதி முகாம்களிலும் மியன்மார் துறைமுக நகரான சிட்வேயிலும் கடும் பாதிப்புகளை ஏற்படுத்தி இருப்பதாக அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன. மோக்கா சூறாவளியால் பாதிக்கப்பட்ட நாடுகளுக்கு அவசரமாக உதவி வழங்க வேண்டும் என்று ஐக்கிய நாட்டு சபை வலியுறுத்தியுள்ளது.

இப்பத்திரிகை அஸோஸியேட்டட் நியூஸ் பேப்பர்ஸ் ஒப் சிலோன் லிமிடட் கம்பனியரால் கொழும்பு இல. 35, டி ஆர். விஜயவர்தன மாவத்தையிலுள்ள லேக் ஹவுஸில் 2023 மே மாதம் 17ம் திகதி புதன்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது.